பின்னும் விருத்தம்

சினத்தவச்ர வாகுவொடுஞ் சூழ்ந்து வந்த
தேர்பரிகள் கரிமுதலா யிரத்தைந் நூறு
கனத்தவெள்ளப் படையதனைக் கண்டு வீரன்
கதிரவன்றோர் குடகடலிற் படியு முன்னே
முனைத்தபடை யனைத்தையுமன் முடிக்கா விட்டால்
மூர்த்திசுந்த ரக்குமர னாமநாதன்
றனக்கடிமை யல்லனெனச் சபதங் கூறித்
தறுக்கினன் படைபுகுந்து நொறுக்கி னானே (உக)

(யஅ) தீபதை சந்தத்தரு - இராகம் - மத்யமாவதி—ஆதிதாளம்.

(க) மதித்தானே - வச்ரமுகாசுரன்
முனைத்தனுப்பிய - சினப்படையானிடை
குதித்தானே - விக்ரமவாகுவன்
குதித்திடும்பொழு - ததிர்த்திரதமொடு
பரிகள்கரிகள்பல - படைகள் குடைகளுயர்
பத்திடுதிடென - உததிகள்போலவே

(உ) வளைத்தாரே - இக்கணமேயுனை
வதைத்தெமதுகுறை - முடித்திடுவெனு
விளைத்தாரே - திக்குகளண்டமும்
வெடித்திடவேகடு - கடுத்துடனேபல
வெடிகுரலசுரர்கள் - துடிகொடுசடுதியி
லிடியொடுபொழிமுகி - லெனவெகுகணைகளைத்

(ங) தொடுத்தாரே - பலத்தவீரனு
டலத்துதிரவெள - மெழச்செய்தருகினி
லடுத்தாரே - அடுத்தசூரரை
யடக்கியுயிர்முடி - வளைத்துமுழுதுகினி
லடிகள்தடதடென - உதைகள்திமுதிபென
அறைகள்பறைகளென - அதிர்சொலிவாகுவன்

(ச) இடித்தானே - சங்கையிலசுரர்கள
கனத்திலெயிறுகள் - தெறித்தலறிவிழ
முடித்தானே - கண்களினிவெளி
விலங்கியுயிர்நில - கலங்கிமிகுபடை
பிடரியிலடிபட - மிடறுகளொடிபடப்
பிணங்கள்குவிய - ரணமுகங்கள்கவியக்

(௫) கண்டாரே - மந்திரிகுமாரர்கள்
கனத்தபடையொடு - கனைத்திரதமிசைக்
கொண்டாரே - செங்கையில்வார்சிலை
வலச்செவியினுற - வளைத்துவிசையுடன்
உரமுமவுலியமணி - சிரமுமெழின்மருவு
புரமுமெழுவனைய - புயமுமுதிரமொழுத்
(௬) தொகுப்பாகவே - முனைபெருகணைகொடு
நிறைத்துடம்பினை - வகுத்திடலுமிவ
னகத்தேயுமை - யவள்தருகுமரனை
நினைத்தழுந்திடவே - துளைத்த கணைகளை
உதறியுதறியொரு - பழுமரமதையுகு
கதிகொடுகரதல - மதிலடிவேரொடு
(௭) பறித்தேகரி - பரியிரதங்களை
நொறுக்கியசுரர்கள் - முடிசிரந்தனை
முறித்தேபெரு - மண்ணுலகம்புக
வுதைத்தவனிமிசை - சிதைத்திடலுமவர்
நிணமுமுதிரமுமூ - குடலுமுடலுமொரு
நதியெனவேபெருகு - அதிருடனேடவே
(௮) பார்த்தானே - வச்சிரவாகுவ
னழற்பொறிவிழிய - லெழச்சடலமிக
வேர்த்தானே - சிக்கெனவீரனைப்
பிடித்தெனவசன்முன் - விடுத்திடுமெனென
விருதுசொலியவர் - சிலைகொடுபலகணை
விடயிவனதையெதிர் - துகள்படவவனது
(௯) தெரிந்தானே - தெரிந்துடன்குறி
வைத்துமுனைத்தொரு - மத்தயுதங்கணை
சொரிந்தானே - சொரிந்தபின்கணை
முற்றுமெரித்திட - ஞற்றவிரைந்திவ
னுரமதிலதுபட - சரமதிலதிரொடு
குருதிகள்பெருகிட - வெருவியெமனும்
(௰) மொந்தானே - சிந்தைதளர்ந்துமெ
ளிந்துகந்தனை - இன்றுநிசொலியெ
ழுந்தானே - அந்தரந்திலு
யர்ந்தமணிரத - முந்தவிடுப
உதறவல்லவனுயிர் - சிதறப்படிபுர
உயரிரதமதனி - லசுரனும்பறிபோ

(௰௩) பல்லாயிர - மம்புகளானவை
பொழிந்திடப்பினு - மெழுந்துடனேமிகு
வல்லாளன - வன்பரிதேர்தனை
விசும்பினிற்செல - எறிந்திடலுமவன்
முடிகள்பொடிகள்பட - அடிகள்கொடிகளொடு
படிகள்பதுமைதிகழ் - முடிரதபதுகெட

(௰௪) நின்றேபுவி - மீதுநடந்தய
னுடைந்துமிகுதுய - ரடைந்திவனைவிட்டே
னென்றேமுனை - வாளையகங்கையி
லெடுத்துடனருகி - லடுத்திடலுமிவன்
அடலரியெனவதி - விரைவொடுகூர்மழைசை
கிறுகிறெனஇடையில் - மருவியவாளதை

(௰௫) எடுத்தோர்பது - சிரமொடுதோளையு
மரிந்துபூமியி - லெறிந்திடலுமுயிர்
விடுத்தேயவ - னவனியில் வீழலும்
எழுந்துவானவர்கள் - பறந்தவுணர்பதி
அவையிலமுதுனது - தவமகனும்பரவில்
அவமேபோடரிலுயிர் - தவறினனென்றனரே

பிறகு வீரவாகுதேவர் வீரமகேந்திர நகரினின்றும் திரும்பி வருகையில் இலங்கையில் யாளிமுகனைக் கொன்று திருச்செந்தூர் வந்து குமாரக்கடவுளிடம் நடந்ததைச் சொல்லல.

விருத்தம்

இகல்வச்ர வாகுவன்மாய்ந் ததுகேட்டுச சூரன்மன மிடிந்தானப்பா
லெழில்வீர வாகுமயேந் திரத்தைவிட் டய்யனைக்காண வெண்ணங்கொண்
டகலிலங்கைக் கோட்டையில்வந் திளைப்பாறும்பொழுதிலந்த வரணைக்காக்கு
மாளிமுகன் கண்டுசினங் கொண்டசுரப் பெரும்படைக ளயுதஞ் சூழ
நகரழித்த வீரனிவன் றனையாய்ப்பேனெனமறித்து நலிவு செய்த
நாற்படைக ளுடனவனு யிரந்தலைக ளையும்வாளால் நறுக்கி வீட்டி
யிருகடலைக் கடந்துசெந்தூர் வந்துமரர் புடைசூழ வீற்றிருக்கும்
வேற்கடம்பன் பதந்சிரசிற் றரித்திட்டா னடந்ததெல்லாம் விரித்திட்
[டானே. (௨௰)

(மகூ) கீர்த்தனம் இராகம் - ஸ்ரீ—திரிபுடைதாளம்.

பல்லவி.

கேளும்ஷண்முக நாதனே - உம்பர்குறைதீர்த்
தாளும்பொன்மலர்ப் பாதனே

அனுபல்லவி.

வானவுணரா - சாளும்வீரமா
யேந்திரநகர்சென்று - ராய்ந்ததையுமன்றய்க (கேளும்)

சரணங்கள்.

(க) சங்கஞ்சூழ்கடல்தாண்டி - லங்கைமுகப்பில்நின்று
தடுத்தவசுரரைக்கொன் - றடுத்தவனகர்சென்று
செங்கதிர்சூழ் கோட்டை - யுங்கொடித்தலங்கள்
செம்பொன்மணிமாட - முட்பரிகரிதேர்
தங்கியபட்டின - மெங்குஞ்சுற்றிசசிறைச
சாலைமறைந்தனுக் - கோலங்கொண்டிருந்தேன் (கேளும்)

(உ) வினைக்காவலர்கள்சயந் - தனைக்கட்டியடித்ததும்
மிக்கவேயவன்புலம் - பிக்கண்ணீர்வடித்ததும்
தனித்துநான்கண்டென்றன் - மகத்துவங்களெல்லாம்
சாற்றியவன்மனந் - தேற்றிச்சூரன்சிங்கா
சனத்தெதிர்வந்துநீ - யனுக்கிரகித்தசிங்கா
சனத்தைப்பணிந்துப - சரித்ததிலிருந்தேன் (கேளும்)

(௩) தருக்குடனேயாரென் - றுறுக்கியேயவன்சீற
சங்கதிகளைநானுள் - ளங்கைக்கனி போற்கூற
பொருக்கெனவெழுந்து - சயந்தன்சிறையொரு
போதும் விடேனென்று - மோதியெதிர்நின்று
மருட்டிவஞ்சன்செய்த - சரித்ரஞ்சொல்லவொரு
மாதஞ்செல்லுமந்தப் - பாதகன் செய்கையைக் (கேளும்)

(ச) கல்லிலடிக்கமுளை - மூகத்திலடித்தாற்போலே
காரியமாகவேசூ - ரூரன்றனக்கன்பாலே
சொல்லிய நன்மதி - செவிக்கொளாமன்மிகத்
துடித்தென்றனைக்கட்டிப் - பிடிக்கவென்றாயிரம்
வல்லவரக்கரை - விடுத்திடவேவந்து
மறித்திட்டவருயிர் - பறித்திட்டிங்குவந்தேன் (கேளும்)

வீரன் சொன்னதைக்கேட்டுக் குமரக்கடவுள் அசுரரைச் சங்கரிப்பதாகத் தீர்மானித்தல்; சூரன் அழிந்தநகரைப் புதிப்பிக்கச் செய்து சிங்காசனத்திருக்கையில் செந்தூர்க் கனுப்பிய தூதர்கள் திரும்பிவந்து குமரக்கடவுளது விசேஷங்களைக் கூறல்.

விருத்தம்.

துலங்கியமெய்த் துணைவனிது சொல்லக் கந்தன
சூர்முதலோர்க் கினிநாச கால மென்ன
விலங்கல்துழா யம்புயதோன் முதலான தேவ
ரனைவருங்கேட் டகமகிழ்ச்சி யடைந்தா ரப்பாற்
சலங்கொளவு ணனுமழிந்த நகரை வேறு
சதுர்முகனு லமைத்தணைமீ திருக்க முன்பு
நலங்கொள்செந் தூர்க்கனுப்பிய தன் தூ தரங்கு
நாடினு ருண்மையுரை யாடி னாரே (உக)

(உ௰) கீர்த்தனம். இராகம் - அசாவேரி—ஆதிதாளம்

பல்லவி.

செந்தினகரில - மர்ந்தகுமரன்றன்
செய்கையைக் - கேளும் ஸ்வாமி.

அநுபல்லவி.

அந்தரமுதலாய்த்தி - காந்தம யாவையுங்கட்டி
ஆண்டமிதமாயடல் - பூண்டவனேதென்கடற் (செந்தில்)

சரணங்கள்.

(க) ஒப்பிலாதநற்றுணை - மற்புயராமிலக்கத்
தொன்பதுவீரரணி தொடுக்கவே - மிக
அற்புதமாகியபூ - தப்பெருமபடையிரண்
டாயிரவெள்ளந்தொகை யடுக்கவே - இன்னம்
இப்படைத்தலைவர் - நூற்றெண்மராரவாரிக்க
இந்திரன் முதலானோரு - வந்துமனம்பூரிக்க
மெய்ப்பாய்விண்ணுலகுள்ளோர் - கற்பகங்களினுள்ள
வேரிமிகுத்துளைர் மாரிபொழிந்திட
ஆர்வமோடத்தனை ராசிமொழிந்திட (செந்தில்)

24

(௨) உக்ரதனுடன் முதலா - மிக்கவிகணங்க
ளுவந்துபணிவிடைசெய் தேத்தவே - நேரின்
பொற்கையிற் பிரம்புகொண் - டெக்களிப்பொடுநந்தி
புகழ்ந்து கட்டியஞ்சொல்லி வாழ்த்தவே - உயர்
சக்ரதரனோடயன் - மிக்க மகிழ்ச்சிகொள்ள
தவமுனிவரெல்லோருங் கவலையகன்றுதுள்ள
மைக்கருப்புண்ணிய [illegible]
மங்களதுங்கவி யங்கள்முழங்கவே
புங்கவரங்களி யுநகைவழங்கவே (செந்தில்)

(௩) தன்னுட தூதர்வந்து - சொன்னதை நீர்கேளாமற்
றடுத்ததறிந்துசினம் ஓங்கியே - ஒளிர்
பன்னிருசெங்கரத்திற் - பன்னிரு செங்கதிர்வேலும்
பதினொருவர்படையும் தாங்கியே - அதி
உன்னதக்கோலாகலப் - பொன்னின்பணித்தேரேறி
உலகை பரிநடத்தும் - வலவனுகிமுன் சிறி
இநகர்க்குப்பயண ஸங்நாகமாகப்படை
எடுத்துடசுராக ளடியொடுமடியவும்
அடுத்தவமரர்கள் படும்டர்விடியவும் (செந்தில்)

சூரன் மந்திராலோசனை ஸபையில முதலில அவன் மந்திரிமாகள் சொன்ன யோசனை.

விருத்தம்.

சேனன்முதற் றேவரிவவா றுரைக்கச சூரன்
சிங்கமுகன் றனையுமழைத் தன்றி ராவிற
ரனையமைச் சர்கண்முதலோர் தமையு நோக்கித்
தனிச்சிறுவன் விடுத்தவொரு தூத னிந்த
பேனகனை யழித்துநின்ற சேனை யாவும்
விரைவின்படித் தக்கணமே வெற்றி கொண்டு
போனதன்றிப் படையெடுத்து வருவா னும்ப்
போதென்று னினிச்செய்வ தேதென் றனே.

(உக) தீபதை. இராகம் - சங்கராபரணம்—ஆதிதாளம்.

(க) வண்மையாய் நமக்கிரு - கண்மணிபோலேவாய்த்த
மந்திரிமாரேசொல்லக் கேளும் - இனி
உண்மையாக மென்மேலும் - நன்மையுண்டாகும்படி
யோசனைகள் சொல்வீரெந் நாளும்

(உ) அரனிடத்திலழியா - வரம்பெற்றாயிரத்தெட்
டண்டங்களாண்டபுகழ் போச்சே - இன்று
துருமபுக்கனையனுதன் - அசுரரைக்கொன்றானென்று
தொல்லுலகம்பழிக்க லாச்சே

(ங) எதிர்த்தவனையப்போதே - வதைதககாமலிலங்கையில்
அதிவீரனுமடிந்த போதே - இதில்
முதற்கோணினால் முட்டக்கோணுமானதாலின்னம்
மோசம்வருமோ தெரியாதே

(ச) கூட்டத்திற்பரிதூக்கிப் போட்டதுமன்றிப்பின்னும்
குழியதுபறித்திட்டகதை போலே - பல
தாட்டிகவசுரரை - மடித்ததல்லாமற்கன
தனத்தோடேவரப்போரானினி மேலே

(ரு) என்றவுணன்சொல்லமுன் - னிருந்தமேதிக்கண்ணனங்
கெழுந்து நோயாளிமுன்பண் டிதன்றானே - வந்து
நின்றுதலைமாட்டினி - லழுதாற்போலவே சிந்தை
நெறுங்கிடச் சொல்வான்சில மொழிதானே

(சு) காக்கைக்கண்டமிருந்தாற் - பறக்கச்சேதெரியாதோ
கடிக்கிறேன் பொடிக்கிறேனென வோதும் - உன்றன்
சேர்க்கையசுரர்கூடிச் - சிறுவனைப்பிடியாமற்
செருவிலிறந்த அவமதி போதும்

(எ) தாக்கிக்கிரவுஞ் சத்தையுந் - தாரகனுடனெவன்
தனங்கள் முழுவதையுங் குலநாசம் - செய்த
வேற்குமரனுடன்று - நோக்கிச்சண்டைசெய்யாமல்
மிதமாயிருந்ததுன்றன் மதிமோசம்

(அ) வேதன்மாலரன்ஸாமி - நாதனாகவுந்தேவர்
வீரரெனவுருக்கொண் டல்லவோ - விண்ணோர்
ஆதங்கந்தீர்த்து நம்மை - அதஞ்செய்யவேண்டுமென
அவதரித்தாரதென்ன சொல்லவோ

(௯) மாட்சிமிகுமிலை - ஸாக்ஷிகுமரனென்று
மதிக்காமல்மதங்கொண்டு துள்ளாதே — நாளும்
நீட்சிபெறவுன்னர — சாக்ஷிநிலைக்கவென்றால்
நிலையானவென்மொழியைத் தள்ளாதே

(௰) என்னமேதிக்கண்ணனுஞ் - சொன்னவுடன் துர்க்குணன்
இகழ்ந்து நிந்தைமொழிகள் கூறியே — இந்த
நன்னியெலிவேட்டைக்குத் - தவிலடியோவிதற்கு
நான்போதுமென்றவனும் சீறியே

(௰௧) இனித்தாமதஞ்செய்யாமல் - தனித்துத்தாரந்தந்தாலிக்
கணத்திற்செந்தூரினிற்சென் றுடனே - சுற்றிச்
சினத்தமர்செய்துவேலன் - றனைச்சிறைவையாவிட்டால்
தீரனினியல்லவெனன் றுரைத்தானே

(௰௨) அருகினிலேயிருந்த - தருமகோபனவனுக்
கனுசாரியாகவெதி ரடுத்தானே - அடுத்
தெரியுநெருப்புடனே - காற்றுங்கூடினதுபோல்
எடுத்துயோசனைசொல்லத் தொடுத்தானே

(௰௩) மெள்ளவொருநகத்தாற் - கிள்ளுஞ்சிறுசெடிக்கு
வெட்டுங்கோடாலிதேடத் தோணுமோ - யார்க்கும்
என்னலாகியசிறு - பிள்ளையோடெதிர்ப்பதற்
கிதற்கோராலோசனையும் வேணுமோ

(௰௪) சரியல்லவிதுவென்று - தருமகோபனுஞ்சொல்லச்
சண்டனனவிசிங்கன் கூடியே - வே
றொருவரேதுக்கெங்களை - விரைவினிலனுப்பினால்
உறுத்துப்பகைவர்களைச் சாடியே

(௰௫) வீராதிவீரரையும் - நீறுநீறாய்மடித்து
வேலனைக்கட்டியுன்றன் சபைநேரே - கொண்டு
வாராவிடிலினிமேல் - பாரினிலெங்கள்பேரை
மாற்றியழைத்திடுவீ ரென்றாரே

(௧௬) கோட்டைவாசலிற்பதி - கொடுத்தநாயக்கருக்குக்
கூப்பிடுதூரஞ்சென்று சினத்தாலே - இரு
நாட்டுஞ்சிவந்துவீசை - துடித்ததுபோலமைச்சர்
நவின்றனர்கனசுர னெதிராலே

சூரன்மகன் பானுகோபன் மந்திரிகளை அமர்த்தித் தான் பேசுதல்

விருத்தம்.

படைக்குதவா தவன்பெருஞ்சே வகனென் றோதும்
பழமொழிபோ லமைச்சர்படைத் தலைவ ரெல்லாந்
துடித்திகற்கே சரிவலிமை அறிந்தி டாமற்
றுள்ளுநரிக் குட்டிகள்போ லிந்த வாறு
முடித்தலைவ னவுணனெதிர் படிக்கும் போதின்
முனைத்தெழுந்து பானுகோ பனுங்கூச் சிட்டு
வெடுத்தவரை நில்லுநில்லென் றதட்டி யோங்கி
விளம்பினன் றந்தைமுன்னே கிளம்பி னானே (உ௧)

(உ௨) கீர்த்தனம் இராகம் - மோகனம்—ஆதிதாளம்.

பல்லவி.

என்னயோசனையிங்கி - தென்னகூட்டமுமக்கு
ஏனிந்தமுகவாட்டம்

அநுபல்லவி.

உன்னினகர் திரண்டு - செக்குத்தள்ளினாற்போலே
ஒருவர்சொன்னபடிமற் - றொருவர் சொல்லாமன்மேலே (என்ன)

சரணங்கள்.

(க) கிளைத்திங்கேவிரைக்குப்பல் - முளைத்ததெனவமைச்சர்
கிளம்பிவாள்வீசிமிகத் துள்ளுவதும் - நீர்
வெளுத்ததெல்லாம் பாலென்று - மதித்தவரைவிடுத்து
வென்றிடலாமென்றொப்புக் கொள்ளுவதும் - வீண்
வளப்பதாகுமினிநாம் - களைத்திருக்ககூடாது
வட்டிவிழுமுன்காதம் - எட்டுநிந்தன்மையாந்தீது
தளத்துடன்போய்விரைவில் - வளைத்து நானெதிர்கிட்டிச்
சத்திதரித்திடு கைத்தலனைக்கைபி
டித்துணிடத்தில்வி டுத்திடுவேனிதற் (என்ன)

(உ) தடக்ரவுஞ்சனையுந்தா - ரகனையுங்கொன்றபோதென்
றனையங்கனுப்பாமலே கெடுத்தீரே - அப்பால்
அடுத்ததாதுவன்றனை மடித்திடாமலும்மக
ரழித்துமைந்தனைப்பறி கொடுத்தீரே - இனி
முடுக்கிவிரட்டியடியா னடிபடியாது
முனைத்தெழுந்தசெந்நீயை - அணைத்திடமுடியாது
உடற்பெரும்பூதர்தங்குர - கடற்கரைசெ[illegible]க்கத்
தொன்பதுவீரரு டன்பரிதேர்கரி
யும்படிமீதரு ளும்படிசெய்கிறேன் (என்ன)

(௩) மைந்தன்பானுகோபனென் - றென்றன்பேர்சொல்லிடில
மரர்க்கெல்லாம்பல்லுக் கிட்டுமே - யிரு
செந்தழலின்கிகைபோல் - உந்துமென்கைவாளேந்திட
திசையெங்குஞ்சென்று வெட்டுமே - ஒகோ
விந்தையிதென்னவொரு - துரும்பைத்தூணெனவெண்ணி
விழுந்தபல்முளையாத - குழந்தையிவனுரைநண்ணி
வந்திடுவானென்றுநீர் - சிந்தியாதேயும் நான்போய்
மைக்கருடாமுகி - லுக்கிணையாக
மிகக்கணைதூறிமொ றுக்கிடுமே பார்தற் (சென்ன)

இவ்விதம் வீரங்கூறிய பானுகோபன், அவனுக்குப் பின்கிள ம்பின இரணியன், அக்கிமுகன் முதலிய சூரன் புதல்வர்களை அமர்த்தி அவனுக்குத் தம்பிசிங்கமுகன் நற்புத்தி கூறல்.

விருத்தம்.

மனத்திறஞ்சேர் கதிர்ப்பகைவ னிங்கு துரைக்க
மற்றொருசே யிரணியன்கேட் டையா நான்போய்
இனத்துடனே பகைவருயிர் குடிப்பே னென்றான்
எரிமுகவ னெழுந்தவனை யமர்த்தி யான்போய்க்
கனத்தபடை களைக்கணத்தின் முடிப்பே னென்னக்
காரியமீ தல்லவண்ணு வுனக்கி தெல்லா
மனர்த்தமெனச் சிங்கமுகன் சூரனைப் பார்த்
தடுத்திட்டா னிதிசொல்லத் தொடுத்திட் டானே. (உ௬)

(உ௬) கீர்த்தனம். இராகம் - பைரவி—ஆதிதாளம்.

பல்லவி.

சரவணபவன்பகை - ஒருபோதுமினிநம்மால்
சகித்திட முடியாதண்ணு.

அனுபல்லவி

அரன்திருநுதற்கனற் – பொறியெழுந்துகங்கையி
லற்புதவடிவாக – உற்பவித்த ஷண்முக (சரவண)

சரணங்கள்.

(௧) பஞ்சகர்த்தாவும்பரா சக்தியுஞ்சேர்ந்துகண்ணி
பரிபூர்ணவடிவாகத் திருவவதாரம்பண்ணி
அஞ்சலென்றுவானவர்க ளபயங்கொடுத்துமண்ணி
லாறுமுகத்தோடதி வீரங்கொண்டதையெண்ணி
அஞ்சியாண்மை செலுத்தாமலே வீராவேசம்
அடுத்து நல்லறிவையுங் கெடுத்ததுரோசப்
பஞ்சியின்னம் வளர்ந்தால் விளைந்திடுமோசம்
வேந்தனேநங்குடிக்கு நேர்ந்திடும்நாசம்
பரித்தமர்ந்து பகர்ந்திடுமென்மொழி
கருத்துவந்து சயந்தன் விலங்கினை
முறித்தெறிந்து டனிந்திரனோடனு
சரித்திருந்திட வேணுமலாதினிச (சரவண)

(௨) விரைந்துகவை யோங்கினால் சிரந்தனிலடிரெண்டு
விழுமென்றெண்ணுமே லேநாம் முழுமோசம்போனோம்பண்டு
அரன்றனைநோக்கிக்கடுந் தவஞ்செய்ததினால்விண்டு
அழியாவரம்பெற்றபோ திழிவானகுதொன்றுண்டு
முருங்கெதயிற்றுமையன்றித் தரணியினமைவெல்ல
முடியாதென்றசொல்ல கடந்தெரியாமனல்ல
வரந்தனைப்பெற்றோமென லிருந்தனை யென்னசொல்ல
பற்றந்தச்சக்திதானே உற்றுநங்குலங்கெல்ல
மலர்க்கரந்தனில் வேலுருவாகியே
ஜொலித்தெழுந்த சூராதியிலாமலே
தொலைத்திடும்படி பூதர்கள்வீரரோ
டலைத்தடங்கரை வாயினிலெய்திய (சரவண)

(௩) செல்லன்சொல்லுக்கஞ்சானென் றெல்லோருஞ்சபைமீது
செப்பியவார்த்தையிங்கோ ருப்பிற்குமுதவாது
ஒல்லையிற்குறள் நூறூர்கொளுத்து மல்லாது
உறுத்தொருவீடதனை லணைத்திடமுடியாது
சொல்லுவார் சொனனுற்கேழ்ப்போர் தமக்குத்தான்புத்திபோமோ
தோய்ந்துநன்மை தின்மையா ராய்ந்துகொள்ளவேண்டாமோ
எல்லாந்தெரிந்த உனக்கினி நான்சொல்லவேணுமோ
வழைப்பியாயவர்க்கிடங் கொடுத்திடலாமோ

இடர்க்கிரவுஞ்சமோ டெம்பியையும்பட
முடித்ததன்றியு மிங்கொருதனை
விடுத்துநந்திரு மைந்தர்வளர்ந்திகழ்
கெடித்தலம்முழு தும்பதனஞ்செய்த (சரவண)

இவ்வாறு புத்திசொன்ன சிங்கமுகனை சூரன் கோபத்தோடு நிந்தித்தல.

விருத்தம்.

கேவலமாய் நினையாதே நீராக் கோபங
கேட்க வந்துமுடிந் திடுங்கே ளண்ணு
ஆவதுசொன் னேனெனலும பதறிச சூர
னண்டமுக டிடிந்துடக்கர்ச சனையிட டைய
யோவலியு மிழந்துகெட்டுப் போனு யோவென்
னுடன்பிறந்தும் பேடியுரு வானு யோசீ
பேவலர்க்குத் தொணடுசெய்து பிழைபோ வென்ன
வெடுத்திட்டா னெழுந்துகடு கடுத்திட் டானே. (உ௭)

(உ௮) கீர்த்தனம் இராகம் -பூரிகல்யாணி—ஆதிதாளம்.

பல்லவி.

என்னவார்த்தையென்று சொல்லவநதாயடா
இனியென்கோபம பொல்லாதடா

அநுபல்லவி.

மன்னுமணப்பந்தலில் - முகூர்த்தக்காலைக் கட்டி
மழையெனவே கண்ணீர்விட் - டழுதாற்போலெதிர்கிட்டி (என்ன)

சரணங்கள்.

(க) எல்கன்பறித்துவெட்டி - மலையைத்தள்ளுமோமுட்டி
எனுனக்கிந்தப்ரமை பிடித்ததோ - மிக்க
வலியகுலத்திலுற்றுங் கலைகள்முழுதுங்கற்றும
வரவரவுன்புத்தி மடித்ததோ - சின்னக்
குலவீரருக்குங் குறட - கூட்டமகளுககு பஞ்சி
கொல்லைக்காட்டுநரிபோற் - பல்லை காட்டியே கெஞ்சி
நிலமீதிலுயிர்வளர்த்திட நினைத்தாயே பட்டி
நேத்திபிதுவெருகன் ருசசுதுபளாகெட்டி

நேயமுற்றிய வென்னுடனேயொரு
தாய்வயிற்றினி னின்றரிமாமுக
மாயிரத்துட னேமலைபோலவு
மாயுதித்தனையேஅடடாவிது (என்ன)

(உ) தத்துவமாகசிவன் சத்திவெல்லுமென்றென்முன்
சாற்றினெலெனக்கென்ன தெரியாதோ - இன்னம
புத்தியிலுன்னுடைய யுக்தியினாலேய
பூதகற்பனைசொல்கி றாயேதோ - ஆனாற்
கூத்திவேறுசிவன்வே றென்பதுவுமுண்டோ
சாட்டையின்றிப்பம்பரம் ஆட்டுகிறாயென்கணேடோ
முற்றியயுகங்கள்நூற் றெட்டுவரைகருயங்களை
முடியாதவரம்பெற்றுத் திசையாவுங்கட்டியாள
மூதெரிகிரை யாயடலத்தையு
ப்ரதத்துமகம் புரிகாலையி
வாதிமெய்சிவ னாமேலாரப்பிர
சாதமுற்றதெலா மறியாதுபோல் (என்ன)

மனவொளியொன்றாயுறைந்து பின்னமாகிநிறைந்து
வளர்பரமபொருள்கந்தன் என்றாயே - அந்த
உன்னுமபரமபொருளுக்க கனவொளியமெனறுமசொந்த
உறவினமென்றுமுண்டோ சொல்வாயே - அடா
பின்னுமுன்சபாத்தையென் முனேனேகாட்டுகிறாய
பெற்றதாயிடங்கற்ற - வித்தைபாராட்டுகிறாய
என்னவர்க்குந்தேவர்க்கு முன்பின்பழியாநமெதால்லை
யிருக்கிற்செயந்தன்சிறை யகற்றிவிடுவதில்லை
எதிர்த்துவந்திடுபூதாகள்வீரர்கள்
பதைத்துலைந்திடவென்கரவாள்கொடு
சிதைத்தெயன்புரமேபுகவீசியே
மதித்தவாகைபுனைந்திடுவேனிது- (என்ன)

சூரனுக்கு மறுபடியும் சிங்கமுகன் உறுதிமொழி யுரைத்தல்.

விருத்தம்.

கடங்க விழ்த்திடு கரமலை யனையவெஞ் சூரன்
விடங்க விழ்த்திடு மாறென வெகுண்டிவை மொழிய
மடங்க லூற்றசெம் மாமுக வவுணனும் வணங்கித்
தடங்கை கூப்பின னெறியினன் சாற்றுவன் றனியே (உ)

வெண்பா.

முற்றிப் பருமுகட்டை முட்டியகோ பந்தரும்பு
குத்திவிடுங் கண்டறிந்து கொள்வாயே—சத்திகொண்ட
ஷண்முகனைப் பாலனென்று சாற்றுதல்கே டாகுமண்ணே
யுண்மையிது சொன்னே னுனக்கு. (௬)

சூரன் திரும்பவும் சிங்கமுகனை நிந்தித்தல்.

விருத்தம்.

அன்னை தந்தை சுற்றமிலாத தத்தன் பரலத்
தறுபொறியாய்க் காலுதையுண் டழல்வாய் வெய்யபி
மன்னுகங்கைச சரவணத்து ளலைவாய்ப் பட்டு
மகளிராய லறுவர்முலை யாயங் கார்ந்து
பொன்னகைக் காககவே லையுடைகைக கொண்ட
பொடிமனைய ளுதியா னவனை யென்றுன்
சின்மயமாம் பொருளென வா படுத்துச சொல்லா
தேயென்று னென்றிரினில்லா தேயென் றனே ௨௧,

சிங்கமுகனை விடையளித்தல

பின்னும் விருத்தம்

விதிவழியே மதிபுகுது மெனவே சூரன்
வெடுத்திடக்கண் டரிமுகவன் வணங்கி யண்ணா
பதறிநான் சொன்னபிழை பொறுப்பா யென்னப்
பகர்ந்திடலுந் தழுவியன்பு பகர்ந்துன் னூருக்
கிதமுடனே சேர்வாயென் றனுப்பி மூக்க
ளெழிலமைச சரோடுமவுண னிருந்தா னப்பாற்
கதிரவனு முதித்தெழுந்தா னமர்க்கு முமுட்
கரங்கொண்டா னயிலைவலக் கரங்கொண் டானே (௩௰)

வீரமஹேந்த்ரகாண்டம் முற்றுப்பெற்றது

கீர்த்தனங்கள்		௨௪.
விருத்தங்கள்	... ..	௩௰
வெண்பா	.. ..	௬

உயுத்த காண்டம்.

குமரக்கடவுள் திருச்செந்தூரிலிருந்து ஆகாயமார்க்கமாக வீரமஹேந்திரத்திற் கெழுந்தருளல்.

விருத்தம்

செந்திருமா லயன்மகவான் முதலாந் தேவர்
　　சிவகணங்கள் பூதகணந் திரண்டு மொய்க்கச
சொந்தமுள செயவீரவாகு தேவத்
　　துணைவன்முத லிலக்கத்தொன் பதுபேர் சூழ
வந்துவந்து பரிநடத்தத் தேர்மேற் கொண்டு
　　வளஞ்சிறந்த வீரமயேந் திரத்தை நோக்கிக
கந்தனுஞ்செந் தூரிலிருந் தெழுந்து வாரி
　　கடந்திட்டான் வழிகூடி நடந்திட் டானே (க)

(க) கீர்த்தனம் இராகம் - அடாணு—ஆதிதாளம்.

பல்லவி

விஜயஸுந்தரஷண்முககுகன்சென்றனே - செந்தூரினிலிருந்து-(விசய)

அனுபல்லவி.

அசையுங்கொடிக	ளெழுமுகிலுடல்கீற
அந்தணர்முனிவர்	களாசிகள்கூற
இசையுந்துந்துபியொலி	திசையெங்குமேற
இமையவர்கள்மகிழ்ந்து	கமழ்மலர்மழைதூற (விஜய)

சரணங்கள்.

(க) வாலசூரியரென - ஆறுமுகமுஞ்செவி
மகரகுண்டலங்களும் துலங்கவே
கோலமணிமகுடங்களும்பன்னிருபுயத்திற்
குலவுங்கேயூரங்களும் இலங்கவே
வேலுடன் படைகள் தரித்து - இருநுதலில்
வீரபட்டங்கட்டி மிகவலங்கரித்து
காலில்வீரவெண்டயங் - கலீரெனப்ரபைஜொலிக்க
கஞ்சமலர்ப்பாதச்சிலம் - பஞ்சவஞ்சவென்றொலிக்க (விஜய)

(உ) நன்னயமாகவே - அன்னவாகனத்தில்
நான்முகனெழுந்தரு கடுத்துவர
வன்னக்கருடன்மீதிற் - றன்னரியெழுந்துமணி
வண்ணன்மனமகிழ்ச்சி கொடுத்துவர
பொன்னகர்க் கிறைவன்மெள்ள - அடிவணங்கி
பொற்புயர்விமானமிசை மெய்ப்புடன்கொள்ள
உன்னருந்துணைவீரவா - குத்தலைவனேடிலக்கத்
தொன்பதுபேர்களுந்தோமீ - தின்பமோடெழுந்துதுள்ள (விஜய)

(ங) இடிபலனுக்கிரன்வக் - கிரன் முதலாகிய நூற்
றெட்டுப்படைத்தலைவர் படர்ந்திடவே
புடைகொண்டிடிமுழக்கோ - டிரண்டுசகஸ்த்ரவெள்ளம்
பூதப்பெரும்படைகள் அடர்ந்திடவே
கடல்வழியாக நடந்து - பெரும்புனலிற்
கால்பதியாமலனேக காதங்கடந்து
அடலிலங்கையுந்தாண்டி - அதிர்த்தெழுந்துவிசைகொண்
டாரவாரத்துடன்கூடி - வீரமயேந்திரநாடி (விஜய)

வீரமஹேந்திரத்திற்கருகில் சென்றவுடன் அங்கு விசுவகர் மாவால் ஏமகூடமென்ற பாசறையை நிர்மிதஞ்செய்வித்து அதில் குமரக்கடவுள் வீற்றிருத்தல.

விருத்தம்.

வீரமயேந் திரத்தின்வட பாலிற் சென்று
வீரர்களும் பூதரும்பற் படைபுஞ் சூழ்ந்தார்
சூரனுடை நகரமதற் குட்செல் லாமற்
றாயநகர் வேறமைத்தங் கிருகக வென்று
கார்முகில்வண் ணனுங்கமலத் தயனுங் கூறக்
கந்தனுவந் தன்புடன்கம் மியனுக் கோதப்
பாரமதி னெடுத்தெழின்மா நகர மொன்று
பதித்திட்டான் வகைவகையாய் விதித்திட் டானே (உ)

(உ) கீர்த்தனம் இராகம் - சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி.

பதியொன்று நிர்மிதங்கண்டானே தேவர்கள்சேனு
பதிமன மகிழ்ச்சி கொண்டானே

அநுபல்லவி.

மதியுலகை யடுத்து
மருவுமதி ளெடுத்து
எதிரெதிராகவேயீ - ரிரண்டுவாசல்விடுத்து
ஏமகூடமிதென்று - நாமதேயங் கொடுத்து (பதி)

சரணங்கள்.

(க) மேனிலங்களாவணங்களும் - கோடானுகோடி
வீதிகளுங் காவணங்களும்
தேனூறுஞ்செஞ்சாலைகளும்
செழுமலர்ப் பூஞ்சோலைகளும்
மானதவாவியும் நீராவிகளுந் துறந்த
மறையோகியர் கள்வசித் - துறைவிடமுஞ்சிறந்த (பதி)

(உ) மணிமகரதோரணங்களும் - மதலைசெய்து
வகுத்தசிலைவாரணங்களும்
அணிநிலைக்கோபுரங்களும்
அழகுயர் சித்திரங்களும்
பணிசெய்தமரர்வந்து - மணமலர்கள்பறித்து
பாதபூஜைகள்செய்யும் - வேதி யலங்கரித்து (பதி)

(ந) பூரிதமக விலாசமும் - விநோதமாயற்
புதமிகுஷண்முகவிலாசமும்
ஆரணங்கள்கொண்டாட
வரம்பையர் நடமாட
சீர்திகழுநவரத் - தினச்சிலைகள் பதித்து
சிங்காதனபீடம - லங்க்ருதமாய்விதித்து (பதி)

குமரனோடு அமர்க்குச்செல்லும்படி சூரனை நாரதர் சிலுகுசெய்தல்.

விருத்தம்.

பண்ணவர்தந் தபதியனு விந்த வாறு
பாசறையொன் றுண்டுபண்ணித் தளங்கள் சூழ
விண்ணவர்சே னாதிபனங் கிருக்கும் போதில்
வீரமயேந் திரத்திலுநா ரதனுஞ் சென்று
தெண்ணிறைநீர்க் கடல்சூழ்ந்த வுலகில் யார்க்குஞ்
சேட்டையின்றி ப்ரதிட்டையிலை யெனவே நெஞ்சி
லெண்ணியிகற் சூரனைக்கண் டிதம்போ லேசி
யிடிக்கின்ற னவனுமெதிர் படிக்கின் றானே (௧)

(ங) அடிமடக்குத் தீபதை. இராகம் - சங்கராபரணம் / பூரிகல்யாணி — சாப்பு / ஆதிதாளம்.

(க) வாகைமிகுந்த அசுரேசனே - ஆசீர்
வாதஞ் சூரபத்ம ராஜனே
ஓகையுடன்பலங்கொண் - டேகியெங்கணு மெட்டி
உயிர்த்தண்டனைசெய்துமா - யிரத்தெட்டண்டங்கள் கட்டி - வாகை

(உ) இங்குவந்த நாரதமுனியே - எங்
கிருந்தெழுந்தருளினீர் தனியே
திங்கள்கங்கையணிந்த - சிவபரஞ்சுடர்போலே
திருத்தவடிவொடுநல் - வரத்தாயென்றன் முன்னாலே - இங்கு

(ங) அரன்கயிலைக்கிரியைச்சார்ந்து - உன்றன்
ஆசான்சுக்கிரனுடன்சேர்ந்து
உரமிகுதவங்கள்செய் - துற்றபோதினடந்த
உண்மையுனக்குச்சொல்லத் - தன்மையாய்வந்தேனந்த - அரன்

(ச) நடந்தசங்கதி யென்னகாணும் - அதை
நன்றாயெடுத்துச்சொல்லவேணும்
கடந்தஞானமுள்ளநீர் - கபடமில்லாமலிங்கே
கரதலாமலகம்போற் - றெரியவென்றனுக்கங்கே - நடந்த

(ரு) திருக்கனற்பொறியில்வந்துதித்தோன் - ஆறு
திருமுகத்துட னெழில்கதித்தோன்
தருச்செந்தினகர்விட்டுத் - தளங்கொண்டென்னகர்முன்னே
தருக்காயோர்பதியமைத் - திருக்கிறானிதுசொன்னேன் - திரு

(சா) சண்முகனு மிங்ஙனமடுத்து - வலியச்
சருவவந்தானோபடையெடுத்து
கண்விடாச்சிறுவனென் - றெண்ணிமிதமாய்விட்டுக்
கருத்திற்கோபங்கொள்ளாமற் - பொறுத்தேனினியாகட்டும் - சண்

(எ) பெலங்கொண்டெழுந்து வைவேல்விடுத்து - உன்றம்
பியையுங்க்ரவுஞ் சத்தையுங் கெடுத்து
கொலைசெய்தவனைச்சிறு - குழந்தையெனவேநத்திக்
கொண்டேனென்றென்னெதிர்நீ- விண்டாயிதென்னபுத்தி - பெலம்

(அ) மாலயன்முதலானோர்பயந்து - நிதம்
வணங்குவதறியீரோ கயந்து
ஏலாதவன்போலென்னை - எண்ணினீரென்னகண்டோ
இறைப்பொழுதென்கோபத்தைப்-பொறுப்பேனுலிதுகண்டோ - மால

(ஸ) வெட்டியுன்மகன்றனையொழித்தும் - கந்தன்
விடுதூதன் வந்துன் னகரழித்தும்
பொட்டல்செய்ததுகண்டு - பொறுமையிற் சிறந்தாயோ
போர்புரிந்திடமதி மாறிக்கை மறந்தாயோ - வெட்டி

(ய) கடிநகரமைத்ததை பிடித்து - சண்மு
கனையுங் கைப்பிடியாகப் பிடித்து
புடைகொண்ட வீரர்களைப் - பொடிசெய்துசிலுதக்கிறேன்
பூதர்களையுமெம - வாதைசெய் துதைக்கிறேன் - கடி

நாரதர் போனபின்பு சூரன் வருணனை அழைத்து ஏன் எதிரிகளுக்கு வழிவிட்டாயென்று கேட்க வருணன் வணங்கிக்கூறல்.

விருத்தம்

சிவன்மகன்மே லிக்கணமே யமர்க்கே கென்னச்
சிறுகுறுநா ரதன்சொலிவா னகத்தே செல்ல
நவையஞ்சாக் கோரனகோ ரனைவி டுத்தந்
நாழிகையே வருணனையங் கழைத்துச் சூரன்
கவனமின்றி யெதிரிகட்குக் கடலின் பாதை
காட்டினதே னெனக்ககன மார்க்க மாக
அவர்கள்வந்தா ரயானறியே னென்று கோப
மாற்றுவான் வணங்கியுரை சாற்று வானே (அ)

(அ) கீர்த்தனம். இராகம் - மாஞ்சி—நிதபுடை தாளம்.

பல்லவி.

என்மேற்கோபங்கொள்வதுசரியோ -; ஸாமி
ஏழைநானும்முட னெதிரியோ - என்

அநுபல்லவி.

தன்முகத்தின்கோணலை - உன்னுமலே கண்ணுடி
தனையுடைப்பவர்போல - மனவருத்தத்தை நாடி (என்)

சரணங்கள்.

(க) வாரிப்பெரும்புனலைத்தாண்டி - தங்கள்
மாநகர்க்கருகில் வந்தீண்டி - அடர்க்
தோரைத் தொடர்ந்து செல்லாமல் - கணை
தொடுத்துச்சமர்செய்துவெல்லாமல் - சும்மா
வருக்கினைத்தோன் பின்னை - யார்கோயிலாண்டிதாரோ
[illegible] (என்)

(உ) எட்டிமனோவேகத்தேறி - எச்ச
ரிகையென்றுகட்டியங்கூறி - அவர்
பட்டினமமைத்ததைசேரா - யுங்கள்
பரிசனங்கள்கண்டறியாரா - வீணிற்
குட்டிக்கருஞ்சினைத்தேள் - கட்டுத்தறியிற்கொட்டி
குட்டிச்சுவரினெறி - கட்டிற்றென்றேயதட்டி (என்)

(ஊ) எடுத்தஷ்டதிசை யெங்குஞ்சென்று - அ
யிரத்தெட்டண்டஙகளையும்வென்று - ஒரு
குடைக்குளமைத்த ஜெயதீரா - அ
கோரவிக்ரமரண சூரா - வங்
தடுத்தாரைக்கெடுப்பதுன் - னரசியலின்முறையா
ஆனதுனான்சிறியே - னுறலென்ன குறையா (என்)

வருணன் இவ்வாறு சொல்லித்தப்பித்துப் போனபின் கோட்டை வடக்கு வாயிலில ஷண்முகன்சேனை அடுத்துவிட்டதெனத் தூதா சொல்லச்சூரன் தன்மகன் பானுகோபனைச் சண்டைக்கனுப்புதல.

விருத்தம்

தடத்தில்வன் முதலைபிடிக் கவடிவ யிற்றைத்
தடவிவிட்டுத் தன்னுயிர்மீட் டெழுந்தான் போலக்
குடத்திசைக்கா வலவனுயிர் பிழைத்து மீண்டான்
கோட்டைவட வாயிலிலக் குமரன் சேனை
அடுத்துவிட்ட தெனத்தூதர் சொல்லச் சூர
னக்கணமே பானுகோ பனைப ழைத்து
வடித்திரட்சே னைகளுடன்போ யவரைச் சுற்றி
வளையென்று னிக்கணம்போர் விளையென் றனே. (இ)

(ரு). கீர்த்தனம். இராகம் - மோகனம்—ஆதிதாளம்.

பல்லவி.

படைகொண்டெழுந்துவாட்டடா - பானுகோபாவுன்
பலபராக்ரமங்காட்டடா

அனுபல்லவி

வடகயிலையிலுற்ற - விடையவனுங்கியசி
வன்பாலனெதிர்சென்று - என்பாலனேர்நின்று (படை)

சரணங்கள்.

(க) இடச்சிங்கக்குலங்கள்சூழ்ந் - திருக்குங்குகையையெட்டி
நீவாய்நரிக்கூட்டங்கள் - தாவிவந்தாற்போற் கிட்டி
அடுத்து நமதுகோட்டை - வடக்குவாயிலைக் கட்டி
அடர்ந்தபடைகளைநீ - தொடர்ந்துதொடர்ந்து வெட்டி
அடித்துமண்டை பி - ளந்துகை கால்களை
அறுத்தெறிந்துக - ரந்தனிலே சிலை
எடுத்து நஞ்செனை - வுஞ்சா மாரிக
ளிறைத்தினங்களம - டிந்திடவேகன (படை)

(உ) தேர்கரிபரியொடு - சேனையெல்லாந் திரட்டி
செருக்களந்தனிலேசென் - றுறுக்கிமிகமிரட்டி
வீரர்கள்பூதர்முத - லோர்களையும் புரட்டி
மேடுங்காடுமாய்விரைந் - தோடும்படி விரட்டி
விதிர்த்துரங்கள்கி - ழிந்துபட ரென
வெடித்தெழுந்து - திரங்கள் குடிரென
நதித்தடங்கள்பு - குந்து சிவேலென
நடுத்தரங்கமு - றைந் திடவேகன (படை)

(ங) கொலைத்தொழிலுக்கஞ்சிறு - குலத்திற்கிழுக்குண் டாமே
கொள்ளிபோற்கொட்டாததேள் - பிள்ளைப்பூச்சியாய்ப்போமே
மலைத்தவருக்குக்கையிற் - பலிக்குமோபலன் றாமே
மண்டிச்சினம் நீகொண்டா - லண்டங்களுநீ றாமே
மலர்த்தடங்கள்பு - குந்துகரங் கொடு
வளைத்துறைந்த - கிழங்கிலைகாய் களோ
டலைத்திரைந்துபி - டுங்கிநலங் கெட
அழித்திடுங்கத - மாமதகஜமெனப் (படை)

பானுகோபன் போர்க்கோலங்கொண்டு அமர்க்களம் சேர்ந்ததை நாரதர் தெரிவிக்க உடனே சூரக்கடவுள் வீரபாகுவைப் போர்க்கனுப்பல.

விருத்தம்.

தாரவுண னுரைத்திடலுங் கதிர்ப்பகைவ னதுகேட்டுத்
தடந்தோள் தட்டி
தந்தையடி பணிந்தெழுந்து சமர்க்கோலம் புனைந்துபடைத்
தலைவ ரான

கோரமிகு முசலகண்டன் முரணகரன் மகிடனிகற்
கொலைஞன் மூர்க்கன்
கொடியனுக்ர பாநுவசா முகன்சனியன் முதற்படைகள்
குழிகொண்டோங்க
வீரமிகு மோரிருபத் தாயிரவெள் ளந்தளங்கள்
விரைந்து சூழ
விறன்மிகுந்த பரிகள்முப்ப தாயிரம்பூண் டிடுமிரத
மீதி லேறித்
தீரமுட னமர்க்களத்தில் வருவதைநா ரதன்குமரன்
செவியிற் கூறத்
திருத்துணைவன் றனையழைத்து மல்லென்று னமர்க்கெழுந்து
செல்லென் றனே. (௬)

(௬) தீபதை. இராகம் - கேதாரகௌளம்—ரூபகதாளம்.

பல்லவி.

வீரபாகுதேவா நீபோய்
விஜயங் கொண்டிங்கே வாராய் தம்பி (வீர)

அநுபல்லவி.

கோரமிகுந்தவெஞ் - சூரன்மகன்பாநு
கோபன்படையைப்போய்மறித்துக் - கடுங்
கொய்சிலையைவளைத் - தெய்துசரமழை
பெய்துவினைத்தொழில் - செய்ததிவேகமாய் (வீர)

சரணங்கள்.

(௧) போரிற்களையாத வீரப்படையொடும்
பூதப்படையையுஞ் சேர்த்துக் - கொண்டு
பொங்கியெழுகட லுங்கடைநாளையிற்
போர்த்தது போல்வளைந் தார்த்து - கடுந்
தூர்பரிசுற்றிய தேர்களைமோதி
உடைத்துப்பொடியாய்ப் பொடித்துப்பரியை
உதைத்துக்கரியைச் சிதைத்திட்டுடலை
வதைத்துப்புவியிற் புதைத்திட்டிந்நேரமே (வீர)

(௨) செங்கைவிற்கொண்டு சரங்கள்பொழிந்தந்தச்
சேனைத்தளங்களைத் தாக்கி - வாளால்
திட்டிக்கிடாயென வெட்டிவெட்டி யெங்குஞ்
செங்குருதிக் கடலாக்கி - திரை

பொங்கரணகன மெங்குங்கவந்தங்கள்
போரிட்டொன்றோடொன்று நேரிட்டெதிரே
புரண்டுநரம்பு சுருண்டுதலைகள்
திரண்டுபுவியி லுருண்டிடச்செய்ததி (வீர)

(௩) தானைத்திரளின் படைத்தலை வோரையுஞ்
சக்கரயூகமாய் வளைத்து - விண்ணில்
தாவும்பரித்தேரி லேறிக்கதிகொண்டு
சங்கையில்லாச்சமர் விளைத்து - பொல்லா
ஈனவசுரன் தொடுக்குங்கணைகளுக்
கேற்றகணைவிட்டு மாற்றியவனை
இடித்துநெருங்கிப் பிடித்துக்கதைகொண்
டடித்துன்சினத்தை முடித்திட்டென்பேர்சொலி (வீர)

பூதப்படையும் அசுரப்படையும் கைகலந்து, பூதப்படைத்தலைவரான சிங்கன் முதலியோர் அசுரப்படைகளையும் படைத்தலைவரையும் அழித்ததுமன்றி பானுகோபனுடைய தேர்பரிகளையும் அழிக்க அவன் சரம்விடுத்து இவர்களை மூர்ச்சிக்கச் செய்யப் பூதப்படைகள் கலைந்தோடல்.

விருத்தம்.

ஷண்முகவேள் புகன்றிடலும் வீர வாகுத்
தலைவனுங்கேட் டகமகிழ்ந்து சாமி பாதங்
கண்மலரிற் பதித்துநெஞ்சிற் றுதித்துக் கொண்டு
கவசமுதற் பணிகளெலாந் தரித்துக் கொண்டு
ஒண்மைமிகு கனகமணித் தேர்மீ தேறி
உருப்படைக ளொடுமிரண களத்தில் வந்த,
வண்மையைக்கேட் டதிர்த்தெழுந்து பானு கோபன்
மதித்திட்டா னெதிரில்வந்து குதித்திட் டானே (எ)

(எ) திபதை. இராகம் - நாதநாமக்கிரியை—ஆதிதாளம்.

(க) குதித்துவந்தெதிர்நின்ற - பானுகோபன் வீரவா
குத்தலைவனைக்கண்ணிற் கண்டானே - நான்
மதித்தகுமரனிங்கு - வாராமற் றூதனிவன்
வந்தானென்றெண்ணிச்சினங் - கொண்டானே

(௨) சினங்கொண்டுவீரர்பூத - ருடனிவனைப்பிடித்துச்
செயந்தன்றனக்குத்துணை யாகவே - காலிற்
கனங்கொள்விலங்கடித்துச் - கொண்டுபோவென்றசுரர்
களுக்குத்தாரங்கொடுத்திட் டேகவே

(௩) அசுரர்திரண்டெழுந்து - விசையொடு பூதரைச்சென்
றதட்டி நெருங்கச்சண்டை பிடித்தாரே - அந்த
நிசிசரர்களைப்பூதர் - தசையுங்குடலுமற்று
நிணங்கள்சிதற மண்ணில் அடித்தாரே

(௪) தானவர்பின்னுமத - யானைகையிலிருப்புத்
தடிகொண்டடிக்கச்சொல்லி யேவவே - வந்த
யானைகளைப்பூதர்கள் - பிடித்துமத்தகம்பிளந்
தடித்திடவுங்கதறிக் கூவவே

(௫) எற்றிச்சிலயானையைப் - பற்றியிழுத்துச்சுற்றி
எறிந்துபூதர்கள்மண்ணில் துவைத்தாரே - நேரில்
மற்றவசுரர்கண்டு - சித்தப்ரமையுங்கொண்டு
மலங்கிக்கிலிபிடித்துத் திகைத்தாரே

(௬) பருங்கிரிபோற்கரிகள் - உருண்டிடக்கண்டசுரர்
பதினெண்கணைகள்விட்டுக் கடிந்தாரே - பூதர்
விரிந்தமலைமரம்விட் - டெறிந்தடிக்கக்கலங்கி
மிக்கவசுரர்பட்டு மடிந்தாரே

(௭) பாரிடராலசுரர் - பாரிடங்களில்விழப்
பருங்குருதிவெள்ளங்கள் எழுந்தவே - கிழட்
டோரிஞாளிகள்களி - கூரப்பருந்துகழு
கொளிர்சிறகடித்துண்ண விழுந்தவே

(௮) மடித்திடக்கண்டசுரப் - படைத்தலைவனனலி
வரிசிலையம்புகள்தொட் டடித்தானே - பூதப்
படைத்தலைவரிற்சிங்கன் - திடுக்கென்றவன்றேரினிற்
பாய்ந்துவில்லையும்பறித் தொடித்தானே

(௯) வில்லொடியவும்வீரன் - சொல்லியனலிதன்னுடை
வீசிச்சிங்கன்மீதினில் தாக்கினான் - இவன்
ஒல்லென்றதைக்கைப்பற்றிக் - கொல்லுவேன்பாரென்றெழுந்
தோங்கிப்புடைத்தவனைப் போக்கினான்

(௰) அனலிமடியச்சண்டன் - கனன்றுதேர்விடும்போதங்
கடுத்துச்சிங்கனவன்மேற் பாய்ந்தானே - தோளிற்
கனவடியெனப்பருங் - கதைகொண்டடுத்தடிக்க
கலங்கிச்சண்டனுமுயிர் மாய்ந்தானே.

(௰௧) தண்டகன்முதலான - பூதப்படைக்கசுரர்
சதுரங்கத்தையுமிடை கொடுத்தாரே - சில
மிண்டவசுரருயிர் - கொண்டுபிழைப்போமென்று
வெருவிக்கதறியோட்ட மெடுத்தாரே

(௰௨) படைமடிந்தசெய்திகேட் - டடற்பானுகோபனுஞ்ச
பதஞ்சொலியேபற்களைக் கடித்தானே - கடிந்
திடைவிடாமற்சரந்தொட் - டடற்பூதப்படைகளில்
இலக்கம்பேர்களைமண்ணில் அடித்தானே

(௰௩) தக்கபூதர்மடிய வுக்ரன - தண்டுகொண்டவன்
தடந்தேர்பரிகளையு மழித்தானே - பல
விக்ரமவசுரனி - லக்கங்களை தொட்டந்த
உக்ரன்கையிற்றண்டையு மொழித்தானே

(௰௪) மத்தனிரதந்தன்னை - வாரியுக்கிரன்பானு
மண்டலத்திலெறிந்து களித்தானே - அவன்
கத்திகொண்டிவன்மீதிற் - சாடவுக்ரனுமுயிர்
தளர்ந்துதிரக்கடலிற் குளித்தானே

(௰௫) தண்டியறிந்துமலை - கொண்டிவன்மீதெறியச்
சதகணைவிட்டசுரன் விலக்கினான் - பின்னு
முண்டிமராமரங்கைக் - கொண்டவன்றேர்பரிகள்
மூளைசிதறும்படி கலக்கினான்

(௰௬) நெருங்கிவஞ்சன் சரந்தொட் - டிரங்கொள்தண்டிமுதலோர்
நெற்றிபிளக்க மூர்ச்சை யானாரே - இன்னம்
தரங்கொள்பிறைகம்பல - சரங்கள்விடுக்கப்பூதத்
தலைவர்கள்கலைந்தோடிப் போனாரே

பிறகு வீரகோளரி முதலிய வீரர் இலக்ஷமவீரர்களை முன்னிட்டுப் பானுகோபனுடன் போர்புரிதல்.

விருத்தம்.

சாரதரிவ் வாறுபயந் தோடக் கண்டு
தண்டகன்க பாலிருத்ர கண்ட னுக்ர
னண்ட லோசனனி ரஞ்சனன் சொற்
றிறமுடைய விலக்கவீ ரரைமுன் னிட்டு

வீரகோ ளரிமுதலார் தம்பி யார்கள்
    விற்பிடித்துப் பற்பலதே ரேறிக் கொண்டு
காரவுணன் பானுகோ பனைவ ளைந்து
    கடுத்திட்டார் கொடியசண்டை தொடுத்திட் டாரே. (அ)

(அ) **கீர்த்தனம். இராகம் - மத்யமாவதி—அடதாளம்.**

பல்லவி

வீரர்களடித்தாரே - பானுகோபன்முன்
மிகுசண்டைபிடித்தாரே.

அனுபல்லவி.

தேரினின்றவனூறு நூறுகணைகளெய்ய
திடுக்கென்றாயிரங்கணை - விடுத்திவரதைக்கொய்ய
சூறைப்பெருங்காற்றெனச் - சுற்றிச்சுற்றியடித்து
துடுக்கன்பிடித்தவில்லை - வெடுக்கென்றிழுத்தொடித்த (வீரர்)

சரணங்கள்

(க) சிரத்திலாயிரமம்பு - கரத்திலாயிரமம்பு
தேரிலாயிர மம்பு - மாரிலாயிரமம்பு
செறித்திவர்தொடுத்திடவே - அதனையவன்
அறுத்தூறி விடுத்திடவே - பின்னுமசுரன்
இடப்பரியின்மீதிலுங் - கொடித்துவசமீதிலுந்
தேர்வலவன்மீதிலும் - வாரிச்சரங்களிட்டுத்
தேர்பரியையு மழித்தார் - பரிகடத்துஞ்
சாரதியையுமொழித்தார் - சினங்கொண்டவன்
திடுக்கென்றொருதேரேறி - அடுக்கிக்கணைகள்தூறித்
திளைத்துச்சல்லடைக்கண்போற் - றுளைக்கவீரரிரத்தத்
திரைகடலிற் குளிக்கவே - அசுரனுமி
வரைப்பழித்துக்களிக்கவே - தேவர்களெல்லாந்
தியங்கிக்கிலிபிடித்து - மயங்கிக்கண்ணீர்வடித்துத்
தீனராகியொதுங்கிப் - பூனைபோலேபதுங்கித்
திசைதடு மாறினரே - அசுரருடற்
பசையெழுந்தூறினரே - அந்தவேளையிற்
றீரன்வீரகோளரி - கூரெயிற்றுவாளரி
சிங்கக்குட்டிபோற்பாய்ந்து - சங்கத்தொனிக்கக்காய்ந்து (வீரர்)

(௨) கரத்தில் வில்லைவளைத்து - உரத்துக்கணை விளைத்துக்
கார்முகம்போற்சொரிந்து - சூர்படையையரிந்து
களத்திற்படுக்கச் செய்தானே - வஞ்சனுங்கோபம்
விளைத்துச்சரங்களெய்தானே - மற்றுமிவன்மேற்
காரவுண்ன் சரங்கள் - நூறுநூறாயிரங்கள்
கைசலியாமல்விட்டு - மெய்யூடுருவவிட்டுக்
கலைத்திட வேற்றினனே - வீரர்கள்மனஞ்
சலைத்திடத்தூற்றினளே - வீரகேசரி
கடுத்திலக்கஞ்சரத்தைத் - தொடுத்தவுணனுரத்தைக்
கமறும்படியுளைத்துத் - தமருசிபோற்றுளைத்துக்
கலக்கங்கொண்டிடவாட்டினான் - அசுரர்மிக
மலைக்கும்படிக்கு மூட்டினான் - செழுந்தாமரைக்
கண்ணன்படையையவ - னெண்ணணிவிடுக்கஇவன்
கணையையதுவிழுங்கி - மணியிரவிமழுங்கிக்
கறங்கநடம் புரிந்ததே - திரிவிக்ரமன்
திறங்கொண்டொளிவிரிந்ததே - உடனிவன்சக்
கரத்தைப்பிடித்திட்டோங்கித் - தரிக்கக்கண்டதுவேங்கிக
கதிர்முன்பனிபோலேகக் - குதிகொணடெழுந்தனைக (வீரர்)

(௩) தாண்டுபுகழ்வீரமார்த் - தாண்டனதிதிறமாங்
தடிகுனித்தெதிர்பற்றி - வடிகணைகொடுநெற்றி
தட்டுருவவே தாக்கியே - வஞ்சகன்றேரைப்
பட்டுருவவேபோக்கியே - எழுநூறம்பு
சடுதியிலவன்மார்பில் - விடஅவனிவன்மார்பிற்
சட்டமாகப்பிடித்து - விட்டவாளையொடித்துச்
சடுத்தம்பேசியேபழித்தான் - மூளைகொண்டமா
ளெடுத்தவனுரங்கிழித்தான் - தெளிந்தவுணன்
தருக்கோடிவளையெட்டி - உருக்குக்கத்தியால்வெட்டிச்
சாய்த்துக்கோளரியையும் - மாய்த்துப்பூதர்களையும்
தரையிலுருளக் கண்டானே - வீரராக்கதன்
பொருதியெதிர்த்துக்கொண்டானே, எதிர்த்தவன்பின்
சரங்களாயிரம்பெய்ய - உரங்கொண்டவனுடவெய்ய
சரந்தொட்டிவனைக்கிட்டி - வருங்கணைகளைத்தட்டிச்
சாரதியையும் வீட்டவே - வந்துமற்றொரு
சாரதியுந்தேரோட்டவே - ஆயிரமம்பு
தானவன்றலையிலு - மேனியினிலையிலுந்
தனன்மழைபோனெறிக்க - மணிமகுடந்தெறிக்க (வீரர்)

பானுகோபன் வீரராக்கதனை மூர்ச்சிக்கச்செய்ததைப் பார்த்து வீரராந்தகன் முதலிய ஐந்து வீரர்கள் எதிர்த்தல்.

விருத்தம்.

சிரத்திலணி மணிமகுடந் தெறித்துவிழக் கதிர்ப்பகைவன்
 சிந்தை நொந்து
சினந்துமறு கட்டமொன்று புனைந்திவனால் விடுங்கணைகள்
 சிதறி யோடச்
சரத்தொகுதி யாய்விடுத்து வீரராக் கதன்றேரைத்
 தரையின் மோதிச்
சாரதியை மடித்துவில்லை யொடித்திடப்பார்த் திவன்மறுதேர்
 தனிலே தாவிக்
கரத்தினில்விற் பிடித்துமம்பு தொடுத்தவன்வில் லையுமுறித்துக்
 கதிர்வேல் தாக்கக்
காதகனவ் வேலையம்பாற் றடுத்துமயன் கொடுத்தவயில்
 தனைமுன் னேவ
உரத்தினிற்பட் டிவன்மூர்ச்சை யாகிவிழுந் திடத்தெரிந்தங்
 கோடி வந்த
உற்றதுணை யைவர்பன தேங்கினொ ரெழுந்துசின
 மோங்கி னாரே. (க)

(கூ) திபதை. இராகம் - புன்னாகவராளி—ஆதிதாளம்.

(க) மெய்த்துணைவீரரில் - வீரராந்தகனும்
வீரமகேசன்பாமேயந்திரனுடன் - பல
விக்ரமனாகிய - வீரதீரனுயர்
வீரபுரந்தரனை - வர்களுஞ்சின
மிகுத்தெழுந்து களந்தனிலேபடை
வகுத்துவந்து கரந்தனிலேசிலை
பிடித்தும்புபொழிந்திடவே யசுரர்கள்மாள.

(உ) மைக்கருமாமுகில் - போல்டர்ந்துசர
மாரியவுணன்விட - வீரரைவர்களு
மக்கியாருயிர்கள் - வாடியேபுவியில்
மாய்புலர்ந்துடன்ப - யங்கிடலுஞ்சர
வணத்துள்வந்த குகன்றனையேதிரு
மனத்திலுன்னி கந்தனிலேப
வசத்துடன்குதி கொண்டிடவே புஜபலதீரன்.

(௩) பைத்தலைவாளிக - ளேவிநின்றுபடு
பாவிகளாகிய - லோககண்டகர்கள்
பட்டுமேதினியில் - வீழ்கவுங்குருதி
பாரினமண்டிநதி - யுங்கடலும்புகப்
படுத்திடுங்கதி கண்டுடனேகணை
தொடுத்துஞ்சவுணன் குறளின்படை
மடுக்கவெங்கள மெங்கணுமே நிரைநிரையாகி

(௪) எய்த்தெதிர்வீழ்வதை - வேலவன்றனைவ
னேகசுயாதிப - னாதவன்சபத
மிட்டுடனேயிகல் - பானுகோபனையு
மேசிநிந்தைமொழி - பேசியுடன்சா
பிறைத்துமணி ரதந்தனையுங்கொடி
மரத்தையும்பல துண்டமதாய்விழ
முறித்தெறிந்திடல் கண்டசுராதிபன் முனிவானே.

வீரபாகு தேவருக்கும் பானுகோபனுக்கும் நடந்த முதனாட் போர்.

விருத்தம்

சினத்தெழுந்து கதிப்பகைவன் வீரவாகு
    தேவனைப்பார்த் தன்னொருநீ தூதனாகி
மனத்திறங்கொண் டென்னகரில் வந்து கோட்டை
    வளங்களையு மழித்தவுணர் களையும் வென்று
வினைத்தொழிலில் வெற்றிகொண்டு சென்றோ மென்று
    மிகக்கருவங் கொள்ளாதே யெனது கையின்
குனித்தகணைக் கிரையிடுவே னுனைநா னென்று
    குதிகொண்டான் வீரனுஞ்சென் றெதிர்கொண் டானே (௧)

(௧) கீர்த்தனம் இராகம் - கல்யாணி—ஆதிதாளம்.

பல்லவி

வீரபாகுதேவனும் - கோரன் பானுகோபனும
யுத்தசண்டைசெய்தாரே.

அநுபல்லவி.

சூரன்மைந்தனீரைந்து - சுடுகணைகள்விடுக்க
துணைவீரனொருபது - கணையாலதைத்தடுக்க
மாரிபோலவனூறு - நூறுகணையைத்தூற்ற
வாள்வீரனேரயுதங் - கணையாலதனைமாற்ற
மலைத்துமெழுபுவனங்கள் நடுங்கவே
மருத்துவுஞ்சலியாம லொடுங்கவே (வீர)

சரணங்கள்.

(க) பரிதிப்பகைவன் மிகக் - கருதிவீரனமீதொரு
பதுசதகணைகளைத் தாக்கினான் - இவன்
பொருதிகருதையப்புக - வொருபதினாலதனைப்
பொடிசெய்து சடுதியிற் போக்கினான் - அந்த
நிருதப்பாதகன்பின்புற் - பலதெய்வசரங்களை
நிமைக்குமுன்னேவிடுத்துத் தேக்கினான் - தம்பி
விரைவிற்கனன்மழைபோற் - சர்வருஷங்கள்கோடி
விடுத்திலவைப்பஞ்செனப் போக்கினான்-வெந்து
கருகித்திசைகளண்ட - பிண்டங்களும் வெடிக்க
ககனத்துடுக்கணங்கள் - மிகவுந்துடிதுடிக்க
வெருவிக்கிரிகளொட்டும் - உருகித்துகள்பொடிக்க
விடங்கள்கக்கிநாகங்கள் - அடங்கிக்கிலிபிடிக்க
விசைத்திருமியே - தலைதனை
அசைத்துருமியே - இருவரு
மிடுக்குடன்றுடியாக நெடுஞ்சிலை
எடுப்பதுஞ்சலியாமலடுங்கணை
தொடுப்பதும்பலவாக வருஞ்சமர்
கொடுப்பதுந்தெரியாமலிரவியொளி
மறையஅறையிருள்க - ளுறையவடிகணைக
ணிறையவெழுகடலுங் - குறையவுரமிகுக்க (வீரவாகு)

(உ) சோரன்பின்னும்விஜய - வீரன்மார்பிலாயிரந்
தொல்சர்த்தைவேகமாய் விட்டானே - தம்பி
வார்சிலைதனிவெழு - நூறுகணைதொட்டவன்
மணிமகுடத்தைப்பொடித் திட்டானே - மற்றுங்
காரவுணன்மகுடந்தரித்தோர்க்கணையால்வீரன்
கவசமதனைக்கிழித் திட்டானே - வீரன்

நேரிலாயிரங்கணை - அறிவஞ்சனுடைய
நெற்றியதனைப்பிளந் திட்டானே - இன்னந்
அரணமாகத்தம்பி நூறுகணைதெரித்து
துடுக்கனேறிவந்தபொற் - றடத்தேரையுமுறித்து
தீரவஞ்சனுடைய - கூர்வில்லையுந்தறித்து
சிதைக்கக்கண்டுடல்பதை - பதைத்தெழுந்துவெறித்து
தெளிந்தவனுமே - வருமுனெதிர்
வளைந்திவனுமே - விசையினொடு
சிலைச்சரங்கள்பொழிந்தடர் சேனையை
மலைப்புயங்களரிந்திடவேயுள
மலைத்துமண்ணின்மடிந்திடவேபிண
மலைக்குள்மஞ்சுபடிந்திடநாய்நரி
மருவிமடுநதிகள் - பெருகியருவியென
வருகுருதிசதைகள் - பருகிமகிழஜய (வீரவாகு)

(௩.) அர்த்தசந்த்ரபாணமு - னைத்தெழுந்தவன்விட
வயுதஞ்சரத்தால்வீரன் றடுத்தானே - உன்
மத்தனீராயுதஞ்ச ரத்தைவிட்டிவன்றேரை
வடுப்படும்படிமண்ணின் படுத்தானே - வீரன்
பத்திரங்கணூறுச - கத்திரம்விட்டவன்றேரும்
பரியும்புரண்டுருளக் கெடுத்தானே - சின
முற்றிவஞ்சன்வேறிப - த்திலேறியேவஜ்ர
முகக்கொடுங்கணைகளை விடுத்தானே - உடன்
வித்தகனசுரன்ற னைத்தலைகொய்வேனென்று
வெறித்தவில்லுந்தூணியு மறுத்துத்தூளாக்கிநின்று
கைத்தலத்திலக்கஞ்ச ரத்தைவிடவுழன்று
காய்ந்தசுரன்மாயங்கொண் டாய்ந்திவனெதிர்சென்று
கரத்தினிசையாய் - யோகனைத்
திரத்தைவிசையாய் - முடுகிவிடக்
கதிர்ப்பெருங்கிர ணங்கண்மழுங்கவே
அதிர்ப்பொடுங்கிர கங்கள்புழுங்கவே
கொதித்தடர்ந்திடலுங்குறன்வீரர
வதிக்குணின்றுமயங்கியுடன்சர
வணபவகுகனெழி - லடிமணிதிகழ்திரு
மணமலரடியிணைத் - துணையெனவேபரவ (வீரவாகு)

வீரபாகு உட்பட்ட சமஸ்தசயினியங்களும் பானுகோபன் விடுத்த மோகனாஸ்திரத்தால் மயக்கமுற அதுதெரிந்து குமரக்கடவுள் அதி மோகனாஸ்திரத்தைவிட அதுசென்று மோகனாஸ்திரத்தை உண்டு பானுகோபனையும் ரணகளத்திலிருந்து விரட்டிக் குமரக்கடவுள் திருக்கரத்தில்வந்துசேர வீரவாகு குமரக்கடவுளை துதித்தல்.

விருத்தம்.

அகத்திலடி யவர்குறைதீர்த் தாண்டருள்வ தேவிரத
மாகப் பூண்ட
வயிற்குமர னுக்கினையா லதிமோக னாத்திரஞ்சென்
றமர்க் களத்திற்
சிகித்தலையெ னச்சொலித்தங் கவன்விடுத்த மோகனாத்
திரத்தை யுண்டு
திறலவுண னையும்விரட்டித் தியக்கமுற்ற துணைவர்முதற்
சேனை யாவும்
அகத்துவகை மிகுந்துபர மானந்தக் கடலிலமிழ்ந்
தாடிப் பாட
அமரருளங் களிகூர வருள்புரிந்து செங்கரத்து
லணுகக் கண்ட
இகற்புனித வீரவா குத்தலைவ னதிசயித்தங்
கெழுந்து கந்த
னிணையடித்தா மரைமலரைப் போற்றுவான் மிகத்துதிசெய்
தேத்து வானே (௰க)

(௰க) கீர்த்தனம். இராகம் - தேவகாந்தாரி—ஆதிதாளம்.

பல்லவி.

நாதனேநின்மகிமை - வேதன்மாலரனிந்த்ர
னாலுமுரைக்கவசமோ - என்ஸாமி - நாதனே

அனுபல்லவி.

தாதவிழ்பூங்குழல் - மாதுமையருள்குண
ஸாகர - பக்தகரு - ணாகர - நாதனே

சரணங்கள்.

க. ஸாரஸந்நிவிநோத - ஸுந்தரஜயகரஸுய
ஹாரஸாரஸிஜநயந - ஒழ்
ஸாரவணஸவஸக்ஷியா மாரவாரஸிவ
தஸ்வாராநஜரா - விஸ்வர - நாதனே

(௪) திருத்தமாயுன் றன்வடனாட் - சாத்தையுச்சரிக்கும்பக்
தருக்குமெய்த்துணையாகி - உட்
கருத்திலுவந்துசுப - காத்தையுதவுஞ்செக
காரண - ஆநந்தபரி - பூரண - நாதனே

(௫) சூரன்மகன்விடுத்த - வீரமோகனஸ்திர
கோரதிமிரந்தனையே - வென்றுநி
வாரணஞ்செய்தெமையுத் - தாரணஞ்செய்தருள்தி
வாகர - சற்சனமனோகர - நாதனே

பானுகோபன் இரணகளத்தில் எல்லாவற்றையும்பறிகொடுத்து மேகமண்டலத்தில் மறைந்துபோய்த் தன்னரண்மனைசேர அதைத் தெரிந்த சூரன்போர்க்கோலங்கொண்டு போர்க்களஞ்சேரலும் அசுரப்படைக்கும் பூதப்படைக்கு நேர்ந்தசண்டையில் இரண்டு லக்ஷம் அசுரர் மடிதலும்.

விருத்தம்.

வீரவா குத்தலைவன் முதலோ ரிந்த
விதந்துதித்துக் குமரனைச்சூழ்ந் திருந்தா ரிப்பாற்
றேரிழந்து படையிழந்து பானு கோபன்
சிலையிழந்து மானமிழந் தேங்கிவாடி
காரிருண்மண் டலத்தின்மறைந் தோடிச் சென்றக்
கடிநகரி லரண்மனைசேர்ந் திருந்தா னங்கே
நேரின்வந்து தூதர்சொல்லக் கேட்டுச் சூரன்
நெட்டுயிர்ப்போ டரியணையை நீங்கி நீண்ட
கூரெரியிற் றனத்தொடுநெய் கவிழ்க்க வுண்டு
கொழுந்திட்டா லெனச்சினங்கொண் டெழுந்திட் டானே (௰௨)

(௰௨) **தீபதை. இராகம் - பந்துவராளி—ஆதிதாளம்.**

(௧) சினத்துவெஞ்சூரன்சிங்கா - சனத்தைவிட்டெழுந்திராத்
திரியூணுறக்கமெல்லாம் விண்டானே - மறு
தினக்கதிருதிக்கவும் - புனற்றடம்படிந்துநித்
தியகருமமுடித்துக் கொண்டானே

(௨) குடிக்குங்கன்றுகொண்டுபோ - ரடித்த கதையரய்ப்பானு
கோபன்முதனுட்சண்டைக் கேகியே - வீட்டுக்
கடிப்படைபோடுமுன்னே - முகட்டெலிகூப்பிட்டாற்போ
லவதிப்பட்டலங்கோல மாகியே

(௩) சேனைகரிபரிகள் - தேர்கள்பறிகொடுத்துச்
செருவினிலொளித்தோடி வந்தானே - இனி
மானம்போயுயிர்க் - காவலுண்டோநமதுயிரை
வைத்திருப்பதிலென்ன பலன்றானே

(௪) எனச்சொல்லிச்சூரபத்மன் - வினைத்தூதர்களிலோரா
யிரம்பேர் வருவீரெனக் கூவினான் - அண்டம்
அனைத்திலுஞ்சென்றிப்போதே - யிலக்கவெள்ளமசுரர்
அழைத்தோடிவாருங்களென் றேவினான்

(௫) உத்தாரங்கொண்டவுடன் - பத்துத்திசையசுரர்
யுகப்ரளயம்போல்வந்து குவிந்தாரே - எங்கும்
பத்திபத்தியாய்ப்படை - சுற்றிப்பணிபணிபோற்
பகுத்தவுடனடர்ந்து கவிந்தாரே

(௬) மேளங்கள்பம்பைகள்கைத் - தாளந்தடாரிவிரல்
விசைகொண்டுமத்தளங்கள் அடிக்கவே - அண்ட
கோளங்கலங்கப்புவி - பாளங்களாகவுங்க்
குலங்களுதிர்ந்துதுடி துடிக்கவே

(௭) மடைக்கண்டிறந்துவிண்மா - யடைக்கமதவேழங்கள்
வாய்திறந்துவீரிட்டுத் துள்ளவே - வருந்
தடந்தேர்பரிகரிகள் - நடக்கும்பாரத்தாற்சேடன்
சலித்துடலை நெளித்துக் கொள்ளவே

(௮) போர்த்துசசெந்தூளிகடல் - தூர்த்துக்கதிர்மண்டலம்
புகுந்திருள்மூடியெங்கு மதைக்கவே - விண்ணி
லார்த்துத்துகிற்கொடிக - ளூற்றெழுமேகங்களின்
அகடுதனைக்கிழித்துக் சிதைக்கவே

(௯) தண்டந்தோமரஞ்சூலம் - பிண்டிபாலமுசலஞ்
சக்கரமுதற்படை தாங்கியே - மது
வுண்டுகர்ச்சனையிட்டுக் - கொண்டசுரர்வரக்கண்
டுளத்தசுரனுவகை யோங்கியே

(௰) சிரத்தின்மணிமகுடந் - தரித்துக்கவசமிட்டுத்
திண்புயத்தினிற்றும்பை சூட்டியே - வில்லைக்
கரத்திலிட்டுத்தூணிதோட் - புறத்திலிட்டிரமதிற்
கனகப்பணியனைத்தும் பூட்டியே

(௰௧) தோள்வளைகள்புனைந்து - வாளிடையிற்பிணைந்து
துலங்குமிந்த்ரஞாலத்தேர் ஏறியே - சூரன்
நீளும்வீரமயேந்த்ர - மாளிகையாவணங்கள்
நெறிகடந்துவிருது கூறியே

(௰௨) வரும்பொழுதினிற்றம்பி - யரிமுகவன்றாரகன்
மைந்தரிருவரையும் நோக்கினான் - படைத்
திரளுடனீங்கள்சண்டைக் - குரிமைத்தலைவராகிச்
செல்லுவீரென்றவரைப் போக்கினான்

(௰௩) துடித்தவர்கள்வரக்கண் - டடுத்திந்திரன்ஸாமியைத்
தொழுதுவணங்கியிதை நவின்றானே - படை
எடுத்துப்பூதர்வீரரோ - டடுத்தனிலன்பரிதூண்
டிடத்தேரிலேறிக்கந்தன் சென்றானே.

(௰௪) ஓதப்பெருங்கடல்போல் - பூதப்பெரும்படைகள்
ஓங்கிக்கர்ச்சனைகொண்டு நடந்தாரே - வந்து
மோதியெதிர்த்த வசு - ராதிபரைக்கண்டுடன்
முனைந்தமர்க்களமதில் அடர்ந்தாரே.

(௰௫) மரங்கள்மலைபிடுங்கி - யுரங்கொண்டசுரர்தலை
மலைமலையாயுருள மடித்தாரே - கடுஞ்
சரங்கள்மழுத்தண்டஞ்சக் - கரங்கள்கொண்டுபூதரைத்
தாக்கியசுரர்மண்ணில் அடித்தாரே.

(௰௬) மத்தகஜத்திரளை - யெற்றிப்பிடித்துப்பூதர்
வாரிவாரியெறிந்து தாக்கினார் - கையாற்
பற்றிக்கிறுகிறெனச் - சுற்றிக்குதிரைகளைப்
பானுமண்டலமதிற் போக்கினார்.

(௰௭) தடந்தேர்களைக்கரத்தா - லடித்துநொறுக்கிக்காற்றிற்
றவிடுபொடியெனவே தூற்றினார் - நெஞ்
சடைத்திடத்தலைதன்னை - மடக்கிப்பிடித்துமடித்
தகழினிற்குட்புதைத்து வீழ்த்தினார்.

(௰௮) இரத்தவெள்ளங்களிலே - குறைத்தலைப்பிணங்கள்நின்
றெதிர்த்துக்குதித்தெழுந்து நடிக்கவே - அந்
தரத்தினின்றமரர்கந் - தரக்குமரனைத்துதித்
தானந்தங்கொண்டிசைகள் படிக்கவே.

சிங்கமுகன்மைந்தன் அதிசூரனுக்கும் பூதப்படைத்தலைவன் உக்கிரனுக்கும் நடந்த சண்டை.

விருத்தம்.

இருவகைச்சேனையுங்கடும்போ ரிடும்போ தங்கே
இரண்டிலக்க மசுரர்மடிந் திடக்கண் டோங்கி
அரிமுகன்றன் மைந்தனதி சூர னென்போ
னுயிரநூறுயதேர் முன்பின் செல்லப்
பரிபதினா யிரம்பிணைத்த தேரொன் றேறிப்
பருங்கையில்விற் பிடித்துநா ணொலித்து நிற்கும்
நிருதனைப்பார்த் துக்ரனும்போய் விரைந்து கொண்டே
நேரிட்டான் முனைத்தெழுந்து போரிட் டானே. ,(௰௩)

(௰௩) கீர்த்தனம். இராகம் - அசாவேரி—ஆதிதாளம்.

பல்லவி.

பூதத்தலைவரினுக்கிரனு மதிசூரனும்
பொருதிச்சண்டை செய்தாரே.

அனுபல்லவி.

மோதிமலைகொண்டுக்ர பூதனவன்மேற்றாக்க
முனைத்தசுரன்கணைவிட்டடித் ததனைத்தூளாக்க
பாதகன்மீதிவ்வன் மோதியோர்தண்டைவிட்டு
பதித்தமார்பின்வச்ரக வசத்தையுங்கிழித்திட்டு
படுத்துவெங்கள மீதிலுனைப்பலி
கொடுக்குமொய்ம்புள தீரனெனச்சொலி (பூத)

சரணங்கள்.

(க) உருத்தசுரன்பல்கணை தெறித்துக்கிரன்மீதினி
லொருநொடிக்குமுன்விடுத் துறுக்கினன் - இவன்
பருத்தமலையொன் றெடுத்தடித்தவன் சாரதிதேர்
பரியும்புரண்டுருள நொறுக்கினன் - அதி
வருத்தங்கொண்டவன்கணை செறித்திவன்மேற்கொழித்து
வாட்டவுக்கிரன்கதைபோட்டதனை யொழித்து
குருத்தலோடவன்வில்லுஞ் சரக்கூட்டையு மழித்து
குலைத்திடல்கண்டசுரன் மலைத்துருட்டி விழித்து
கோரமுற்றுரமாகவளைத்தொரு
வார்சிலைக்கணைநூறுதொடுத்திவன
மார்பிடத்தினிலேவிவிடுக்கவே
ஓர்கயிற்கதைசாடியுதிர்த்துயர் (பூத)

(௮.) அக்கினிச்சரமவன்விட இவன்அவித்தப்பற்றி
அரனைத்தியானஞ்செய்துட் கொண்டானே - பின்னுந்
தக்கவருணாஸ்திரந் தொடுக்கவதையுமிவன்
தாங்கியமுதமென வுண்டானே - இன்னும்
பொற்கமலவனஸ்திரத்தைக் கொண்டவன் போட
பொறுத்திவன்கையாலதைப் பறித்துவிழுங்கிப் போட
உக்கிமனதுமிக வெட்கியவன்திண் டாட
உக்ரன்சிவபக்தரி லுக்ரனென்றுகொண் டாட
உம்பர்கைத்தலமுற்றலர்தூவியே
இன்பமுற்றுவகைக்கடல்மூழ்கியே
அம்புயத்தனிடத்திதைமேவியே
யம்பமெத்தவிசித்திரமாகவே (பூர)

(௯.) சிந்தித்தசுரன்மனம் நொந்திட்டிவனைநம்மாற்
செயிக்கமுடியாதென வெண்ணியே - மிக
வந்தித்தரன்படைமுனைந்தவன்விட இவன்
மயங்கிநின்றுலோசனை பண்ணியே - உயர்
நந்திகணங்கள்தொழுங் கந்தனையுச் சரித்து
நடித்துத்தண்டைப்புவியில் விடுத்துநமஸ் கரித்து
மந்திரத்திற்சிறந்த ஐந்தெழுத்தைத் துதித்து
வணங்குமிவனைக்கண்டதிணங்கியருள் கதித்து
வரப்பொனின் கிரியைச்சிலையாகவே
தரித்துமுப்புரமும் பொடியாகவே
எரித்தமுக்கணனுக்கணி யாகவே
கரத்திலுற்றிடஅற்புத மாகவே

உக்கிரனால் அதிசூரன் இறந்தபின் வீரபாகுதேவர் அசுரேசனை மடித்தல்

விருத்தம்.

உடையவன்பாற் படைசேர வயனுமுதலா மனைவர்களு
முவந்துபோற்ற
உளைந்ததிரு ரனுஞ்சினந்து முனைந்திவன்மேல் மறுபடியு
மொருதண் டோங்கக்
கடிதிலந்தத் தண்டையிவன் பறித்தவனைக் களத்திலிக்
கணத்திற்கொன்றே
கடற்றுனை யசுரரையு மடித்திடக்கண் டசுரேசன்
கதிர்த்தே ரேறி

அடன்மிகுந்த பூதர்களிற் கனகன்மத்தன் மந்தனிகல்
அழலோ னேடும்
அதிரிலக்க வீரரினுத் தண்டன்முத லோர்களையும்
அடர்ந்து மீறிச்
சுடுசரங்கள் தொடுத்துடனப் பூதரையும் வீரரையுந்
துலைக்கச் சீறிச்
சுயவீர வாகுவனுட் கணித்திட்டா னவன்றலையைத்
துணித்திட் டானே (௬௪)

(௬௪) கீர்த்தனம். இராகம் - அடாணு—ஆதிதாளம்.

பல்லவி.

பட்டுருண் டழிந்தானே - அசுரேசன்போ
ரிட்டுயிரொழிந் தானே

அனுபல்லவி.

பொட்டெனவே புவிமேலே
போரினில் வீரன்கையாலே - பட்டு

சரணங்கள்.

(க) கட்டழகன்றேரினின் றெட்டிவில்லை வளைத்து
கனன் றுவெகுசரங்கள் முனைந்தடுத்து விளைத்து
துட்டன்கைவில்லைமுறித் திட்டுநெஞ்சைக் கிளைத்து
துளைத்திடலுமனஞ் சலித்துமிகக் களைத்து (பட்டு)

(உ) காருற்றமழையென வாரிச்சரங்கள் தொட்டு
கடுகியவன்விடலுங் கடிதில்வீரன் தளிட்டு
தேரைத்துகளெனத் தூறிடத்திகி விட்டு
திரண்டதலையுந்தோளு மிரண்டுதுண்டாக வெட்டு (பட்டு)

(௩) திடங்கொண்டுறைந்தஉயிர்க் குடங்கள்தனை யுடைத்து
தீங்கருங்காக்கைகளின் வாய்க்கிரையாய்ப் படைத்து
விடுங்குணம்போற்படைக ளடங்கலையுந் துடைத்து
வெருண்டுபுவியில்விழுந் தருண்டுடலம் புடைத்து (பட்டு)

வீரபாகு தேவருக்கும் சூரனுக்கும் நடந்த சண்டையில் வீரபாகு தேவர் மூர்ச்சையடைதல்.

விருத்தம்.

செருக்களத்தி லசுரேசன் தலையை வீட்டித்
திரளவுண ரையுமடித்து ப்ரளைய கால
உருத்திரன்போல் விளங்குகின்ற வீரனைப்பார்த்
துருத்திரதந் தனைநடத்திச் சூர பத்மன்
பருத்தமைந்த ரிருவர்களுந் துடித்து மாண்ட
படுகளத்தைக் கண்டுசினங் கொண்டு சோபக்
கருத்தொடுவில் வளைத்தெழுந்து சிறுநா ணோசை
காட்டினான் பூதர்களை வாட்டி னானே (௰௩)

பின்னும் விருத்தம்

ஆயிரங்காக் கைக்கொருகல் லெறிபோல் வீர
ரனைவரையுஞ் சூரனெழுந் தடிக்கச் சீறிப்
பாயுமொரு கேசரிபோல் வீர பாகு
படைக்கலங்கள் யாவையுங்கைக் கொண்டு தேர்நின்
றுயபரி களைநடத்தக் கடிந்து சூர
னுக்ரமித்தென் னசுரழித்தோ னிவனை யிங்கே
மாயவடி கணைதொடுப்பே னெனமுன் வில்லை
வளைத்திட்டான் வீரனும்போர் விளைத்திட் டானே. (௰௪)

(௰௫) கீர்த்தனம் இராகம் - சாவேரி—ஆதிதாளம்.

பல்லவி.

வீரவாகுதீரனும் - சூரபத்மாசுரனும்
மிகுசண்டை தொடுத்தாரே

அனுபல்லவி.

நேரிலாயிரங்கோடி பாணமவனெய்யவும்
நேயனாயிரங்கோடி பாணம்விட்டுக்கொய்யவும்
சூரன்பின்னுமாயிர நூறுகணைபெய்யவும்
தொடுத்துவீரன்பல்கணை விடுத்துப்பொடிசெய்யவும்
துங்கபத்ரமனந்தமதாகவே
உங்கரித்துவிடுத்திடவேயது
வன்கணத்தனூரம்படுமுன்முனை
மங்கியிற்றுகொறுங்கிடவே யுய (வீர)

சரணங்கள்.

(க) இரெட்டாயிரங்களை சூரன்முடுகிவிட
ஒருகோடிகளைவீரன் விளைத்தானே - இன்னும்
நீரிட்டிரத்தமெழ கேரிற்சாரதியார்பை
பிலத்துவாரம்போலிவன் துளைத்தானே - சூரன்
தேரினின்றிவன்மணித் தேர்பரியைமடிக்க
திரிவிக்ரமன்படைவிட்டி வனவன்மேலடிக்க
மார்பிற்பட்டுதிர்ந்தது நூறுதுண்டாய்வெடிக்க
வாயுவக்கினியமன் படைவிட்டிவனிடிக்க
வச்சிரக்கன்மலே மேலே
உச்சிதப்பொன்னூசி யாலே
வடுப்படச்செய்வது போலே
பொடிப்பொடியாகவு மேலே
வரைப்பகைக்குலிசன் படையுங்கடு
திரைப்புனற்காசன் படையுங்கொடு
நெருக்கவஞ்சனகம் படுமுன்பல
பொருக்கெனப்புவிமேல் விழவும்பல (வீர)

(உ) அந்தணன்முதலிந்திராதி யர்படையெல்லாம்
அசுரன்மார்பினிற்பட்டு மழுங்கவே - உயர்
செந்தழன்மலையிற் புகுந்தப்ரமரம்போலே
சிதைந்துமிகக்கருகிப் புழுங்கவே - எழிற்
கந்தன்றுணைவனுங்குந்த யோசனைபண்ணி
கறைக்கண்டனருளிய வரப்ரஸாதமென்றெண்ணி
எநதவிதமுமசுரன்றனே வென்றமண்ணி
விசைபெறவேணுமென்று விசைகொண்டெதிரேகண்ணி
இக்கணமுனே யொடுக்கி
வைக்கிறேனெனவ்ட்டுக்கி
இவன்சிவன்படை விடுக்க
அவன்சினந்ததைத்தடுக்க
இடிக்குலங்கள் பொடிந்துபடீரென
வெடித்தெழுந்து அதிர்ந்துதிடீரென
உடுக்குலங்களுதிர்ந்து பளீரென
படைக்கலங்களெதிர்ந் திடவேகன (வீர)

(௯) எண்டிசைநடுங்க வெகுண்டிருபடைகளும்
இசைந்தாடல்புரிந்திடக் கண்டாரே - புவி
அண்டசரமுமருண்டிட விருவருமதை
ஆகருடனஞ்செய்து கொண்டாரே - அவன்
துண்டரீகமாய்ச்சூலங் கொண்டிவன்றன்னைவாட்ட
துலக்கமாகத்தம்பி முத் தலைக்கணைவிட்டு மாட்ட
மண்டிவஞ்சகனதையி ரண்டுதுண்டாக வோட்ட
வீரவீரனவன்றே ரைப் பாரிற்பொடித்து வீட்ட
மூத்தசூரனம் பரத்தில்
எற்றிவிட்டேந்திகரத்தில்
மாக்கதையெடுத் துரத்தில்
தாக்கவீரனந் நேரத்தில்
மயக்கமுற்று விழுந்திட வீரர்கள்
தியக்கமுற்று மெலிந்திட நீண்முக
வயிற்கரத்தன் முனிந்துமுனல்விழி
வெயிற்கனற் பொறி சிந்திடவேயெழில் (வீர)

வீரபாகுதேவா முதலிய தம்பியாகள் மூர்ச்சையடைந்ததைக் கேட்டு போர்க்களத்திற்குவந்த குமாரனைச் சூரன் "நீ ஒரு சிறு குழந்தை; உன்னோடு போர்புரிதல் எனக்கு அபகீர்த்தி; ஆதலால் நீ திரும்பிப் போய்விடு" எனமொழிதல.

விருத்தம்.

நல்லருமைத் துணைவர்கள் வீழ்ந்திடக் கேட்டையன்
நகைத்துமுப் புரத்தைவென்ற முனைபா ராட்டி
மல்லனிலன் பரிதுண்டத் தேர்மேற் கொண்ட
மர்க்களத்தில் வந்தகும ரனையஞ் ஞானத்
தொல்லைவினை நீங்கிடக்கண் டுவந்து சூரன்
தொந்தவினை யொருபாலீர்த் திடச்சி னந்து
பல்முளையாக் குழந்தையைப் போரிட லெனக்குப்
பழியென்றான் செல்லுலந்த வழியென் றானே (௰எ)

(௰அ) கீர்த்தனம். இராகம் - சுருட்டி—சாப்புத்தாளம்.

பல்லவி.

ஏன்வந்தாய் பாலா - பயமில்லாமல்
ஏன்வந்தாய் பாலா

அநுபல்லவி.

ஏன்வந்தாய் பழிக்காளாய்
இஷ்டிக்கொரு மூத்தாளாய்
சூனரெனுமந்த வானவருக்காக
துள்ளியொருசிறு பிள்ளைத்தனமாக (ஏன்)

சரணம்

(க) எத்தித்தவங்கள்செய்து - நூற்றெட்டுயுகமுமா
யிரத்தெட்டண்டமுங்கட்டித் - துரைத்தனஞ்செய்யும்படி
தீர்த்தனுகிய ஆதி - மூர்த்திவிடையின்மீதிற்
சிறப்பாயென்னெதிர் வந்ததும் - அழிவில்லாத
வரப்ரஸாதங்கள் தந்ததும் - அறிந்திருந்தும்
எற்றிடாதவன்போலே யகங்கரித்து
இளங்கன்றச்சமறி யாதெனக்குதித்து
ஆர்த்தெழுந்துமித மாயெனைமதித்து
அடர்ந்திரதமிசைத்தொடர்ந் தென்னோடெதிர்த்து (ஏன்)

(உ) துடிக்கக்ரவுஞ்சனையும் - அடற்றாரகன்றனையும்
துளைத்துன்வேலினல்ரண - களத்தில் அவகடமாய்
மடித்தாயதுபோலென்றன் - படைக்குட்சென்றினியேலே
வருத்தவுன்றனாலாகாதே - அடடா அந்த
பருப்பினிமேல்வேகாதே - பையனேசும்மா
கடற்புனலிற்றலை கட்டியிருசெங்கை
கடுக்கவிறைத்தாலும் பிடித்தொருசெங்கை
வடிக்கமுடியுமோ உனக்கேனிந்தச்சங்கை
வருந்திவிருதாவி லிருந்திருந்து மிங்கே (ஏன்

(ங) பண்டெனதுதப்பியைக் - கொன்ற பழிக்காயுன்றன்
பக்கத்துணைவராமி - லக்கத்தொன்பதுபேரும்
மண்டிரணகளத்திற் - கண்டதுண்டங்களாக
மாண்டுன்றனக்கு - நேராய்க் கிடக்கிறதை
நீண்டவிழியாற்பாராய் - கந்தனேயுன்றன்
துண்டரிகமிருந்த விடத்தினிற்செல்லாது
சுரிகையூசிகொல்லத் தெருவினில்வில்லாது
சண்டைதனிலாசை கொண்டிடில்வெல்லாது
சங்கரன்மகனே என்கோபம்பொல்லாது (ஏன்)

சூரன் சொல்லியதைக்கேட்டு, குமரக்கடவுள் வீண்விருது கூற வேண்டாம, இருவர் வலுவும இக்கணத்தில் காணலாம் என்று சொல்லிப் போர்தொடங்குதல.

விருத்தம்

கடுத்தவுணன் பயமுறுத்தக் குகன்சொல் வான்வெண்
    கலங்கலீ ரிடுங்கனகங் கவிரி டாது
அடுத்திருவர் வலிமையுமிக் கணத்தி லேகண்
    டறியலாம் வீண்விருதா வளியே சாதே
வடுக்குனது கடைதனைக்கட் டடா சூரா
    ஓடாதே நில்லுநில்லென் றதட்டி வில்லை
எடுத்துவலச் செவியிலுற வளைத்து நாணி
    இறுக்கினன் கணைகளிட்டு நொறுக்கி னனே. (௰அ)

(௰எ) கீர்த்தனம் இராகம் - தோடி—ஆதிதாளம்.

பல்லவி

ஸாமிநாதனுஞ் சமர்தொடுத்தான் * ரண
சூரபத்மனுடன் - ஸாமி

அனுபல்லவி.

பூமியெழுகடலுநதாவி யொன்றாக
போர்த்ததுபோன்முனைநதிட்டார்த்து விண்மேக
மாமழைகனலிடி யெனவுமனேக
வடிகணைவிடவன மலைகள்நீறாக
    வடவையெனவே வரு
    விடமருவிய திரு
    மிடறுடையவ னுரு
    வுடையபரம குரு (ஸாமி)

சரணங்கள்

(க) விருதுசொலியசூரன் சரவருஷம்பொழிந்து
விமலன்மணிரதத்தை மூடவும் - பூ
தரவரசனுமதி - விரைவிற்கணைதொடுத்துத்
தாக்கியதைவிலக்கிப் போடவும் - பின்னும்
வரிவில்லெடுத்தசூரன் - அறுமுகன் மேலழுந்த
வருஷபாணங்களாகச் சாடவும் - ஐயன்
ஒருபதினறு புண்டரீகக்கணையைவஞ்சன்
உரத்தில்விடப்பொடியாய் ஓடவும் - அவன்

அரியவயிரவுடல் வலிமையைக்கண்டுமெய்த்து
அதிசயங்கொண்டுகந்தன் துதிகள்செய்துநகைத்து
விறுவிறெனச்சரந்தொட் டவன்கைச்சிலையைதைத்து
வீழ்த்தியின்னம்பல்கணை யேற்றிலக்கியம்வைத்து
விறற்றடம்புய மீதினிலும்புக
விடுத்த அம்புக ளானவையுந்துக
ளுறக்குகன்கடு சூலமதைத்தொட
உறுத்தவன்கணையா லிருதுண்டிட
ஒருசத கதைகொடு
விரைவுட னவன்விடு
வருபடை யினகடு
முறிபடவிசையொடு (ஸாமி)

(உ) ஆயிரங்கணையினு - லவனுடையறுபதி
னாயிரந்தேரையுந்தூள் ஆக்கவே - அந்தத்
தீயவன்பின்விடுத்த - காயுங்கூரிலைவேலைச்
சிதறப்பொடிப்பொடியாய்ப் போக்கவே - இன்னுஞ்
சேயன்மீதிற்கணைபத் - தாயிரமவன்றொடச்
சிதைத்திட்டையன் பல்கணை தாக்கவே - வஞ்சன்
காயமுழுவதினு - மீயிருந்தேனிறால்
கண்களெனத் துளையுண் டாக்கவே - அவன்
வாயினிலேபுகுந்த ஈதெரியா தழன்று
மதிக்குமரன்செய்யும வதிக்குளிடைந்துழன்று
ஈயுடனேதின்றகூ ழாகிமனஞ்சுழன்று
இளைத்துத்தோளிலணிந்த வளைத்தொகுதிகழன்று
இடுக்கணுற்றிடுபோதவுணப் படை
இரைச்சலிட்டதி வேகமுடன்புடை
அடுத்துவிற்கணை மாரிபொழிந் திட
அதிர்த்துவிஷ்ணுவி னேமிகுகன்றொட
அதிரதர்க ளிடிய
மதகரிகள் படிய
கதிபரிகள் முடிய
சதியசுரர் மடிய (ஸாமி)

(௩.) மட்டிலாதவையானஞ் சுட்டிடச்சூரனிதழ்
மடித்துறிஞ்சிச்சினங்கொண் டடுத்தானே - வெரு
திட்டமோடயனஸ்திர விஷ்ணுவஸ்திரமிரண்டுஞ்
சீக்கிரத்திலயன்மேல் தொடுத்தானே - எழுந்
தட்டகாசங்கள்செய்து வரக்கண்டதையுங்கந்தன்
அயிற்கிரையாகவுண்ணக் கொடுத்தானே - சிறித்
துட்டவசுரன்வெகுண் டஷ்டகுணமூர்த்திபரி
சுபதந்தனையெடுத்து விடுத்தானே - விடுத்
திட்டபடைமுப்புரஞ் சுட்டகனல்போனீட
எழுங்கதிர்மதியொளி • மழுங்கிவிண்புகைமூட
அஷ்டகஜமுங்கிலை கெட்டுலைந்துதள்ளாட
அயர்ந்தமரர்முனிவர் பயந்துளைந்தெழுந்தோட
அனற்பிழம்புகளாயுல கந்தனை
அழித்திடுஞ்சரயானது கந்தனை
மனுப்பரம்பொருளாமென வந்தனை
வழுத்தியம்புயமான கரந்தனை
மருவயிள நிலவி
னுருவமொடுகுலவ
அரியபரம சிவ
னருள்சரவணபவ (ஸாமி)

சூரன் தன் சயினியங்களையும அஸ்திர சஸ்திரங்களையும இழந்து ஏகாங்கியாகி வெட்கத்தாற் தலைகுனிந்து காற்கட்டைவிரலால் நிலத்தைக்கீறிக்கொண்டு நிற்குமபோது குகன் அவனை நோக்கிக்கூறல்.

விருத்தம்

கடவுளரத் திரங்களெலாங் கமரிற் குள்ளே
கவிழ்த்தபா லெனச்சூர னவத்[illegible] போக்கிப்
புடையசுர ரிலக்கவெள்ளஞ் சேனை யோடு
பொருகரிகள் பரிகளிர தங்களும் போ
யிடர்மருவித் தலைகுனிந்து காலி னங்கு
லியினாலே நிலங்கீறி நிற்கும் போது
துடியுடனே குகனவனை நோக்கி யென்ன
சொல்லென்றான் றலைநிமிர்ந்து நில்லென் றானே (௰௧)

(௰அ) கீர்த்தனம். இராகம் - பியாகடை—அடதாளம்.

பல்லவி.

சொல்லடாசூரா - தலைநிமிர்ந்து
நில்லடாசூரா

அநுபல்லவி.

வல்லவனுக்குவல்லோன் றொல்லுலகிலுண்டென்று
மதிவையாதநிர்மூடா - சதிசெய்யுங்குடிகேடா (சொல்லடா)

சரணங்கள்.

(௧) போர்க்கென்றேயின்றுமுத - லுட்கொண்டிங்கேயடுத்தாய்
பொடியனென்றகயாக - நொடிசெய்தெனைவெடுத்தாய்
நாற்கருவிகளுட - னார்த்துச் சமர்தொடுத்தாய்
நம்பிவந்தசேனையை - நமன்கையிலேகொடுத்தாய்
நாணொடுவில்லையுந் - தூணியையும்
விட்டாய் - கெட்டாய் - முட்டாளேயென்
பாணமுன்குடலைப் - பூணுமென்றபயப்
பட்டிடாமலின்று - கிட்டிவந்தெதிர்நின்று (சொல்லடா)

(௨) பெரும்பூதம்போலுடலம் - பொருமியே யுதித்தாயே
பெருக்கமானவெண்ணங்கொண் - டுறுக்கிவந் தெதிர்த்தாயே
திறம்பயின்றெனைத்தானோர் - துரும்பாக மதித்தாயே
தேன்குடித்தநரிபோ - லோங்கியே குதித்தாயே
சீசியடாஉன்மா - ரீசமிங்கே
செல்லுமா - வெல்லுமா - கல்லுமாரி போல்
வீசியபடைகள் - தூசிபோற்பறந்து
விட்டதேயுன்னுரங் - கெட்டதோருத்தரம் - (சொல்லடா)

(௩) இன்றுனதுசாயங்கள் - நன்றாய்வெளுத்துப் போச்சு
இடியோசைகேட்டபாம் - பென வொடுங்கினாய் மூச்சு
இன்றநஞ்சுகொல்லாமல் - விடுமோகேளென் பேச்சு
தேவர்க்கிடுக்கண்செய் - துன்வாழ்வையிழக்க லாச்சு
செயந்தன்சிறைவிட்டு - நயந்திட்டாற்
பிழைப்பாய் - தழைப்பாய் - உழைப்பாய்முன்பு
வியந்துபெற்றதவப் - பயனுடையநீதி
விதிமுறையறிந்து - மதியுணர்ந்துதெளிந்து - (சொல்லடா)

சூரன் மறுமொழியொன்றும் உரையாது மாயையால்மறைந்து சென்றபிறகு, வீரர்களும் பூதர்களும் அவனது நகரை அழித்தல்.

விருத்தம்.

விரித்துநெஞ்சிற் சுடச்சுடச்சண் முகவேள் கூற
வெட்கியுப்பிட் டிடும்பாண்ட மெனவே யுள்ளம
வருத்தமுற்று மறுமொழிசொல் லாமற் சூரன்
மாயமந்தி ரத்தையுன்னி மறைந்து சென்றான்
திருத்துணைவீ ரர்கள்முதலோ ரெழுந்து கந்தன்
சேவடியைப் பணிந்தருள்பெற் றேகி வானில்
உருத்தெழுந்து சூர்நகரை வளைந்து வன்மம்
ஒழிக்கின்றார் பட்டினத்தை யழிக்கின் றாரே (உ௰)

(௰௬) கீர்த்தனம். இராகம் - அசாவேரி—ஆதிதாளம்.

பல்லவி.

சினத்துடன் பூதர்கள் சென்றாரே - சூரனுடைபட்
டினத்தை யழித்திகல் வென்றாரே

அனுபல்லவி

கனத்தபெருங்கண்கனின் றனற்பொறி விடுத்து
கழுப்பரசுமுசலமழுப்படை யெடுத்து
முனைப்பிறையெனு மெயிற்றினொலிதழ் கடித்து
சூரியிலக்குடன்சென் றேறிக்கொண்டா னடித்து (சினத்துடன்)

சரணங்கள்

(க) வானுறவளர்ந்த பூகங்களையும் - பவளம் பொன்முத்து
மரகதம்போன்ற புன்னைகங்களையும் - கதலிபலாவோ
டானசூதங்கள் கூவிளங்களையும் - நாரங்கந்தெங்கோ
டணிமிகுமுத்தியான மரங்களையும் - அறிவேகமாய்க்
கானிமிர்ந்துதைத் தடித்து
களைகளைகளா யொடித்து
தீனுறுஞ் செந்தேன்குடித்து
திடவெறி கொண்டே நடித்து
தேனொழுகுகனிகள் சிதறிடவழுத்து
செடியிலைதழைகளிலாமலே கழித்து
ஆனைகங்களும் வியப்புறும்படி தெழித்து
அண்டமிழல் களங்கிலாமலே யொழித்து
அட்டமின்றிநிலை - கெட்டலைந்தசுர
ரிட்டகாவலர்கள் - கட்டிலேத்தோட்வே (சினத்துடன்)

(உ) மலர்மிகுசண்பகமும்வகுளமும் - அலரிநந்தியா
வர்த்தமும் பாடலமுமாதுளமும் - பாரிஜாதமும்
நலமுறுபன்னீர் வெடிமல்லிகையும - சாலந்தமாலம்
நறுமணமிகுவன்னக் கேதகையும - திவவியமாகிய
மூலமலர்ப்பூங் கொடிகளும்
முகிழ்செவந்திச செடிகளும்
சலசவாவிப் படிகளும்
தமனியச சாவடிகளும்
பலவளங்கள் திகழ்நந்தனங்களுமடுத்து
பார்த்து நிரைநிரையாய்க் கோத்தணிதொடுத்து
மலியரும்புடன் கொடியையு முறித்தெடுத்து
வாரிவாரியலைவாரியில் விடுத்து
வண்டி முரலடைகள் - விண்டு தேனருவி
கொண்டு நால்கரையு - [illegible]ண்டெழுந்தோடவே (சினத்துடன்)

(ரு) கொத்தளங்கோட்டைகளையாவு பேர்த்து - சகஸ்திரநிலைக
கோபுரங்களையும்பிடித் தார்த்து - சமுத்திரம்போற்
சுற்றகழ்க்கிடங்குகளுந் தூர்த்து - ஆவணங்களைச
சூறையிட்டுத்துப்புரவாய்த் தீர்த்து - கதிர்மதியர்
தத்தும் பொன்மாடங்களையும
சாத்துங்க வாடங்களையும
சித்திரக் கூடங்களையும
சிலை மணிப டங்களையும
எற்றியெற்றிவிண்ணி லெழுந்திடப் பாக்கி
இடியொலியெனசசுவ ரிடிந்திடத்தாக்கி
பற்றியகடல்திட லுற்றிடத்தேக்கி
பனிறெனவெங்கும் வெட்ட வெளிகளுண்டாக்கி
பட்டுழன்றசு - ருட்டழன்பதிகி
லிட்டொடுங்கிவைதை - பட்டுயிர்மாயவே (சினத்துடன்)

நகரத்தை அழித்தபின் பூதர்கள் திரும்பிப் பாசறை சேர, அமரில் தோற்றுவந்த சூரனை பானுகோபன் தேற்றுதல்.

விருத்தம்

கோனகரை யழித்திடும்போ தெதிர்த்து வந்த
    கோரனையுஞ் சேனையையுங் கொன்று மீண்டு
ஞானகுக னடர்ந்திடும்பா சறைக்குட் பூதர்
    நண்ணினு ரன்றமரி லெழுசெங் தாட்போய்ப்
பானுவின்மேற் படிந்திருக்கண் டவனு மேலைப்
    படுகடலி னிற்குளித்தான் சமரிற் சூ
னினமடைச் தகையிவி கோபன் கேட்டங்
    கெதிர்செல்வான் பணிந்துசில மதிசொல் வானே (உக)

(உ௰) கீர்த்தனம் இராகம் - அடாணு—அடதாளச்சாப்பு

பல்லவி

எதுக்கிந்தஆயாசம் - ஐயாநமக்
கிதுவோமகாப்பிரயாசம்

அநுபல்லவி

பூதப்படைகளைச - சேதித்தகழுக்குட்
புதைத்துவீரரையுஞ் - சிதைத்துக்கதைகொண்டு
யோதிரணகள - மீதிலவர்தலை
மூளைசிதறிட - நாளைச்சமர்செய்வேன் (எது)

சரணங்கள்

(க) கொட்டமிட்டெழுந்துநம் பட்டினத்தையடித்து
கொட்டைபரப்பல் ஆச்சோ - அசுரரென்றுஞ்
சட்டையில்லாமற் போச்சோ - ஆறுவிருக்
கட்டும்யோசனையென்ன கிட்டிரமுடன்படை
யொட்டுக்திரட்டிச்சென்று கிட்டிக்குமரனைப்போ
ரிட்டுக்கயிற்றுடு கட்டிப்பிடித்துன்ற
னிடத்திற்கொண்டுவந்து விடுத்திடுவேனிதற் (கேது)

(உ) கனத்தபுலியுயிற்றிற் செனித்தகுருளையெலி
கடிக்குப்பயந்து நோகுமோ - என்றன்விரலை
மடக்க எவரால் ஆகுமோ - பிறந்தவுடன்
தனிச்சிறுகுழந்தையில் முளைத்தெழுந்துசூரியன்
தனைப்பிடித்துக்கட்டின துனக்கென்னதெரியாதோ
எனக்குகனைச்சயர் தனுக்குத்துணையாக
வளைத்துப்பருஞ்சிறைக் களத்திலடைக்கிறேன் (எது)

(ரு) தடக்கைமும்மதயானை படுக்கினுங்குதிரைக்குத்
தரங்குன்றிக் களைப்பதுண்டோ - தேவர்க்கசுரர்
உரங்குன்றி யிளைப்பதுண்டோ - ஆயினுங்கடு
விடக்குஞ்சரவென்றாலுந் தடிக்கம்படுத்திட்டோங்கி
அடிக்குந்தன்மைபோற்றெய்வப் படைக்கலந்தனைவிட்டுத்
திடுக்கென்றலறிட முடுக்கியவன்சேனை
சிதைந்துருளும்படி அதஞ்செய்கிறேன்வீணில் (எது)

எதிரிகளை அமரில வெலலச்சூரனிடம் விடைபெற்று, பானு கோபன் பூதர்களால் இடிந்தநகரை ஆகாயனென்ற ஒருகம்மியனாற் புதுப்பித்தபின், மாயையினிடம் மாயப்படை பெற்றுச்சயினியங்களோடும் அமர்க்களம் சேர்ந்து வீரபாகுவைப் போருக்கழைக்க அவ்விருவருக்கும் நேர்ந்த யுத்தத்தில் பானுகோபன் விட்டமாயப் படை வீரபாகு உள்ளிட்ட சமஸ்தசயினியங்களையும் கட்டி சுத்தோதகக்கடலிலழுத்திவிடல.

விருத்தம்.

முட்டானேர் தவர்க்கீ மல்லை யென்று
மொழிவதுபோல் முதனாளிற் பரிதி கோபன்
பட்டதுயர் தனைமறந்து விருது கூறப்
படிறசுரன் றலையசைத்துக் குமரன் றன்னை
யட்டியின்றி யான்சயித்து வருவே னிவ்வூ
ரழித்திடித்த பூதர்கள்வீ ரர்களை நீபோய்த்
தொட்டுவளைத் தடித்திரண களத்தைப் பாழாய்த்
தடையென்று ரெதிலென்ன தடையென் றனோ.- (உஉ)

பின்னும் விருத்தம்.

தகப்ப னுரைகொண் டடிவணங்கித் தபதி யனிலா காயனென்போன்
றனையங் கழைத்துப் பூதர்களாற் றகர்த்த நகரை முன்போலத்
தங்க மயமா யலங்கரித்துத் தவத்தி லிருந்த மாயையையுச்
சரித்தா னுடனங் கவள்வருந் தந்தைக் குரிய தாயேயென்
றகத்து வகையோ டடிபணிந்தா சனமுங் கொடுத்திக் கதிர்ப்பகைவன்
அமரி லடைந்த அவத்தையெலா மத்தா மலகம் போலுரைக்க
அபயங் கொடுத்து வாயுவையுண் டாக்கு மாயப் படைகொடுத்து
அடையார் படையை வென்றுவெற்றி யடைவா யெனச்சொல் வியமகன்றான்
முகிழ்த்த கமலங் கண்விழிப்ப மூன்று நாட்போர் காண்பதற்கா
முந்நீர்க் கடலிற் குணதிசையின் முளைத்துக் கதிரோ னுதித்தெழுந்தான்
முடித்தேர் பரிகள் கரிகளொடு முறையைம் பதினா யிர வெள்ள
மூரிக் கடல்போ லியங்களொலி முழங்கச் சமர்க்கோ லமும்புனைந்து
மகத்வ முடனே யிகல்வீர வாகு தனக்குத் தூதனுப்ப
வால குமரன் கழலிணையை வணங்கித் துணைவன் கணங்களொடு
மணிப்பூ தர்கள்வீ ரர்களுடனே மணித்தே ரேறிக் களத்தில்வந்தான்
வகுத்த வசுரப் படைகளைப்போய் வளைத்தார் மிகுபோர் விளைத்தாரே. (உ௩)

(உக) வண்ணத்தரு - இராகம் - புன்னாகவராளி—அடதாளச்சாப்பு.

(க) மிக்குறும்பல வீரர்கள்பூதர்கள்
வெள்ளமாயிரந் துள்ளிவளைந்துகொண்
டக்ரமமிகு சூரன்மகன்படை
யண்டையிற்சென்று துண்டரிகத்துடன்
ஆலங்கக்கிய பிண்டி
பாலஞ்சக்ர முசண்டி
சூலமுற்கரந் தண்டி
ஞலரக்கரை முண்டி
அடித்துத்தாள் கரங்களை
யொடித்துத்தோள் சிரங்களை
முடித்துத்தா ருரங்களை
மடித்துத்தோ மரங்களை
ஆண்மையுடன்ரூட் - டெடுத்துக்கொக்கரித்துச் சக்கரம்போல்விசை
யாகநெருங் கிச்சுழற்றிப் பற்கடித்துப் பொன்முடித்தேர்களை
டாணிநொறுங்கப் - புடைத்தத்தாட் - மிதித்திப்பாய் - பரிச்[illegible]யோ
டானைகளெஞ்சக் - [illegible] - [illegible] - [illegible]

(௨) கண்டனன்பானு கோபனிருபுடைக்
கண்களுஞ்சாதி லிங்கமெனச்சின
மண்டிவெம்பரித் தேரைநடத்திய
மர்க்களத்தில்வந் தக்கணமேவீர
வாகுவைத்தொடர்ந் தெட்டி
வேகமுற்றெதிர் முட்டி
மாகமுட்டவ தட்டி
நாகமற்புயந் தட்டி
வதைத்துப்பா ரிடங்களை
சிதைத்துக்கார் கடங்களை
உதைத்துத்தேர் படங்களை
சதைக்கப்போ ரிடங்களை
வானவருங்கண் டுளத்திற் கிலி பிடித்துத்துடி துடிக்கத்திரு
மாலயனுங்கண் டயிர்த்திட்டிட லலைத்துத்திகை திகைக்கத்துணை
மானவரஞ்சிக் கலைத்திட்டக மிளைத்துத்தவி தவிக்கத்தனி
வாகுவனைச்சென் றுறுத்துச் சிலை வளைத்திட்டொலி முழக்கிப்பல

(௩) அர்த்தசந்திர பாணந்தனைமனு
அக்கரஞ்சொலி யுச்சரித்தேயவன்
சத்தமேகமெ னப்பொழிந்திட்டிட ச
சண்முகன்றனைக் கண்டனிவீரனுந்
தாவிவந்தெதிர்ப் பட்டு
கூவிக்கர்ச்சனை யிட்டு
லாவியக்கணை தொட்டு
ஏவிப்பொரு தவிட்டு
தடுக்கப்பாண மிரண்டு
மடித்துவெஞ் சினங்கொண்டு
பொடித்துவீழ்ந் திடல்கண்டு
துடிப்புடனே வெகுண்டு
தாரவுணன்பன் மணித்தேர் விண் டலத்திற்சென் றதிர்க்கத்துணை
ஸாமியிவன்பொன் மணித்தேரப் புறத்திற்சென் றெதிர்ப்பினும்
வார்கடலண்டந் திசைக்கண் டம் புவிக்கண்டங் களுஞ்சக்ர
வானுலகுஞ்சஞ் சரித்திட் டொளி விரித்துப்பபை ஜொலிக்கப்பல

(௪) மத்தனுயிரம் பாணந்தனைக்குறி
வைத்திவன்மரு மத்திற்சொரிந்திடச்
சத்திவீரன் சகத்ரங்கணைகொண்டு
தூக்கியோது வாக்கினிலுஞ்சுர

தாரைவிட்டுப் பெருக்கி
சாரியிட்டு நெருக்கி
சோரவிட்டுத் தருக்கி
தேரைமுட்டி யருக்கி
தறிக்கக் கால்முதல்வீறி
தெறிக்கத் தூளெனநீறி
வெறித்துப் பாதகன்சீறி
மறுத்தோர் தேரினிலேறி
தாவவுடன்வில் வளைத்துக்கணை விளைத்திட்டெதிர் விடுக்கக்கடி
தாயிவனும்பல சரத்தைக்கொடு விடுத்திட்டெதிர் தடுத்திட்டபின்
மேவியவன்தன் னுரத்தைத் துளை துளைத்திட்டிட வருத்தச்சின
மீறியெழுந்தங் கடுத்திட்டிதழ் மடித்துச்சிடு சிடுத்திட்டொரு

(௯) தண்ணுறும்வரு ணாத்திரமவனெய்ய
தக்கவீரன ழற்கணையாற்கொய்ய
வன்மைவாயுப் படையையவன்றொட
மாற்றுநாகப் படையையிவன்விட
மாசுற்றிடுந் திருடன்
ரோசத்தொடு கருடன்
பாசத்தைவிரை வுடன்
வீசக்கண்ட திருடன்
வனத்துணைவனும ழுந்தி
யினிற்சினமுடன் செந்து
யெனக்கண்பொறிகள்சிந்து
முனைத்தெழுந் துயர்ந்தி
கானயவன் கட்சரத்தைத்துடி யாக விடுத்துத் தடுக்கப்படு
வானவுணன் கெக் கலித்திட்டெடு வாளியெடுத்துத் தொடுக்கப்புக
மானனந்திச் சரஞ்சென்றதை யறுத்திட்ட பகரித்திட்டிட
வானனம்பைக் கரங்கொண்டவ னெடுத்திட்டுப சரித்திட்டுடன்

(௰) நந்தியாத்திரத் திற்கெதிரேவிட
னைத்துமந்தசச ரத்தையும்பாரினிம்
சிந்தியேவிழச் செய்திடல்கண்டுசெந்
தித்துச்சூர்மகன் கைத்தனுவாலினிச்
சீரணித்தி வன்றனை
மாரணித்திட நினைத்
தேரணத்தினின்முனை
காரணுத் திரந்தனை

திடுக்குற்ற வனியேங்கி
நடுக்கமுற்றிட வாங்கி
தடக்கையின் மிசைதாங்கி
விடுக்கவது சென்றோங்கி
தேடிவளங்கொண்டடர்ந்தண்டங்கிழித்தப்பால்முனைத்திட்டதி
தீவரமாய் நின் றுடனந்திச் ச ரத்தைப்போய் வளைத்திட்டெதி
ராடல்புரிந்திட் டிரண்டுங் கா னடித்துக் கன விறைத்துப்புகை
யாயிடிமண்டித தெறிக்கப்போர் மிகுத்துக்கதிர் மறைத்துக்கொள

(எ) வன்மைசேர்வீர வாகுத்தலைவனிம்
மாச்சரியங்கண் டாச்சரியத் துடன்
ன்மனத்தக்க னல்லலுறச்செய்ம
சுத்தழலைய ழித்திடவேண்டியுங்
காரசத்தியின் ருத்ர
வேர்விலுதித்த புத்ர
கோரவுக்கிர வக்த்ர
வீரபத்திர னத்ரங்
கரங்கொண் டெடுத்துச்சாட
அரங்கன் படைகண்டோட
கிரங்கிய வுணர்வாட
இரங்கித்தேவர் கொண்டாட
காசுறுநெஞ் சத்தவுணன் பின் பாசுபதந்தொட் டிடச் சேனையர்
காவலனன்புற் றவனும்பா சுபதந்தொட் டிடப்பேரொளி
வீசியெழுந்திட் டிரண்டுங்கனல் சொரிந்திட்டமர் புரிந்தோர்கர
ரீதிலடைந்திட டபின் கண்டக னெழுந்திட்டக மிகுந்திட்டுயர்

(அ) அந்தரத்தின்ட றைந்திடச்சூரியன்
அர்பினுக்குள்ளு றைந்திடமாயைசொள்
மந்திரத்தையுச சாடனஞ்செய்துகு
மரன்மெய்த்துணை வீரர்கள்பூதரை
வாட்டமுற்றிடத் தாக்கி
சாட்டைப்பம்பர மாக்கி
ஓட்டிக்கடலிற் றாக்கி
வீட்டியுயிரைப் போக்கி
வடுப்படாதினி யின்று
நொடிக்குள்வருவா ரென்று
அடுத்தம்பரத்தி னின்று
விடுக்கவத்திரஞ் சென்று

வாலுலகஞ்சஞ் சலித்துக் கிறு கிறுத்துத் தவி தவிக்கத்திசை
மாநிலமுந்தத் தளித்துத் திகை திகைத்திட் டிரு ளதைக் கக்க
மானவனன்புத் துணைப் பூதரோ டிலக்கத் தொன் பதுவீரரை
வாடிமயக்குற் றிடப் பாதல கடற்குட் கொடு மடுத்திட்டதே.

வீரபாகுதேவர் முதலியோரை ஜயித்துவந்ததற்காகச் சூரன் பானுகோபனைச் சம்மானித்தலும், வீரர்களும் சயினியங்களும் அமிழ்ந்த கடற்கரை ஓரத்திலிருந்து தேவர்கள் வருந்துதலும்.

சந்த விருத்தம்

படிக்குறையு ளனச்சென்ன மெடுத்தவொரு கதிர்ப்பகைவன்
உரத்திலுறு தொடுத்தகணை குறட்குழுவில் வீரப்
படைத்தலைவர் களைச்சமரின் மயக்கியுயிர் பதைத்துருள
எடுத்தினிய சலக்கடலி லதிர்த்தலற வீசி
யடுத்திடலு மகிழ்ச்சியொடி ரதத்தின்மிசை குதித்துமிகு
செயப்பிரத மெனத்தனது தகப்பனிட மேவி
மகத்வமதை யுரைத்தபுதல் வனைத்தழுவி யணைத்துமணி
யணித்தொகுதி யளித்துமவ னிருக்கைபுக யேவி
விடுத்தடிசில் கனிச்சுவைகள் பொசித்துமிருக மதக்கலவை
தரித்தவுட னழைத்துமணி யிழைத்தமுடி சூடி
மிகத்தகுவ ரமைசசர்புடை கதிக்கவரி யணைக்குளவு
ளுருக்கிறைவ னிருக்கவதி வருத்தமொடு தேவ
ரடுத்தறுமு கனுக்குரிய துணைத்தலைவர் முதற்படைகள்
படுத்தபடு கடற்கரையி லயர்ச்சியொடு கூவி
யரற்றிவிழி வழிப்புனலை யிறைத்தவர்கள் விதிப்பயனை
நினைத்துடல மிளைத்துமுயிர் பதைத்துருகு வாரே. (உச)

(உஉ) கீர்த்தனம். இராகம் - ஆநந்தபைரவி—திருபுடைதாளம்.

பல்லவி.

ஐயோ குடிகெட்டதே - இன்னமும்கடிக்
கவலைக்கிடமாய்விட்டதே.

அநுபல்லவி.

ஐயோ சூரன்மகன் மாயாத்திரந்தொடுத்திட்டானே
அடற்பூதர்கள் வீரரைக்கடற்குள் மடுத்திட்டானே (ஐயோ)

௩௰

சரணங்கள்.

(க) துட்டவசுரராலே பட்டபாடுதொல்லையே
மூட்டமுடியவின்னம் விட்டுநீங்கவில்லையே (ஐயோ)

(உ) சுத்தோதகக்கடலிற் செத்தவர்பிழைப்பாரோ
சக்திதரனுமினிச் சமர்க்குவந்துழைப்பாரோ (ஐயோ)

(ஙு) துடுக்காமசுரரைமுன் னடித்ததெல்லாம்வீணாச்சே
மடக்கிக்கைகட்டினது வாய்க்கெட்டாமலேபோச்சே (ஐயோ)

(ச) பூதர்வீரரன்றிப் போர் பொருதச்சரிக்கட்டுமோ
யோதுஞ்சமரிலாளில் லாதபடைவெட்டுமோ (ஐயோ)

(ரு) சிஷ்டர்களெல்லாந்துன்பப் பட்டுவெலிகாலமோ
துஷ்டர்கள்தமக்கின்பங் கிட்டுங்கலி காலமோ (ஐயோ)

(சு) செருக்கியவுணரினி யொறுத்துவந்திடிப்பாரோ
துரத்தித்துரத்திவழி மறித்துவந்தடிப்பாரோ (ஐயோ)

(எ) முடுக்கிக்கடைந்துவெண்ணை யெடுத்துத்திரட்டும்போது
புடைத்துத்தாழியுடைந்தாற் போலாச்சுதே யிப்போது (ஐயோ)

(அ) மாபசுபதிதந்தவரத்துக் கிரண்டுண் டாமோ
கோபுரங்கண்டுங்கடும் பாபந்தீராமற் போமோ (ஐயோ)

(கூ) இனிமேலிந்தத்துயர மென்னாளில் விடியுமோ
பனகடயன்க்ருபையெப் படியாக முடியுமோ (ஐயோ)

பூதர்களும் வீரர்களும் சுத்தோதகக்கடலில் அமுக்குண்டதை நாரதமுனிவர் ஷண்முகனிடம் தெரிவித்தல.

விருத்தம்.

பொருப்புறுந்தேன் குளவியின்கூட் டினிற்றீ வைத்தாற்
போலமரர் புனிதநன்னீர்க் கடல்வாய் தன்னில்
வருத்தமடைந் தோலமிட்டுக் கதறும் போது
மாமுனிநா ரதனுடன்பா சறைக்குண் மேவித்
திருத்துணைவீ ரர்கள்முதலோர் வரவை நோக்கித்
தென்முகம்பார்த் திருந்திடுஞ்சண் முகனைப் போற்றிக்
கருத்துருகி யருட்கொனவே விரித்துச் சொல்லிக்
காட்டுவான் சினக்கனலை மூட்டு வானே. (உ௧)

(௩௩) கீர்த்தனம். இராகம் - முகாரி—அடதாளச்சாப்பு.

பல்லவி.

போச்சுதையா - ஷண்முகாமோசம்
போச்சுதையா

அனுபல்லவி.

ஆச்சுதுன்சேனைபாழாய்
அப்பந்தட்டியுங்கூழாய் (போச்சு)

சரணங்கள்.

(௧) மத்தன்பானுகோப ன்மாயாத்திரந்தொடுத்திட்டு
மருட்டிப்பூதர்வீரரைச் சுருட்டிக்கொண் டெடுத்திட்டு
சுத்தோதகக்கடலின் மத்தியில் விடுத்திட்டு
தொலைத்திடல்கண்டெமக்கு மலைத் துயிராசை விட்டு (போச்சு)

(௨) வெற்பின்வேடர்களிட்ட கொப்பர்தெரியாமலே
மேவிழும்மதயானை தாவிவீழ்ந்ததுபோலே
செப்பும்வீரவாகுவன் தப்பிப்பிழையாமலே
திகைத்தசுரன்மாயையி லகப்பட்டுக்கொண்டதாலே (போச்சு)

(௩) அறத்தைவளர்த்திடுங்கு மரனென்றெறிற்பேராக
அவதரித்தமரருக் கபயந்தந்து நேராக
ஒறுத்துப்படைகொண்டிங்கே நெருக்கிப்பலவாறாக
உழைத்தும்பலனில்லாமல் விழற்கிறைத்தநீராகப் (போச்சு)

உடனே குமரக்கடவுள்தன்வேலைவிடுத்து வீரா பூதர் முதலி யோரை மீட்டல்.

விருத்தம்.

நாரதமா முனிவன்மொழிந் திடலுங் கந்த
நாதனுங்கா லாக்கினிபோற் கோபங் கொண்டு
வாரிதிநீ ரேழையும்வாய் மடுத்து மிஞ்சி
வாளவுண னத்திரத்தால் மயக்க முற்ற
வீரர்கள்பூ தர்களையுயிர்ச் சேத மின்றி
மீட்டெழுந்து வாவெனவே வலக்க ரத்திற்
கூரிலைவே லாயுதத்தை யெடுத்துத் தாரங்
கொடுத்திட்டான் கடற்றிசைபால் விடுத்திட் டானே (௩௪)

(உ௬) கீர்த்தனம். இராகம் - [illegible]—சாப்புதாளம்

பல்லவி

வடிவேலெழுந்துபாய்ந்ததே - ஷண்முகன்செங்கை
வடிவேலெழுந்துபாய்ந்ததே

அனுபல்லவி

வடிவேலெழுந்துலகை - மடிக்குமூழிகாலத்தின்
இடிபோல்முழங்கியிடிக்க - அந்தரமீதில்
உடுமண்டலமும்வெடிக்க - திக்கயங்களும்
நடுநடுங்கியே துடிக்க - அஷ்டநாகமும்
மூடிகள்தகர்ந்துபொடிக்க - சினத்துடனே (வடிவேல்)

சரணங்கள்

(க) உறுத்திட்டேககாலத்தில் - வெறித்துக்கோடிசூரிய
னுதித்தெழுந்ததுபோலே - திரி
புரத்தைப்புன்சிரிப்புற்றங் - கெரித்தருத்திரனெனப்
புடவிமயங்க நோக்கியே விரிகடலில்
வடவையனலைத் தாக்கியே மலையின்கொடு
முடிகள்விண்டிடப்போக்கியே வரைந்துசென்ற
கடலையிருளை நீக்கியே தீவிரமாக (வடிவேல்)

(உ) அத்திக்கிறைவருணன் - மெத்தப்பயந்துகும்பிட்
டசுரர்செய்யிடர்கூறவே - அருண்
முற்றிப்புவனமெங்குஞ் - சுற்றிவிண்டலமதை
மூளைந்திட்டடர்ந்து விட்டியே அமரர்கள்பட்
டினத்தைக்கண்டெதிர்முட்டியே அண்டகட்கம்
அனைத்துங்குதற வெட்டியே கதிர்முனைச்செங்
கனற்பொறிகளைக் கொட்டியே வேகமதாக (வடிவேல்)

௩) உவர்க்கடல்கரும்பினி - ஏறுங்கடல்மதுக்கடல்
உயர்ந்தநெய்க்கடலுடனே - மிகு
சுவைப்புறுந்தயிர்க்கடல் - பாற்கடலையும்வளஞ்
சுருங்கவரன்றி யெடுத்து நித்திரைசெய்யும்
அரங்கன்கோயிலை விடுத்து சுத்தோதகத்
தரங்கவாரி சென்றடுத்து பகையில்வாடில்
உரங்கொண்டுறிஞ்சிமடுத்து உக்கிரமாக (வடிவேல்)

(௪) கனித்துச்சூர்ன்மகனுல் - விடுத்தமாயப்படையைக்
கனத்தித்துணுக்காய்த்தறிக்க – உயிர்தெளிந்து
மனித்தின்புயவீரரு - மணிப்பூதர்களுமன
மகிழ்ச்சிகொண்டெழுந் திடவே சூரனதுகேட்
டிகழ்ச்சியுள்ளமுந் ' திடவே முனிவராகி
மிகத்துதிமொழிந் திடவே பூமலர்மாரி
மிகத்தேவர்பொழிந் திடவே சுந்தரமாக (வடிவேல்)

கடலினின்று மீண்டுவந்த பூதாவீராகள் சக்திவேலைத்துதித்தல்.

விருத்தம்

மதத்தசுரன் மகன்விடுத்த மாயை நீங்கி
வறுத்தபய றெழுந்துமுளை யுதித்தாற் போலச்
சுதைக்கடலிற் றரந்தரமா யனைய கோடி
சூரியர்க ளொருபுடையாய்ச சூழ்ந்தாற் போல
நிதிக்குமரன் றுணைவீரர் பூத ரெல்லாம
நிட்களங்க மாயுயிர்பெற் றெழுந்து கந்தன்
பதத்தினிலன் புதித்துவந்து துதிகள் சொல்லிப்
பாடினர் சத்தியைக்கொண் டாடி னரே (உஎ)

(உ௫) கீர்த்தனம் - இராகம் - இந்துஸ்தான் காபி—ஆதிதாளம்.

பல்லவி.

தாங்கிய வேற்படைக்கலமே - என்றும்
சாங்களெல்லா முன்னடைக்கலமே - புகழ் (தாங்கிய)

அனுபல்லவி

தீங்குறும்பாதகத் திறளவுணர் தங்களை
ஏங்கும்படி செய்துகன் ணிமைமேலவே யெங்களை (தாங்கிய)

சரணங்கள்.

(க) நீயவனஸ்திரத்தாற் காயமெல்லாங் தட்டுண்டு
இயங்கிச்சுத்தவாரியின் மயங்கிமிகத்தட்டுண்டு
மாயும்பொழுதிற்பெற்ற தாய்போலவேகைதூக்கி
யலைபோல்வர்துன்பத்தைப் பனிபோலவேநீக்கி (தாங்கிய)

(உ) தனித்தனியாயுலக மனைத்துமீன்ற ளித்தாயே
சாருமுயிர்க்கெலா மாதாரசத்தியும் நீயே
வனக்குமரன் சொல்லேவற் பணிக்கிங் கெழுந்துசென்று
மலைத்தமாயையை வென்று - தலைப்பொறியாக நின்று (தாங்கிய)

(௩) மழைக்குச் சரியாக வே வையகத் தோர்களாலே
வழங்குந் தன்மைகளுண்டோ உனங்குளிர்ந்தன்பினாலே
பிழைக்கவுயிர்தந்திங்கே யுழைத்ததற்குக் கைமாறாய்
பேதையாகிய நாங்க ளேது செய்குவோங்கூறாய் (தாங்கிய)

பானுகோபனை சங்காரம் செய்யாமல் ஷண்முகநாதனிடம் தான் செல்வதில்லையென வீரபாகுத்தேவர் போர்க்களத்தில் சபதஞ்செய்யல்.

விருத்தம்

சாரதரும் வீரருமிவ வாழு போற்றிச
சத்திவடி வேற்படையி னருள்பெற் றூர
வாரமுட னெழுந்திர ண களத்தில் வந்து
வகைவகையா யணிவகுத்தங் கிருக்கும் போதில்
கோரனெனும் பானுகோ பனைக்கொல் லாமற்
குமரனிடத் துயிர்கொடுநான் செலே னென்று
வீரவாகுத் தலைவன்சினங் கொண் டிந்த
விதஞ்சொல்வான் சபைதனிற்ச பதஞ்சொல் வானே (உ௮)

(உ௯) கீர்த்தனம். இராகம் - காம்போதி—ஆதிதாளம்.

பல்லவி

மடித்திட்டவன்றலையைத் துணித்திடாவிட்டால்நான்கு
மரனுக்கடிமையல்லவே

அனுபல்லவி

அடிக்குமிஞ்சின ஆண்மையுண்டோமண்டமுரித்சென்
றடுத்துக்கொடுங்கணைகள் தொடுத்துப்பானுகோபனை (மடி)

சரணங்கள்.

(௧) எட்டிமயேந்த்ரபுரிப்பட்டினத்தின்மதிலை யிடித்து
படையோடுஞ்சென்
றெதிர்த்தபடைகள்தன்னையுதைத்துக்கவைகளைக்கொண் டடித்து
என்றன்கைவாளால்
வெட்டித்தலைதலையாய்க் கொட்டிப்பிணமலைகளி
கிட்டியண்டமுகட்டை முட்டும்படிக்களத்தில் (மடி)

(௨) கொத்தகலமங்கையர் சுற்றியலறிவிழுந்தழுக
சூரன்கேட்டுள்ளங்
கொதித்துப்பதைத்துக் கண்ணீருதிர்த்துத்துயரக்கடலில்முழுக
பகைவன்றன்னை
குத்திமணிக்குடலின் பித்தைப்பிடுங்கியேவ
ளைத்துநாய்நரிகளும் பற்றியிழுக்கும்படி (மடி)

(௩) திரட்டிச்சேனையையென்றன்பொருட்டிற்பலிகொடுத்துச் சுளித்து
வெறுங்கையனாய்ச்
சீற்றங்குலைந்தெனக்குத் தோற்றுவேகமண்டலத் தொளித்து
மாயையினாலே
மருட்டியெங்களை வாரிச்சுருட்டிப் பருங்கடலி
லுருட்டித்திகைக்கச்செய்த திருட்டுப்பயலையினி (மடி)

உடனே வீரரும பூதரும் மேற்குப்புறத்து மதிலையிடிக்க, அதை அறிந்து சூரன் வெகுண்டு புலிமுகனைப் போருக்கனுப்பல்.

விருத்தம்.

வீரவா குத்தலைவன் சபதங் கூற
வீரர்கள் பூதர்களுடனே [illegible] யாசற்
பாரமதின் தனையிடித்திட் டார்க்குஞ் செய்தி
படிறவுணன் றெரிந்துடனே வெகுண்டு நோக்கி
கோரமிகு புலிமுகனை யழைத்திப் போதே
கொடியவ சுரப்படைகொண் டெழுந்து நீபோய்ச்
சூரதவீ ரர்களையெல்லா மழித்து மண்மேற்
சதியென்று வினுவுனக்கு விதியென் றானே ([illegible])

(உஎ) தீபதை. இராகம் - சங்கராபரணம்—அடதாளம்.

(க) செப்பியசூரனனுப்பப்புலிமுகன்
சேனைத்திரளுங் கைக்கொண்டானே - இகல்
மற்புயவீரர்மலைப்பூதர் தங்கிய
வாசலைப்போயெதிர் கண்டானே

(உ) பொற்குதையுய்யைபெடுத்தசுரப்படை
பூதப்படைமேல் விடுத்தாரே - பூதர்
கற்கொண்டுந்தண்டுங்கொண்டக்கணந்தானவ
ரைப்பிணமாக மடுத்தாரே

(ந) மற்றவுணரளவற்றசரத்தினல்
வாட்டியேபூதரைச் சாய்த்தாரே - மிகு
வெற்றியுடன்சிலபூதர்மரங்களை
விட்டசுரருயிரை மாய்த்தாரே

(ச) மிண்டசுரர்களைக்கண்டதுண்டமாக
வெட்டிப்பூதப்படை சாடவே - ரத்த
மண்டிக்களமெங்குங்கண்டர்கள்தலை
மண்டைகளாயுருண் டோடவே

(ரு) சூரர்மடியப்புலிமுகன்கண்டொரு
சூலங்கைக்கொண்டு குதித்தானே - யினிப்
பாருங்களைக்குத்திக்கூறிடுவேனென்று
பாய்ந்துபூதர்முன் னெதிர்த்தானே

(சு) வந்தவசுரனுரந்தனிற்பூதர்ம
லைமரங்கள்விட்டுத் தாக்கவே - யதைக்
கந்துகந்தாய்மண்ணிற்சிந்திவிழவவன்
கைச்சூலத்தாற்பொடி யாக்கவே

(எ) கண்டதைப்பூதரிற்சிங்கனுஞ்சூலங்கைக்
கொண்டுடனேயெதிர் மேவியே - யம
னண்டையிற்கொண்டுபோய்க்கொன்றுடனேவிருந்
தாக்குறேன்பாரெனத் தாவியே

(அ) துடுக்கிவன்பேசவும்புலிமுகன்சிறியோர்
சூலம்போடச்சிங்கன் சாய்ந்தானே - தெளிந்
தடுத்தந்தச்சூலங்கொண்டிவனடிக்கமண்ணில்
அலறிப்புலிமுகன் மாய்ந்தானே

பூதப்படையும் வீரரும் வீரமகேந்திர நகர்க்கோபுரத்தை இடித்து அசுரரைமடித்தல். வீரபாகுதேவர் அக்கினியாஸ்திரத்தை ஏவி அந்நகர் முழுவதையும் அக்கினிவாதையால் தவிக்கச்செய்தல், அவ்வக்கினியாஸ்திரத்தை அழித்துவரும்படி சூரனேவிய சப்தமேகங்களை வீரபாகு வடவாக்கினியாலழித்தல். இதைக்கேட்டுக் கோபங்கொண்டெழுந்த சூரனுக்கு அவன்மகன் இரணியன் புத்தி கூறல்.

விருத்தம்.

புலிமுகனிப் படிபடிய மகிழ்ச்சி கொண்டு சீரொடு
பூத ரெல்லாம்
பொருமதிற்கோ புரமனைத்துங் கல்லுபொடி டாயிடித்துப்
புறத்தி லுள்ள
வலியவசு ரரைமடித்து நகர்முழுதுந் தீப்பிழம்பால்
மயமாகி யேக
வாள்வீர னக்கினியாத் திரமனிலாத் திரக்கைவிட்டு
வாட்டும் போது
கொலையவுணன் கேட்டவுட னேழுமே கத்தையவர்க்
கூவி யந்தக்
கொடுங்கணையை யவித்திடுமென் றனுப்பவது வருதல்கண்டு
குறித்து வீரன்
ஒலியவட வாக்கினியை விடுத்ததனை யுண்டிடக்கேட்
டுறுமிச் சூர
னேங்கியெழுந் திடும்பொழுதங் கேதுவா யிரணியன்வந்
தோது வானே. (௩௰)

(௨அ) கீர்த்தனம் இராகம் - ஸாவேரி—ஆதிதாளம்.

பல்லவி.

ஆறுமுகவனை - வேறுபொருளாய்நினைக்
காதேமோசம்போகாதே - அகிலமுழுதுநிறைபரம்பொருள் (ஆறு)

அனுபல்லவி

தேதுமாயன்பிரம - னுருத்திரனீசன்சிவன்
கூறுஞ்சக்தியுமொன்றுகூடியவதரித்த (ஆறு)

சரணங்கள்.

(க) கலக்கமுற்றமரர்விண்டலத்தைவிட்டெழுந்தோடி
கயிலையோடி
கறையுற்றகண்டன்முன்னேமுறையிட்டலறிவாடி
துதிக்கஈசன்
அலர்ச்செழுங்கரந்தீலபயப்ரதங்கொடுக்க
அனற்கண்களினுல்றவிஃப்பொறி விடுக்க
அஜீர்த்தெழுந்துசுர
நதிக்குள்வந்துசர
மதிற்படிந்துகரு
வுதித்தசுந்தரகு
மாசித் பாதற் பாகுரு பானுகிய (ஆறு)

(உ) காயுமென்னண்ணன்விட்டமாயப்படையும்போச்சே
ஐயாநமது
கட்டுக்களும்பலமுங்குட்டுங்குலைய லாச்சே
படைகொண்டங்கே
போயிங்குயிர்பிழைத்துவந்தவ ரிலேயே
புறச்சுவரில்முட்டவெள்ளெழுத்துன்டோசொலேயே
புதைத்தழும்புபட
வுதைத்தெமன்றனைமுன்
வதைத்துமைந்தனிடர்
சிதைத்துவந்தழியா
வரமுற் றருள்ருத் திரர்புத் திரனுகி (ஆறு)

(ங) தத்துஞ்சுத்தவாரியிற் செத்தோர்பிழைத்த போதே
நம்மால்வீரர்தன்
தடக்கைப்பின்விரலினை மடக்கவுமுடி யாதே
பாடிப்பாடியே
குத்திடினும்பதரி ல்ரிசியுண்டாமோ
குறைவுறுங்காலமென்ப தறிய வேண்டாமோ
குலவையிட்டணிக
ளிலகுபட்டினம
திலையிடித்தசுரர்
குலையவெட்டிமிகு
ஜயமுற் றியமற் புயன்மெய்த் துணையாகிய (ஆறு)

(௪) படைத்தநல்வரங்களையவத்தினிற்றொலைக்காதே
வேங்கைப்புலிமுன்
பாடுறுநரியூஞ்சலாடுமோ மலைக்காதே
தேவரைமுன்போல்
இடுக்கண்செய்யாமலிதத் தொடும்பாது காத்து
இந்திரன்மகன்சிறை யிடும்பையுந் தீர்த்து
இனிக்கணுவினிலு
மனக்குரோதமதை
நினைப்புறாமற்புக
ழுனக்குண்டாகியுயிர்
நிலைபெற் றுலகிற் பலனுற் றிடவெனிலினி (ஆறு)

சூரன் இரணியனைக்கடிந்து மறுமொழிகூறல.

விருத்தம்.

புத்திமைந்த னிரணியனிவ் வாறு கூறப்
பொங்கியெழுந் தைம்புலனும் புழுங்கிச் சூரன்
கைத்தலத்தை நெறித்துமண்மே லறைந்தீ தென்ன
காலவிப ரீதமதற் கேது வாய்நீ
சத்துருபட் சத்தையென்பாற் புகழ்ந்து பேசித்
தாழ்த்திநம்மைப் பயமுறுத்த வந்தா யிந்தப்
பித்துனக்கேன் பிடித்ததென்று சினமேற் கொண்டு
பேசுவான் மகனையிகழ்ந் தேசு வானே. (௯௧)

(௨௬) கீர்த்தனை இராகம் - சௌளிபந்து—ஆதிதாளம்.

பல்லவி.

ஏதடா - உனக் - கிந்தத்துற்புத்திவந்த
தெவன்செய்போதனைசொல்லடா.

அநுபல்லவி.

ஏதடாநீவிதண்டா - வாதம்பேசியென்முன்சிற்
றெறும்பைப்பெரும்பூதமென்
றெண்ணிப்பயந்தவன்போல்
வெறும்பயித்தியங்கொண்டிங்
குறுமிப்புலம்புகிற (ஏதடா)

சரணங்கள்

(௧) ஒடுங்கியுடலம்நடுங்குறவே தனுட்டினுக்கிளைத்
திடுங்கிழப்புலியு முண்டோ - பூனையைவிழுங்
கிடும்பொல்லாவெலியு முண்டோ - கந்தனுடன்
இடங்கொண்மாயன்முதலோ - ரடங்கிலுந்திரண்டென்னை
எதிர்த்திடினுமென்கையாற்
சிதைத்துவாரிவாரியுண்
டேப்பமிடுவெனிறு
மாப்பையறிந்திருந்தும் (ஏதடா)

(௨) அலைகடலின்மீன்கொண்டு பெலிவுடனேசுமந்த
தலையுஞ்சும்மாடேயாகவே - அவரவர்கள்
மலைகுலைந்தோடியோகவே - இந்திராதிதேவர்
உலகைமுழுதுந்தப்பிட்டலறிமங்கையரைவிட்
டேக்கமிழந்தவர்கள் கூக்குரலிட்டெழுந்தங்
கொண்டகிழவில்லாமற் றிண்டாடுவதறிந்தும் (ஏதடா)

(௩) பரர்க்குமணங்கிபண்ணிற்றரித்திடுமெனிலுயிர்
பறித்திடல்குணமல்லவோ - இனியுனக்கு
விரித்துநானென்ன சொல்லவோ - குண்டத்தழலி
லிரத்தஞ்சொரிந்துயிரை வெறுத்துத்தவஞ்செய்ததற்
கீசன்றந்தவரப்ரசாதங்களையெண்ணாமல்
இணங்கிக்குமரன்றன்னை வணங்கிப்பிழைக்கச்சொன்ன (ஏதடா)

பிறகு இரணியன் அமரக்கோலம் பூண்டு இரணகளத்திற்கு வர அவன் சரிதையை நாரதர் வீரபாகுதேவர்க்குக்கூறல்.

விருத்தம்.

இடுக்கிடவே சூரனைநீ திடனுமக னிரணியன்சிந்
தித்தி வன்றன்
தீவினையானதுமுதிர்ந்து பலன்கொடுக்குங் காலமது
சீக்கிரம்வந்
தடுத்ததனை லெனதுகரும் பானமொழியானதுவேம்
பாச்சு தென்றே
அக்கணந்தந் தையைப்பணிந்து விடைபெற்றமராக்கோல
மணிந்துகொண்டு

கடற்றானை நாலுசகத் திரவெள்ள மதுணரொடு
கடபால் யானை
கதித்திடுபெண் ணூறுவெள்ளங் களுஞ்சூழ வாயிரஞ்சிங்
கமது பூண்ட
முடித்தேர்கொண் டிரவிலமர்க் களத்தில்வர நாரதமா
முனிவன் கண்டு
முனைவீரன் டக்கவில்லவந் தெழுகின்றா னவன்கதைதனை
மொழிகின்றானே (௬௨)

(௬ய) கீர்த்தனை இராகம் மாஞ்சு—ஆதிதாளம்.

பல்லவி

வீரபராக்குதேவமேரசேகரும் - இரணியனிவன்செய்தி

அனுபல்லவி,

சூரன்மைந்தர்களிலே - ராவுபயமுடைய
சுத்தவீரனிவன்ச - ரித்திரந்தனைநன்றாய் (வீர)

சரணங்கள்

(௧) பாசில்லாதவரங்கள் பெற்றோன் - இந்திரஜால
மாயாவித்தைகளெல்லாங்கற்றோன் - சிவனிடத்திற்
பாசுபதங்கள்முதல மீசுரமானதெய்வப்
படைக்கலங்களுங்கொண்ட துடுக்கனிவன்செய்கையை (வீர)

(௨) சண்டனுலகைத்தூளா யடித்தான் - குபேரன்பொக்கி
ஷங்கள்முழுதுங்கொள்ளை யடித்தான் - விண்டலமதில்
அண்டர்களனைவரும் மண்டியலறும்படி
அடித்துத்துரத்திக்கட்டிப் பிடித்துச்சிறையிலிட்டான் (வீர)

(௩) வருங்காலத்தின்கதிகள் தெரிந்தான் - குமரன்செந்தா
மரைமலரடிக்கன்பு புரிந்தான் - சூரன்றனக்கு
மருந்தனையமதிகள்பொருந்தவுரைத்ததனை
மறுத்திட்ட தாலவனை வெறுத்திங்கேபுறப்பட்டான் (வீர)

இரணியனுக்கும் வீரர்களுக்கும் நடந்தசண்டை.

விருத்தம்.

மிக்கமுனி நாரதனிவ் வாறு கூற
வீரவா குத்தலைவ னுணர்ந்து கொண்டு
பக்கநின்ற துணையிலக்கத் தெண்ம ரோடு
பாரிடவீ ரத்தலைவர் தம்மை நோக்கி
சக்கிரயூ கமும்வளைத்திங் கெதிர்த்து வந்த
தறுகணிர ணியனைப்போய் வளைந்து நீங்க
ளிக்கணம்போ ரிடுமெனத்தந் திரமுஞ் சொல்லி
யேவினான் றானுமங்கே மேவி னானே. (௩௩)

(௩௧) கீர்த்தனம். இராகம் - சாரங்கா—அடதாளச்சாப்பு.

பல்லவி.

அதிர்த்துலக்கம்வீரரு - மதத்தவிரணியனோ
டெதிர்த்துப்போர்புரிந்தாரே

அனுபல்லவி.

விதிர்த்தமழுக்கத்திகள் - முதிர்ச்சக்கரஞ்சூலங்கள்
வீட்டுங்குலிசமெறி யீட்டிபிண்டிபாலங்கள்
மதத்துடனேபிடித்துக் குதித்துக்குதித்துச்சென்று
வாகையுடனேசக்ர யூகம்வகுத்துநின்று (அதிர்த்)

சரணங்கள்.

(௧) பூதப்படையடர்த்து சீறி - வசக்கண்டெதிர்
பொங்கியிரணியன்றே ரேறி - வில்லைவளைத்துப்
போதிலாயிரங்கணை பூட்டி - சாரதர்களைப்
புரட்டியலறவீழ்த் தாட்டி - பொருதும்வேளை
ஓதும்புகழ்நீலன்வாள்கொடுகசை யிறுக்கி
ஒடித்தோர்பழுமரத்தைமெய்த்துன் றுறுக்கி
பாதகனிரதத்தைமோதியே நொறுக்கி
பாருனைக்கொல்வேனென்றுசீறிக்கை முறுக்கி
பருத்தபுயந் தட்டி
உரத்தெழுந்த தட்டி
படைத்திரளைவெட்டி
மடித்திடவு மெட்டி (அதிர்த)

(உ) மறுத்தோர்தேரினிலவன்றாவி - ஆயிரங்கோடி
வடிமுகக்கொடுங்கணை யேவி - விடக்கண்டிவன்
பொறுத்தெழுமலைவிட்டுத் தாக்க - காதகன்றேரைப்
பொடித்துவிண்ணினிலெழப் போக்க - வஞ்சனுருவை
மறைத்துவிண்டலத்தில்வேறிரதங்கொண் டடுக்க
வளைத்திவனவனைப்போய்வழிகட்டித் தடுக்க
உறுத்தவனிவன்கையைப்பிடித்தறை கொடுக்க
உதைத்துநீலனவனிரதத்தைக்கீழ் ழ்டுக்க
உருக்குலைந்து தட்டுண்
டிருக்கநிலை கெட்டு
உளக்கவலைப் பட்டு
களைக்கவுமுன் னிட்டு (அதிர்த்)

(ங) மெத்தவினையங்கொண்டு நண்ணி - அவுணன்றன்போல்
விளங்கமாயையொன்றுண்டுபண்ணி - வைவுமது
சுற்றிநீலனைவந்து வளைக்க - நீசமென்றதைத்
தூரத்திச்சண்டைசெய்திவன்களைக்க - அந்தவேளையுன்
மத்தனிவன்மீதின்பாயாத்திரக் தொடுக்க
வாகுத்தலைவன்ஞானவேல்விட்டு மூடுக்க
பொய்த்தமாயையனைத்துமெய்த்துக்கீழ்ப் படுக்க
புயத்தன்மேலவன்கணைசகத்திரம் விடுக்க
பொடித்துகளாய் விண்டு
நொடிக்குள்விழக் கண்டு
பூதர்கதை கொண்டு
மோதக்களி கொண்டு (அதிர்த்)

இரணியன் தன்னுருவை மறைத்து மீனுருவங்
கொண்டு கடலில் மறைதல்.

விருத்தம்.

சினங்கொண்டு வீரனின்ன முனைந்தெழுந்தோ ராயிரமாஞ்
சிலிமுகத்தைச்
சிக்கெனவிட் டிரணியன்றேர் பரியையும்பா கனையும்விழச்
சிதைத்து மப்பா
லினங்கொண்ட பாணசமுகங்கணிறைந் திடுஞ்சரக்கூட்
டினையுங் ணையா
லெடுத்தநிலை யையுந்துகளாய்ப் பொடித்தவன்றன் படையனைத்தும்
மிறுதி செய்ய . . . . . .

மனங்கொண்ட துயரமதால் மயங்கியவன் கொம்பிழந்த
மந்தி யாகி
மறுத்தினிரா னமர்புரிந்தா லிறந்திடுவேன் ஷண்முகன்கை
வடிவே லாலே
கணங்கொண்ட தந்தைமுத லிறந்திடுவா ரவர்கடனைக்
கழிக்கவென்று
கருங்கடலிற் புகுந் துருவை மறைத்துயிர்மேல் மலாமுன்
கயலா னனே. (௧௪)

அக்கினிமுகன் யுத்தம்.

பின்னும் விருத்தம்.

கடலின் மணிய ன்மறைந்தா னிருளை நீக்கிக்
கதிரவனு முதித்தெழுந்தான் மாக மோடி
அடலமரி னடந்ததைச்சூ ரனுக்குக் கூற
வக்கினிமா முகனதுகேட் டையா னான்போ
யடர்புரியும் பகையருயிர் குடிக்கிட் டென்றா
லிக்கணமே வருவனென விடைபெற் றேங்கித்
கடமிருந்த தேர்பரியோ டளவி லாத
தளங்கொண்டா னெழுந்துசமர்க் களங்கண் டானே. (௧௫)

(௬௨) தீபதை இராகம் - பியாகடை — ஆதிதாளம்

(௧) கண்டவுடனசுரர்வெ குண்டுபூதரைச்சுற்றிக்
கனன்மழையெனவம்ப சாய்த்தாரே - பூதர்
தண்டுங்தோமரங்களுங் குண்டுவளைதடியுங்
கொண்டசுரப்படையைத் தேய்த்தாரே

(௨) மடுத்திடக்கண்டசுரர் திடுக்கென்றெழுந்துசிலர்
வாய்விட்டலறியோட் டமெடுத்தாரே - அப்போ
தடுத்தமேகன்சோமனும் படைத்தலையசுரரும்
அதிர்த்துப்பூதர்மேற்சரந்தொடுத்தாரே

(௩) வீரரெண்மரிலதி தீரனுகியவிகல்
வீரபுரந்தரன்வந் தெதிர்த்தானே - கையில்
வார்சிலைகொண்டம்புகள் அறிமேகனையுஞ்சோ
மனையும்புரட்டிமண்ணில் மிதித்தானே

(௪) பொக்கெனச்சரங்கள்தொட் டக்கினிமுகன்பாய்ந்து
பூதப்படையைமண்ணில் முடித்தானே - தேவர்
மெய்க்கும்படிசரந்தொட் டக்கினிமுகன்மீதில்
வீரபுரந்தரன்விட் டடித்தானே

(௫) தொடுத்தசுரனதனைத் தடுத்துப்புரந்தரன்கைத்
தூணியையும்வில்லையு மொடித்தானே - பின்னும்
முடுக்கிக்கொடுங்கணைவிட் டடிக்கப்புரந்தரனு
மூர்ச்சையாய்விழுந்துயிர் துடித்தானே

(௬) பாரிலவன்விழுமுன் மெருவருமுன்
பாய்ந்தசுரன்மேற்கணை தொழுக்காமே - மற்றும்
யுதங்கணைவிட் டயன்கைச்சிலைதனையும்
தேர்பரியையுந்துணித் தழித்தானே

(௭) மலைத்துத்தெளிந்தக்கினிமுகனெழுந்து
மறுத்தேரிதன்மீதில் தாவினான் - உயர்
லைக்குநிகவுமையுமொன்றாகருளியசி
வாஸ்திரத்தைத்தொடுக்க வேவினான்

(௮) மனத்திலதனைவீரர்கணப்படையென்றசன்மேல
ருத்ராஸ்திரத்தைவிட்டுக் கடிந்தானே - அந்தப்
படைதனையுமூட ன்படையிவர்களைப்
பட்டவெயமீரு படிந்தானே

(௯) பாரில்வீரமடியப் பார்ட்டாட்டபுஜ
பலவீரன்கண்டுசினந் கதித்தானே - கதிர்
காரவாளகொண்டுடன் றுறயோசனையினின்
றக்கினிமுகனெதிர் குதித்தானே

(௰) நெற்றிநேரிற்சிலைவளைத்தவன்மீதில்வீரனை
நெறுநெறெனச்சரங்கள் தூறினான் - அவன்
சுற்றும்பரித்தேரைத்தொலைத்திடக்கண்டசுரன்
மற்றொருரதமீது மேறினான்

(௰௧) கதித்ததேவாஸ்திரந்தொட் டடுத்தவனெறிவந்த
கனகமணித்தேரையுஞ் சிதைத்தானே - மார்பில்
பதித்தகவசத்தையு மொழித்தவன்மீதிற்குத்தப்
பாரில்விழுந்தசுரன் பதைத்தானே.

(௰௨) பதைத்தசுரன்விழுந்து துதிக்கத்தன்னகர்க்காவல்
பத்ரகாளிவந்தெதிர் நின்றாளே - உன்னை
எதிர்த்தபகைவனையான் சிதைக்குறேனெனசூல
மெடுத்துக்கொண்டமர்க்களஞ் சென்றாளே

(௰௩) சென்றவள்சூலங்கொண்ட டர்ந்துவீரன்பேற்சாடத்
திடுக்கெனவீரன்பறித் தொடித்தானே - அவள்
கன்றிமற்றொருசூலங் கதிகொண்டெறியவீரன்
கதைகொண்டதையுபண்ணிற் பொடித்தானே

(௰௪) பொட்டெனக்காளியுந்தன் னெட்டுகைகளாலுனைப்
படைப்பேனென்றிவன்மீதி லோங்கினாள் - வீர
னெட்டுக்கையையுபிடித் தொருகையாலவள்மார்பில்
இடிக்கக்கலங்கியவ ளேங்கினாள்

(௰௫) இடிப்புப்பேசிய காளி உடம்பெங்குமுருவிப்போ
லிரத்தம்போடக்கதறி யழுதாளே - எனக்
குடிப்புவேண்டாமுலகமை விடுமென்பதுபோற்பின்னு
முயிர்தெளிந்துவீரனைத் தொழுதாளே

(௰௬) பழைத்தாளை யென்க்கண்ணீ ருதிர்த்துத் துதித்துனைப்போல்
வல்லவரிலையெனக்கொண்டா டாடினாள் - காளி
பிழைத்தமெனதுதலை முனைநகைபோதுமென் றுயிர்
பெற்றெழுந்தவள் தப்பி யோடினாள்

(௰௭) அக்கினிமுகனிங்கெதிரூந்துவீரன் மீதிலோர
அயனஸ்திரத்தைவிடுத் திட்டானே - மாற்றித்
தக்கவன்வீரபத்திரர்க்கணையைவிடுத்துச
சாடத்தழன்முகனும் பட்டானே

(௰௮) சண்டைக்களத்திலிரு பதினாயிரவசுரத்
தலைவரும்விழுந்துயிர் பிரிந்தாரே - வானி
லண்டரெல்லோருமிதைக் கண்டுடல்டாவச
மாகிப்பொன்மலர்மழை சொரிந்தாரே.

இறந்த எழுவீரருக்காக வீரபாகுதேவர் இரங்கல்.

விருத்தம்.

விக்ரமவீ ரனையமரர் புகழ வேழு
 வீரன்றித் துணைவர்கள்பூ தர்களுங் கூடி
பக்கலுற வெழுவருமெங் குற்று மரன்னைப்
 பகைவன்விட்ட வரன்படையா லிறந்தா ரென்றே
உக்ரனெனும் பூரனைத் திடவும் வீர
 னுயிர்த்துணைய பங்களங்கண் டுருகி வாடித்
துக்கமெனும் படுகடலின் மூழ்கி யுள்ளஞ்
 சோர்பின னழுதுயங்கித் தேம்பி னானே. (௫௬)

(௫௫) திபதை. இராகம் - ஆனந்தபைரவி—ஆதிதாளம்.

(க) மன்பானுதாரமாகிய - தம்பிமார்களேகளத்தில்
இறந்தீரோ - என்னைத் - துறந்தீரோ பாரில்
வெம்பிடாமல்தன்பிள்ளையையும்பேய்க்காணவைப்பதுண்டோ
வீரர்களே - அதி - சூரர்களே.

(உ) க்ஷணமாகிலும் உங்களைநான் - இணைபிரிந்தாலும் மனம்
சகிப்பேனோ - நீர் - மகிழ்ப்பேனோ முன்னைக்
கணைவிழியிமைபோலென்றும் - துணைபடிவீரரெனென்னைக்
காத்தீரோ - இன்று - தீர்த்தீரோ

(௩) பெட்டிமணிபோலிலக்கத் - தெட்டுவீரர்களுடனே
பிறந்தேனே - புகழ் - சிறந்தேனே நல்ல
கட்டம்புதனிலோரய்ப்பு - தொட்டுருவினலுங்கட்டுக்
கலையாதோ - நலம் - குலையாதோ.

(௪) பவக்கனன்முகனுடனே - பலநூதடார்ந்தமர்செய்யாமல்
படுத்தீரே - உயிர் - கொடுத்தீரே பரும்
சவைக்குள்வாய்மறந்தவனும் - சமரிற்கைமறந்தவனும்
சடமல்லவோ - முழு - மடமல்லவோ.

(௫) அம்புலிதான்கணையை - அக்கினிச்சாரமென்றெண்ணம்
ஆனீரே - மோசம் - போனீரே மழைக்
கும்பிருட்டானுலுமந்தி - கொம்புதடுமாறிப்பாரிற்
குதியாதே - தப்பி - மிதியாதே.

(௬) தொடங்கியபோசிறுங்களை - தொடர்ந்துபின்வாராமல்பதி
சோர்ந்தேனே - விட்டுப் - பேர்ந்தேனே மிக்க
அடர்ந்துபடர்ந்தகிளைகள் - ஒடிந்தபழுமரம்போலே
ஆனேனே - தனி - ஆனேனே

(௭) இடத்துடன் ஷண்முகநாதன் - இடத்தினிலநடந்தெப்படிச
செல்வேனோ - நிதைச - சொல்வேனோ பணி
விடைத்துணைவீரர்களைப்பறி கொடுத்தபாவியான எனமுன்
விழிப்பாரோ - மனம் - செழிப்பாரோ

பிறகு வீரபாகுதேவர் இயமனுக்கு நிருபமெழுதி
ஏழுவீரர்களை மீட்டல்.

விருத்தம்.

[னறை
இந்திரன் மைந்தனாகிய தேவர் துயரொழிந்துணியடையவும் பாண மொ
யிசைபலாக கபதி வெடுத்தொரு நகரத்திலெழுபவர்களை மருவு
மீசனது திருநுதற்கண்விலுறு பொறியாமெழுந்திவந்த சரவணத்து
ன்னிதுடனுதித்தஷண்முகக்கடவுளுக்கியன்றபணிவிடைகள் புரியுஞ்
சுந்தரத்துணையனொடு வீரபாலருடபல்லவர் மனமுழுது நிருபம
தூய்தென நிறைமுகக்காவல்புரியக்கிடத்து மகயதிதனடைசண்டத்
துங்கம்குசெங்கோல் தரித்தயமதுகன் அன்பு தோய்ந்துயம் இனிது காண்க
துலட்பருகமொடு சபாலமுழுதுகொண்டசோபத்தனை நீலக
சுந்தரபாபனடி பூசனை புரிதயாக கண்டனுதைகள் பட்ட
காறசுவடுமாறா இருந்துமென்றனை குபேர லககமுகொண்ட தடவல்லமிக
கணமுயிரை மீட்டிமகுமருகமென்றெழுதிபகர்ணைபையவனிடமனுப்பக
கண்டெடமனருண்டுநிதி வண்டெனழுதங்கு காணமல் மாயனுலகுஞ்
சுந்தமலரயனுலகிலும் தேடி மாலுலகு தனியிருப்பதுதெரிந்தச
சாருபபயரையழைத்தோடியந் இனிதுடல் தழைக்கபூறைசகளமெதளிந்து
கனிவ் அடியினை வணங்கிடச செயதுபின் சமனுமவனடியில்வீழ்ந்து
தயவெனறு நானறிகிலேனெனப் பரவசமசாறறின் றேத்துவானே
(௧௭)

(௧௪) கீர்த்தனம் இராகம் - கல்யாணி—ஆதிதாளம்.

பல்லவி.

இத்தனைகோபமென்மேல் வைத்தால்நான்சகிப்பேனோ
ஏழைநீர்வகிப் பேனோ

அனுபல்லவி.

சத்திருணமாமணி பெற்றசற்குணநீபா
தாரணிந்தருள்ஜெய வீரபாகுப்ரதாபா

சரணங்கள்.

(க) வானவரை ரட்சிகக்த் தானேயிங்குநண்ணினீர்
மந்தத்தவசுரருடன் எதிர்த்துசசண்டைபண்ணினீர்
யானுமுங்களடிமையானதேவனைத்துட்டத்
தானவனென்றே எண்ணினீர் - ஐயோ
தானுண்ணும்சோற்றில்நஞ்சைத் தாமேகலந்துண்பேனோ
தயித்தியருக்குதவப் பயித்தியமுங்கொண் டேனோ
பானன்மணிகண்டற்கன் பானசொற்புதல் வோனே
பத்தும்பதினொன்றாகப் பகுத்தறியாமற் றானே (இத்தனை)

(உ) ·சனடியாரிடம் கூசாம •லடுப்பேனோ
இருக்கும் திசையினிற்கால் ஆணை நீட்டிப்படுப்பேனோ
பேசித்தன்வீட்டைவிட்டுப் பேர்பாதிக்குநின்றாற்போல
பிறற்கிடங் கொடுப்பேனோ - மிக
அசுபெறுமென்றன்கைப் பாசமதனையேவி
அசுரர்களைப்பிணித்து விசைகொண்டென்பதிமேவி
காசுறுநரகத்தில் வீசிசிதல்பிடுங்க
கடின தண்டனைசெய்யும் அடிமைமனம்நடுங்க (இத்தனை)

(ங) இருட்டிற்பிறவிக்குரு டனைப்பிடித்தெதிராக
இராஜவிழிவிழியென் றேயடித்தவாறாக
தருக்குடனேயென்மன நெருககுறவேங்ரூபம்
தாக்கிவிட் டதற்காகத் - தங்கள்
திருத்துணைவர்களங்கில் லாமற்பயந்தடித்து
தேடிக்கயிலையிற்சென் றோடிக்கண்டுபிடித்து
வருத்தமில்லாமலுங்கள் இடத்திற்கொணர்ந்துவிட்டேன்
மறுத்தாயாசங்கொள்ளாமல் பொருத்தருள்வீர்கும்பிட்டேன்
(இத்தனை)

மூவாயிரவசுரர்க்கும் விஜயன் முதலிய வீரர்க்கும் நடந்த சண்டையில் அம்மூவாயிரவர் வதம்.

விருத்தம்.

தருமனிவ் வாறு புகழ்ந்துதன் பதியைச் சார்ந்தனன் தூதர்க ளோடித்
தழன்முக னிறந்தா னெனச்சொலச் சூரன் றரையில்வீழ்ந் தழுதிடுங் குரல்கேட்
டருமைமைந் தர்களொன் மூவாயிரத் தோரு மங்குவந் தப்பனைத் தேற்றி
யமர்க்கணி கோல மணிந்துவாம் பரிதே ரடல்கரி படைகளுஞ் சூழப்
பொருமமர்க் களத்தில் வருவது தெரிந்து பூதர்கள் செறிந்துகை கலக்கப்
புதையவர் தொடுக்கக் கதையிவர் விடுத்துப் புரட்டிக நின் றசுரரை மடிக்க
கருமைசேர் மூவா யிரவர்பூ தர்களைக் காய்ந்துகின் றிகல்செயும் போது
கதித்தசீர் விசயன் முதற்றுணை வீரர் களுமடர்ந் தமர்புரிந் தனரே (௩அ)

(௩ரு) கீர்த்தனம் இராகம் - பைரவி—ஆதிதாளம்

பல்லவி

இகல்விஜயன்முதலா யிரவீரர்களுமூவா
யிரவசுரருமமர்புரிந்தாரே

அநுபல்லவி

புகையனலெனக்கோபித்திரதங்கொண்டெதிர்ந் தேறி
புலித்திரளெனவேகெக்கலித்திட்டடர்ந்து சீறி
சிறியசுரரைக்கண்டு மிகவீரவாதங் கூறி
சிக்கெனச்சிலைகள்வளைத் துக்கடுங்கணைகள் தூறி (இகல்)

சரணங்கள்

(க) மருத்தநாணொலிசெய்து சகஸ்த்ரவீரசுரர்
மீதிற்பல்கணைபின்னும் தொடுத்தாரே - கூடித்
தொகுத்தெதிர்நின்றமூவா யிரத்தசுரருங்கணை
தொகைக்கடங்காமல்விட்டுத் தடுத்தாரே - வீரா
தகைத்தசுரர்தேர்களைச சகஸ்த்ரஙகோடிகணையால்
தவிடுபொடியாமெனக் கெடுத்தாரே - சிலீ
முகத்திரள்தொட்டசுரர் - முனைத்துவீரர்தேர்களை
மோதிப்புவியில்விழ யடுத்தாரே - கந்தன்
அகத்துணைவருமணி - முகத்தேரேறிவில் தூக்கி
அறங்கெட்ட அசுரரை - உரங்கெட்டலறத் தாக்கி
தகர்த்திடும்போதயுத சரத்தைவீரர்மேல் தேக்கி
தக்கணமெழுந்தசுரர் - சிக்கெனவளைந்து நோக்கி

தடுத்துமற்றய வீரர்கள்தோள்களை
நடுத்தடங்கடல் மீதுறவன்கணை
ரெடுத்தெறிந்திட - வேயிவர்கந்துகம்
அடித்தெழுந்ததுபோல அவனிமிசை
தாவிவருமுனெதிர் - பாவியவுணர்கள்பின்
ஏவிவிடுமெலைகள் - யாவும்பொடிந்துவிழ (இகல்)

(உ) மண்டிமூவாயிரர்திரண்டு மறுபடியும்
வல்வீரர்கள்கைவில்லை ஒடித்தாரே - ஒடித்
தண்டஞ்செவிடுபடக் கண்டங்கண்டங்களாக
அடித்துச்சரக்கூட்டையும் பொடித்தாரே - கையிற்
கொண்டசிலைபோய்மனம் - பிண்டிவாரவர்தோளில்
குதித்துமல்லயுத்தஞ்செய் திடித்தாரே - அதி
மிண்டசுரர்வீரரை - முண்டி அறைகொடுக்க
வீறிட்டிவர்களோட்டம் பிடித்தாரே - அதைக்
கண்டவிஜயன்சிலை - கொண்டதிர் சரங்களை
கடுகிவிட்டசுரர்கள் - முடியொடு சிரங்களை
துண்டுதுண்டாக்கிச்சில - கண்டகருரங்களை
துளைத்துச்சிலவசுரர் - மலைப்புயக் கரங்களை
துணித்துவெஞ்சமராடிடவும்மதி
பிணப்பெருங்குவை - யாகவிழுந்தவ
வுணக்குலங்களெ - லாமுயிர்வந்துபின்
இணைக்கரங்களினால் விசயன்றனைச
சூழ்ந்துமடார்ந்துகட்டிப் - பாய்ந்துமிவன்கணையால்
மாய்ந்தசுரர்பின்னுயிர் - சேர்ந்தெழுந்தமர்செய்ய (இகல்)

(ந) செத்தசுரரெழுந்தமர் செய்திடவிஜயன்
திகைத்தறுமுகன்றனைத் துதித்தானே - அன்பர்
சித்தம்திருவிருப்பா - யுற்றருள்குமரன்சிந்
தித்தவன்கண்ணெதிரங் குதித்தானே - அந்த
மத்தவசுரர்க்கயன் - கொடுத்தவரமுமதை
மாற்றும்திறமும்சொல்லி விதித்தானே - பிர
சித்தமானவயிர - வாத்திரங்கொடுத்தேக
பெற்றுவிஜயனுளங் களித்தானே - கண்டு
மொய்த்தவசுரர்மூவா - யிரம்பேர்களின் முன்னிட்டு
முனைத்தசுரேசன்மாயாத்-திரத்தைவிரைவில் தொட்டு

[illegible] டோ ரட்டு
திசைசெ[illegible]டியவன் - வயிரவாத்திரம் தொட்டு
திடக்கொடுஞ்சூர - மாயையுங்கெட
அடித்துவஞ்சர் மூவாயிரரும்பட
முடித்தபின்சதை யூடேபுகுந்துயிர்
குடித்துவெங்களமீது இராங்கடல்
தேங்கவினையசுரர் ஏங்கஅமரரிடர்
நீங்கவறநெறிக ளோங்க இந்தவிதமாய் (இகல்)

மந்திரி தருமகோபன் யுத்தமும அவன் வதமும.

விருத்தம்

மங்காத புகழ்படைத்த விஜயன் கையால்
மதத்தகும ரர்கள்மூன்று சகஸ்ரம் பேருஞ்
சங்காத மரணமுற்றா ரெனவே தூதர்
தலைவிரிகோ லத்துடன்சென் றரைக்கசூரன்
சிங்காத னத்திருந்து புவியில் வீழ்ந்து
சிரமதனிற் கரமடித்துப் புலம்பும் போதி
லங்காத வனும்பிறைக்கோ டதனாற் குத்துண்
டாழ்ந்திட்டான் குடகடலில் வீழ்ந்திட் டானே (௩௯)

பின்னும் விருத்தம்

அரவன்போ யிருளெழுந்தான் சூர பத்மன்
அழுத துயர்க் கடலமிழ்ந்தான் றரும கோபன்
போதரவா யவுணனையுந் தேற்றி யான்போய்ப்
பூதர்கள்வீ ரரைநொடிக்குட் புடைப்பே னென்று
வாதுசொலித் திக்கயமாம் புண்டரீக
மால்யானை மீதிலெழுந் தமைச்ச ரோடுந்
தீதசுரப் படைசூழக் களத்தில வந்து
சினந்திட்டான் தலைபிடித்து முனைந்திட் டானே. (௪௰)

(௩௯) திபதை இராகம் - சங்கராபரணம்—ஆதிதாளம்.

(௧) நின்றுத்தாரங்கொடுக்கச் சென்றசுரர்பூதரை
நெருங்கித்திரண்டுகட்டிப் பிடித்தாரே - பூதர்
துன்றுவளைதடிகள் - குன்றுகளைவிடுத்துத்
துடிக்கவசுரர்களை மடித்தாரே.

(உ) ஒலித்துப்பின்னசுரர் [illegible] பூதர்,
ஓங்கிக்கதைகளைக்கொண் டறைந்தாரே - கடும்
புலிக்குப்பயந்தவனென் - மேற்ப[illegible]
புகைமண்டலத்திலவர் மறைந்தாரே.

(ங) அடுத்தசுரரோடக்கண் - டனலிசண்டன் முதல
னேகவமைச்சர்வந்து சூழ்ந்தாரே - புகழ்
படைத்தநவசத்திய - ரிடத்திலவதரித்த
பலத்தவீரர்களும்வந் தெதிர்த்தாரே

(ச) இளைப்பிலாமலமைச்சர் - இலக்ஷம்சரமதொடுக்க
இலக்கமற்றபூதர்கள் மடிந்தாரே - சிலை
வளைத்து வீரர்சரந்தொட்டுரத்திலடிக்க மண்ணில
மயங்கியமைச்சர்மன மிடிந்தாரே.

(ரு) வருத்தமுற்றமைச்சர்பின் - உருத்தெழுந்திவர்மீதில்
வருஷபாணங்களாகத் தூற்றினா - வீரா
பொருத்தசரங்களை விட் - டடித்தவர்களைகளைப்
பொடித்துகளாயடித்து மாற்றினா

(சா) ஊழித்தீயெனப்பின்னும - மாளியமைச்சர்மீதில்
உதிரமெழும்பவீரர் பொழிந்தாரே - வீணில்
ஆழந்தெரியாமலே - காலிட்டுக்கொண்டோமேயென்
றலறிமந்திரிகளுயி ரழிந்தாரே

(எ) மந்திரிகள்விழக்க - டிந்துதருமகோபன்
தந்திமீதேறியேவந் தடுத்தானே - வக்ர
தந்தபூதரும் வீரருந்தளரும்படிக்குத்
தனுவளைத்துச்சரங்கள் தொடுத்தானே.

(அ) சண்டமும்மதங்கொண்டு - புண்டரீகக்களிறு
தாவித்திக்கரத்தைச் சுற்றியே - திசை
அண்டங்கிடுகிடென - முண்டிப்பூதரைத்தூக்கி
விண்டலமீதிலெழு எற்றியே

(கூ) காலாற்சிலபூதரை - வாலாற் சிலபூதரைக்
கடியாற்சிலபூதரை மாய்த்ததே - இடி
போலலறியிவர்கள் - தலமிடப்புவியில்
புரட்டிச்சிலபூதரைத் தேய்த்ததே.

(௰) [illegible]யும் [illegible]மீதில்வீர
திரன்[illegible]சரங்கள் தொட்டானே - கொடு
வாளைப்பொருதிமிர்க்கு மானதர்மினது
மத்தகந்தனைப்பிளக் கிட்டானே

(௰௧) வேலெடுத்திவன்மீதில் - விரைவில்தருமகோபன்
வீசப்புரந்தரன்சென் றொடித்தானே - எழுந்
தாலகாலமபோலவன் - சீறிக்கதாயுதத்தால்
அடிக்கப்புரந்தரனும் துடித்தானே.

(௰௨) வாகைமிகுந்தவ - வாருதேவன்கண்டதி
வேகததுடன்சரங்கள் தூறியே அவன்
ஆகமதனைத்தொளையாகச் செய்யவும்புண்ட
ரீகக்களிறுமவந்து சீறியே

(௰௩) எதிரத்துவிரனைப்பாயத் - துதிக்கையைப்பிடித்தையன்
சுதுப்பின்முணடியோடறை போடவே - யானை
பதைத்தலறிவிழுந்து துதித்துவீரனடியைப்
பணிந்துத்தாரங்கொணடெழுந் தோடவே

(௰௪) உரமகெட்டானையோடவும குமங்கிழந்தஆண்டிபோல்
கறங்கித்தருமகோபன் விழுந்தானே - பின்னும
தரங்கொள்குலிசமழுச - சரஙகண்முதற்பலசத்
திரங்கள்கரநதனிற்கொண டெழுந்தானே

(௰௫) நச்சவுணனெழுநது - வசிராயுதத்தைசசாமி
நாதன்சோதரன்மீதில விட்டானே - தேவர்
மெச்சிடவீரனந்த வச்சிரத்தைத்திருப்பி
விடுத்தவன்சிரமறுத் திட்டானே

(௰௬) கொதித்தவனுயிர்பதை - பதைத்தலறிவிழுந்து
குலைகலங்கியேமன மூடைந்தானே - பல
சதித்தகுவர்களழித்தரும கோபனியம
தருமனுலகமதை யடைந்தானே.

பாநுகோபன் தன் [illegible]

விருத்தம்

மந்திரிதரும கோபனு இயர்கள் முடிந்திட லறிந்துடன் சூரன்
மயங்கவன் றிரவின் வல்லிருளகல மகிழ்வொடி ரதமிசைக் கதிரோன்
அந்தரா ணமமைப் பிடித்துமூஞ் சலின்மீ தாடியாக் கட்டின பகைவ
னுருயி ரிறக்குமைந் தாந்தின மதனை யவசியங்காண்கவென் றெழுந்து
இந்திரன் றிசைவந் துதித்திடத் தாத ரேகியே பாநுகோ பனைக்கண்
டிறைஞ்சிமுன் கட லின் மோகனுத் திரத்தா லிறந்தவர் பிழைத்தது
[முதலாத்
தொந்தமா நடந்த கதையெலா மறையத் துயரமுற் றழுதவ னெழுந்து
சூரன்பா லணுகித் துணையடி டணிந்து துதியொடு மிதுபுக லுவனே.
(சக)

(கஎ) கீர்த்தனம் இராகம் - கமாசு—திருபுடைதாளம்

பல்லவி

தந்தையே என்றன்சொற் கேளும
சிந்தையிற் கிருபைவைத தாளும - தந்தை

அனுபல்லவி.

சந்தமான் மறையிலு றைந்தபொருளாமந்தக்
கந்தனைசிறுகு ழந்தயென்றுசொன்ன
நிந்தனையாலேநாம் அந்தரமானோமே (தந்தை)

சரணங்கள்

(க) அடுத்திரணடுநாள்டடை யெடுத்தெழுந்துவிற்பூட்டி
அகடவிகடசக்தி அனவெல்லாமபா ராட்டி
துடிக்கப்பூதர்வீரரை கொடிக்குள்மாயையால்வாட்டி
சுத்தோதககடலில்சுருட்டிக்கொண்டுபோய் வீட்டி
சுழிக்குளாழ்ந்திட ஒழித்துவந்துமபின்பு
தழைத்துயிர்கொண்டுடல் பிழைத்தாலினியென்செயவேன் (தந்தை)

(உ) முடிப்புதல்வரைசசாகக கொடுத்தினியென்னபேசசே
மூக்கிழந்தவேசியர் போற்குனிந்திடலாச்சே
எடுத்தகாரியமெல்லாம் முடக்கமாகவேபோச்சே
இறந்தினதுலறவெல்லாம் அடங்காதபெருமூச்சே
இனிச்சமரிற்சண்முகனைச சயிப்பதென்ற
டனக்கிறமதைச்சொப் பனத்தினிலுமெண்ணும்த (தந்தை)

(௯) இதத்தோடும்குமரன்சன் னிதிக்குள்நாம்சென்றடுத்து
ஏற்றமொடுவணங்கித் தோத்திரங்கள்தொடுத்து
மதிச்சயந்தன்சிறைய வதித்தலையும்விடுத்து
மணத்தோடிந்திரனரி யணைச்செங்கோலும்கொடுத்து
வடுப்படாநல்லறி வடக்கமுடன்தேவர்க்
கிடுக்கண்கள்செய்யாமல் நடக்கவேணும்தயைசெய்து (தந்தை)

சூரபத்மன் கடிந்து மறுமொழிகூறல்.

விருத்தம்.

நற்களப வாசனைகள் சேர்த்திட்டுள்ளி நாற்றமதை மாற்றுதற்கு விதங்கள் [சொல்லித்
துற்குணனை நற்குணனாய்ச் செய்வதற்குஞ் சுயம்புவினா லெயுமுடியா தென் [றூற்போல
விற்குரிய மகனிரவி கோபன் சொல்லை வேன்முனைபாய்ந் தாலெனக்கேட் [டெழுந்து சூரன்
தெற்குாக ரடையும்விதி காலந் தன்னைச் சிந்திப்பா னெனக்கடிந்து நிந்திப் [பானே. (௪௨)

(௯அ) கீர்த்தனம். இராகம் - கானடா—ஆதிதாளம்.

பல்லவி.

என்னமதிசொன்னாய் - பயலே - நீ (என்ன)

அனுபல்லவி.

மன்னிச்சிறுவனைப்போ யென்னைவணங்கென் றுன்றன்
வாக்குநடுங்காமலேதீர்க்கமாக (என்ன)

சரணங்கள்.

(௧) வந்தாற்போகாதுபோனால்வாராதிரண்டேதானால்
வளர்கீர்த்தியபகீர்த்தி மானம்பிராணனென்றும்
சிந்தையிலும்குறியாமல் - வீரனுக்குயிர்
திரணமென்றறியாமல் - மலைபோலவே
என்றனுடவயிற்றிற்பி றந்துடன்பானுவைச்சிறை
இட்டுப்புகழ்பெற்றதும் கெட்டினதுலச்சையை
விட்டெதிரிக்குத்திகி லிட்டொடுங்கி (என்ன

(உ) சத்துருவைக்கண்டஞ்சிச் சரணமடைந்துகெஞ்சி
தரித்துயிர்கொண்டுபோரில் இருப்பதினிலும்போரில்
செத்தாலதனல்நட்டியோ - அடடாஉன்றன்
சீவன்சற்கரைக்கட்டியோ - ஐயோஉன்றன்
பித்துக்கலங்கியிப்போ சித்தப்ரமையானது
பிடித்துமிகவும்புத்தி மடித்துப்பதறித்துடி
துடித்துமயங்கிக்கண்ணீர் வடித்தலம்பி (என்ன)

(ஙு) ஆர்தானிறந்திட்டாலும் அழிந்தென்னுயிர்விட்டாலும்
அண்டமுழுவதுங்கைக் கொண்டரசுபுரிந்த
சூரனென்றபேர்போகுமோ - சந்திரனைக்கைத்
துணையால்மறைக்கலாகுமோ - அன்னைவயிற்றில்
சீருடன்கருவுற்றுப் பாரிடத்தினில்வந்து
செனித்தவருக்குத்தேகம் அனித்தியமென்றுசொல்வ
சனத்தையெண்ணுமல்பயஞ் செனித்தழுங்கி (என்ன)

விருத்தம்.

பெருவாதந் தனக்குமருந் தன்றி நெஞ்சின்
பிடிவாதந் தனக்குமருந் தூட்டித் தீர்ப்ப
தொருவாக டத்துமிலை யெனவெறுத்தே
உயிர்மேலா சையும்வெறுத்திட் டிரவி கோபன்
பொருவாசித் திரளடர்ந்த விரத மேறிப்
புடையசுர ரயுதவெள்ளப் படைகள் சூழ
விரைவாயின் றிரண்டிலொன்று முடிப்பே னென்றே
விளங்கொண்டா னெழுந்துசமர்க் களங்கண் டானே. (சங)

பானுகோபன் மூன்றுநாட்போரும் அவன்முடிவும்.

சந்த விருத்தம்.

கதிர்ப்பகைவனதி கொதிப்பொடுமிரண களத்திலெதிர்படு குறட்படைகளைக்
கடுத்தரியசிலை வளைத்திறுதிமழை யெனச்சுடுகணைகள் தொடுத்துடலினைச்
செதுத்தகடினிடை யடுத்துதிரமெழு முடிச்சிரசுகளை யறுத்திடலுமெய் [யிற்
திகைத்தவர்கதைகள் பிடித்திடுகையொடு பழுச்சினையெனவே படுத்தவனி
குதித்தலறிநட நடித்துடல்களறு குறைத்தலைகளொடு துடித்துருள்வெங்
கொலைத்தொழில்புரிவ தலைக்குமரகுரு பரற்கிளையபுச பலத்தலைவனு
மதித்திருவிழிய லரிப்பொறிசிதற வரிக்குருளையென வெறித்துழுமிழும்
மதக்களிறனைய கதிர்ப்பகைவனெதி ரடுத்திடலுமமர் விளைத்தனர்களே(சஉ)

(ஙகூ) கீர்த்தனம் இராகம் - சௌராஷ்டிரம்—ஆதிதாளம்.

பல்லவி.

வீரவாகுத்தே - வனுக்குமிரவிபகை
வனுக்குஞ்சண்டை விளைந்ததே

அநுபல்லவி.

கார்முகிலெனவமுழங் - தாரவாரித்ததட்டி
கதித்திருவரும்தேரிற் - குதித்துப்புயங்கள்தட்டி
கார்முகம்வளைத்திட்டுங் - காரஞ்செய்துமென்மேலே
கடுகிமலையினொடு மலையெதிர்த்தது போலே (வீர)

சரணங்கள்.

(க) வாகுத்தலைவன்வில்லி லேறிட்டாயிரங்கணை தொடுத்து
விடும்போதவன்
வேகத்துடனாயிரங் கணைகள்விடுத்ததனைத் தடுத்து
பின்னும்வீரன்பொன்
வாகைப்புயந்துளையிட் டேகச்சரங்கள்தொட்டுக் கடுத்து
விடலுந்தேகம்
ஏகப்பெருங்குருதி யாகத்தெளிந்துசிலை யெடுத்து
முனைந்துவீரன்
எயிற்றன்மார்பிலழுந்த - சகஸ்த்ரகோடிகணை விட்டடித்தான்
கடிந்தசுரன்
முயற்சியுடனதனைவிலக்கி வீரன்கைவில்லை யொடித்தான்
சிலைபோய்வீரன்
தயிர்த்தியனுதலினிற் புதைத்துருவவுயில்கொண் டடித்தான்
நெற்றிபிளந்து
வியர்த்தவுணன்மிகவும் - அயற்சியடைந்துமனந் துடித்தான்
அந்தவேளையில்
விக்ரமவீரன்மருவிற் - சிக்கெனப்பிடித்திட்டெதிர் நோக்க
மூர்ச்சைதெளிந்தே
அக்கணமசுரனுறு மிக்குரவையிட்டெதிர்கொண் டார்க்க
அக்கினியாஸ்திரம்
மிக்கவீரன்தொடக்கண்ட தற்கவனுமதுதொட்டு நீக்க
வாயுவினஸ்திரம்
தொக்கினில்வன்தொட வரக்கனுமக்கணைவிட்டுப் போக்க
சூரியனஸ்திரம்

துடுக்குடன்கொடுவஞ்சகனெய்திட - நொடிக்குளக்கணையைக்கொடு
வீரனும்கெடுத்தான் - ஆரணாஸ்திரம்
இடுக்கிடும்படிகண்டகனெய்திட - வெடுத்துமப்படைதம்பியுமெய்
தனைமடுத்தான் - நாரணாஸ்திரம்
கடுத்துவஞ்சன்விடும்பொழுதேயெதி - ரடுத்துமந்தநெடும்படைதம்பி
யும்விடுத்தான் - அசுரனவ
கடத்துடன்மனநொந்திரதந்தனை - மறைத்தெழுந்துயரந்தரமீதினி
லடுத்தான் - அங்கிருந்தவன்

கணக்கடங்காத சரமாரிகள் நிறைக்க
களமடங்கினுங்கன விடியிருள் மறைக்க
துணுக்கங்கொண்டும்பர்புகை - யினிற்பட்டுவிறைக்க
சோம்பியழுதவர்கள் - தேம்பிக்கண்ணீ ரிறைக்க (வீர)

(உ) மாசற்றவனதிக - ரோசத்துடன்கணைகள் பூட்டி
வீரனுடலை
ஊசித்தொளைகள்செய்து - பீரிட்டுதிரமெழ வாட்டி
குரூரன்செய்யும்
மோசத்தொழிலதனை யோசித்துத்தம்பியும் பாராட்டி
ஞானத்திரத்தை
வீசித்தகுவன்செய்யுமாயத்தொழிலைப்பஞ்சாயோட்டி
விண்ணிலிருக்கும்
வினைக்கொலைஞனைக்கண்டக் - கணத்தின்முனைத்தெழுந்து சென்று
நில்லடாவென்று
சினத்துத்தேரைமுடுகிக் - கனைத்துக்கொண்டவனெதிர் நின்று
அடடாபாவி
உனைக்கண்டதுண்டமாகச் - சிதைத்துச்சித்ரவதைசெய் தின்று
கொல்லாவிட்ட லய்யவ்
வனக்குமரனுக்குற்ற - தனித்துணைவனில்லையா னென்று
சபதங்கூறி
மட்டுமருங்கன்றிநெஞ்சிற் - சுட்டிவீரனவனைப் பழித்தான்
பழித்திட்டந்தத்
துட்டனுடலமெங்கினும் - பட்டுருவவெகுகணை கொழித்தான்
கோடிபாணங்கள்
விட்டசுரத்தளங்களைப் - பட்டுருண்டுமண்ணில்விழ அழித்தான்
அண்டமுகட்டை
எட்டியும்பிணங்கள் கடல்திட்டுத்திடலாகும்படி யொழித்தான்
ரணகளத்தில்

இனத்துடன் கழுகுங்கொடியுஞ்சிறை - யடித்துவந்துபிணங்களையுண்
டுடல்களிக்க - நிரைநிரையாய்ச்
சினைப்பருந்துகளுந்திரிந்துடல் - கொழுத்தனைந்திடுகுஞ்சுகளுக்
கிரையளிக்க - நாயும்நரியும்
கனத்ததொந்திகளின்குடலைக்கவி - யெடுத்தணிந்துதிரந்தனையுண்டு
கொப்புளிக்க - கவந்தஞ்சோரிச்
சுனைக்குள்மண்டிமிதந்துகரந்தனை - யடித்தழுந்தியெழுந்ததிலே
முக்குளிக்க - பேயுங்கூளியும்
துதித்துக்குதித்துக்களிப்பொடுங்கொண்டா னடிக்க
சுடலைமாடன்மோகினி - நடலயம் பிடிக்க
பதைத்தெண்டிசையண்டகடாகமும் வெடிக்க
படிறசுரன்கண்டுகண் - அனற்பொறிகள் பொடிக்க (வீர)

(௯) பூதப்பெரும்படைகள் - மாளப்பாதகன்பல்லைக் கடித்தான்
கோடிபாணங்கள்
மோதித்தலைவரென்னும் - வீரப்படைகளுயிர் குடித்தான்
வீரன்கண்டத்த
நீதத்தகுவரையும் - வாதைப்படுத்திமண்ணில் மடித்தான்
யானைத்திரளைச்
சேதித்தமர்க்களத்தில் - வீறிட்டலறிவிழ முடித்தான்
முடித்துவீரன்
இடத்தசிலைவளைத்து - சகஸ்த்ரகோடிபாணங்க ளெய்தான்
கோடிபாணத்தால்
தடுத்தசுரனதனைநொடிக்குள்பொடிந்துவிழக் கொய்தான்
கொய்ததுமன்றி
அடுத்துச்சிலீமுகங்களெடுத்தனல்மழையெனப் பெய்தான்
கந்தன்துணைவன்
சடுத்தம்பேசியேயவன் விடுத்தவனைத்தும்துகள் செய்தான்
செய்யவுமெழுந்
தக்கணம்பம்பரம்போற்றிரு்கியிருதேரும் விண்ணி லெட்டும்
தனித்துருவன்
சக்கரவிசையினையு முக்கிடமறித்துவழி கட்டும்
அரவணையி
னிற்கண்வளர்கின்றஹரி - விக்ரமனுலகினிலுங் கிட்டும்
கிட்டியோரெழு
மைக்கருங்கடலையுங்கலக்கியே ஒன்றின்மேலொன்று முட்டும்
பிறருதங்கள்

மகத்துவங்களையும் பொருதிண்புய - பலத்திறங்களையும்விருதாவளி
கூறி - சங்கம்தொனித்து

சகத்ரயங்களையுங்கடிதாயொரு-நொடிக்குள்வந்துவலங்கொட்டார்ந்தி
கல்மீறி - கண்கள்சிவந்து

யுகப்பெரும்பிரளயந்தனிலேபுல - கழிக்கமண்டியெழுங்கதிர்போலவே
சீறி - காட்டத்தில்மண்டும்

ரிங்க்கணங்களைனச்சலியாமலே - உறுக்குதின்றிருபேர்களுமம்புகள்
தூறி - செய்யுஞ்சண்டையால்

செங்கடுங்களங்களெங்கினும்புகை மூட
திசைத்தசுரரமரர்த்தெத்ழுந் தோட
பொங்கியெழுங்கடலடங்கிவாய் மூட
புவிக்குட்சேடனும்தலைகுவித்துலைந் துதள்ளாட (வீர)

(ச) போரிட்டிருவருங்கை - மாறித்தளர்ந்துள்ளுளையாமல்
தேகமெங்கினும்

சோரிப்பெருவெள்ளங்கு ரீரிட்டெழுந்துங்களையாமல்
உயிர்போயினும்

வீரச்சுவர்க்கங்காணி - யாகட்டுமென்றுசளையாமல்
இந்தவிதமாங்

காரத்துடன்விருது - கூறிச்சரந்தொட்டிளையாமல்
சமர்செய்போதில்

கதிர்ப்பகைவனூறுக - தாயுதத்தைவீரன்மேல் விட்டான்
விடும்போதையன்

குதைச்சரங்கள்தெறித்தும் - குறிப்போடதனைப்பொடித் திட்டான்
அசுரன்பின்பு

மதிப்போடயுதமழுவாயுதந்தனைவிடுத் திட்டான்
விட்டிவன்தேரை

அதிர்த்துமளமளென நொறுக்கித்தவிடனத்து ளிட்டான்
வீரன்பல்கோடி

அத்திரந்தொட்டவனிர - தத்தையுந்தகர்த்துமண்ணி
லுதிர்த்தான் - இனியிவனை

வைத்திடில்மோசமென்றெண்ணிக் - கைத்தலத்தில்வாள்கொண்டெதிர்
குதித்தான் - குதித்தவுடன்

மத்தவவுணனுந்தன்கரத்தினில்வாள்கொண்டிவன்முன்
னெதிர்த்தான் - எதிர்த்துமல்ல
யுத்தம்செய்பொழுதிற்றம்பி-சத்திதரன்றனைநெஞ்சில்
துதித்தான் - துதித்தெழுந்தே
உடைப்பெருங்கரவாள்கொடுவன்கணன் வலக்கையுங்களமீதில்விழும்படி
சிதைத்தான் - முற்றுமவன்றன்
இடப்புயந்தனையுந்துண்டிசெய்தரி பகிழ்ச்சிகொண்டிடமார்பினிலோருதை
யுதைந்தான் - உதைத்தபின்பு
துடித்துடன்கொடுவஞ்சனவன்றலை யறுத்தெறிந்துட னின்றுயிர்துஞ்சிட
வதைத்தான் - கண்டசூன்றன்னை
படர்க்கள்வந்துவளைந்துநமன்புர மதிற்கொணர்ந்துவிருந்துகொளப்பதை
பதைத்தான் - ரணகளத்திற்
பரிதிப்பகைவனிந்தப்படியுயிர் மடிய
பனிமலர்சொரியுமமரரிடர் விடிய
விரைவிற்சேயன்வர்வைக்கருதுடுங் கொடிய
விடத்தையனையசூரன்துடித்துமன மிடிய .(வீர)

சந்த விருத்தம்.

எழிற்பதுமகோமளை இடத்துதயமாகவே யிடிக்குரலொலித்தவனி
யிற்றாவி
யெரிப்பிரபைவீசியே குணத்திசையின்மீதெழிர விப்பகைவனைக்கையி
லெடுத்தேகி
யெழுச்சியொடுதாய்மனையி னிற்றனதுபாயலி னெதிர்ப்பினிலகத்துட
னிசைத்தாடி
யெனக்கடுமையோடணி தொடுத்தடமதாகவே யினச்சுரர்வதித்திடு
பதிக்கோடி
யழித்தவர்களுமொரி கொளுத்தியுடனேகொளை யடித்தொருசபந்தனை
யிலக்காக
வறைச்சிறையிலேகொடு வடைத்தஜிதமேபுரி யரக்கனுமுரத்துட
னமர்க்கேகி
மழுக்கையராருள் வனக்குமரனேர்துணை வலித்தடபுயத்தனசி வெட்டா
[லே
மலைப்புயம்தோடணி முடிச்சிரசுபோயுள மலைத்தடுகளத்துயிரை
விட்டானே. (சஙி)

பானுகோபனைச் சங்கரித்ததற்காக கந்தன் வீரபாகுத் தேவரைப் புகழ்தல்.

விருத்தம்.

சதிப்பரிதி கோபனிறந் திடலும் வீரன்
சாரதர்வீ ரர்களயர்ச்சி தெளிந்து பாரிற்
குதித்துவெற்றிச் சங்கமது தொனித்துத் தன்னைக்
குலவிவரும் படைகளுட னெழுந்து தேவர்
துதிக்கவையன் வசித்திடும்பா சறைக்குண் மேவி
சுந்தரப்பொன் மலரடியிற் பணிந்து நின்ற
மதித்துணைவீ ரனைக்குமர னணைத்தன்போடு
மகிழ்ந்திட்டா னருமைசொலிப் புகழ்ந்திட் டானே. (சசு)

(சய) கீர்த்தனம். இராகம் - தாபுரா—சாப்புத்தாளம்.

பல்லவி.

மதிமிகுபூபா - விஜயவீர - வாகுப்பிரதாபா

அநுபல்லவி.

அதிரூபாவ சத்தி - யரிற்குணமணிபெற்ற - மதி

சரணங்கள்.

(க) தலைப்பொறையாகநின்ற வுணக்குலங்களைத் தேய்த்தாய்
தனித்துசென்றசூரன் புரத்தையடித்துச் சாய்த்தாய்
வலப்புயத்துணையா யென்றனக்குநீவந்து வாய்த்தாய்
வைத்தசபதம்போலுன் மத்தனுயிரை மாய்த்தாய்
மலங்கிமலைகலங்கிடினுமனமயங்
காதவரதனூர்வேதநிலைகண்ட (மதிமிகு)

(உ) தகைப்பதங்களுக்குற்ற பகைத்துன்பங்களைத் தீர்த்தாய்
தனதுசேனைகளைக்கண்ணிமையைப்போலவே காத்தாய்
செகத்திரயங்களெங்கினு மிகுத்தகீர்த்திக ளேற்றாய்
செயந்தன்வயிற்றிலின்று வியந்துநீயேபால் வார்த்தாய்
திடத்தபயியுடையோன் படைக்கஞ்சானென்பதை
தேசமெங்குந்துதி பேசப்புகழ்கொண்ட (மதிமிகு)

(ங) படைக்குளொருத்தன்பாரிற் கொடைக்குளொருத்தனென்று
பன்னும்பழமொழிக்சோர் குனமுறாமல் நின்று
அடற்கனமுகன்றனை நொடிக்குட்சமரிற் கொன்று
அருந்துணைவர்க்குயிர்தந் தளித்ததிரனே உன்றன்
அம்புயத்திறற்புதை புண்படுடலம்நொந்
தாயேமிகமெலிந்தாயே குணமுள்ள (மதிமிகு)

கந்தன்வீரபாகுதேவருக்கு வரமளித்தல.
பானுகோபனிறந்ததற்காகச் சூரன் சோகித்தல.

விருத்தம்.

மனத்துவகை மிகுந்துகந்தன் றுணைவனைப்பார்த் தமரில்மிக
வருத்த முற்றாய்
வரங்களுனக் குதந்ததெது வேண்டுபதைக் கேளெனலும்
வணங்கி வீர
னனித்தியமா மயன்முதலோர் பதவிதனை யான்வேண்டே
னைய னேநின்
னணிமலர்த்தா ளிணையெனது சிந்தையைவிட் டெக்காலு
மகலா வண்ண
மெனக்கதுவே வேண்டுமென வெழிற்குமரன் மனங்கனிவுற்
றிசைந்தா னப்பா
லிறைந்துவினைத் தூதர்கள்சென் றெழுச்சிபுறப் படும்வழியி
லிடையிற்றானே
சினக்கதிர்வேல் பாய்ந்ததெனச் சூரனைடபார்த் துனதுமகன்
சிதைந்தா னென்றார்
திடுக்கெனப்பூ மியில்விழுந்து கதறிஞ னழுதுமனஞ்
சிதறி னானே (சஎ)

(சக) திபதை. இராகம் - புன்னாகவராளி— ஆத்தாளம்.

(க) கல்விமானாகியவென் செல்வமகனேநீயும்
களந்தனிலேபோய்மாண்டு கிடந்தாயோ - உன்றன்
நல்வழித்துணைவர்மூவாயிரவர்கள்சென்ற
நடவையைத்தேடிநீயும் நடந்தாயோ

(உ) இதத்துடனேபடித்துப்படித்துநீசொன்னாயே
என்னுமற்பாவிகெடு வெடுத்தேனே - இந்தப்
பதிக்கரசுசெய்துன்னை யிருக்கவொட்டாமனே
பழிகாரனாயிருந்து கெடுத்தேனே

(ங) நடுப்படையிற்சென்றாலும் வடுப்படாமலேயெந்த
நாளும் விஜயம்பெற்று வாழ்ந்தாயே - இனி
முடுக்கிச்சூரியனென்னைநொடிக்குட் டிசமரில்
முடித்தலையற்றுயிர்போய் வீழ்ந்தாயே

(ச) வட்டவண்டமாயிரத் தெட்டினுமுனைவெல்லும்
வல்லவனில்லையென்று மதித்தேனே - மணிக்
கட்டழகனேவீணிற்பட்டுண்டெனைநட்டாற்றிற்கை
விட்டதுகேட்டுள்ளங் கொதித்தேனே

(ரு) தடுத்தயிராவதத்தின் றந்தங்களைமுறித்துத்
தவித்தோடும்படியறை கொடுத்தாயே - அந்தத்
திடப்புயபலமும்போய்த் தேவர்பழிக்கவென்னைத்
தெருவிற்பரதேசியாய் விடுத்தாயே

(சு) மாலயன்முதற்கால கேயர்வந்தெதிர்த்தாலும்
மலைத்துப்பின்வாங்கிப்புறங் காட்டாயே - சிறு
பாலன்தூதுவன்சண்டைக் கேலாமலுயிர்விட்டுப்
படுத்தென்வாயினில்மண்ணைப் போட்டாயே

(எ) சொட்டைநரியோர்சிங்கக்குட்டியையடித்தாற்போல்
தூதனுன்றனைக்கொல்ல விடுத்தேனே - என்றன்
கட்டிமணியைத்தனிவிட்டுநானிங்கிருந்து
கண்பறிகொடுத்தாற்போற் கொடுத்தேனே

(அ) படிக்காலதூதருளம் பதறிடாமலுன்றனைப்
பாசத்தைவீசிக்கட்டி யழுத்தாரோ - உட
னடுத்தெமனுலகிற்கொண்டச்சமில்லாமலுன்றன்
ஆவிதனைத்தின்றுடல் கொழுத்தாரோ

(கூ) உற்றமகனேயென்பு ரத்தரசாளாமலே
ஓடிச்செறுக்களத்திற் பட்டாயே - நீ
செத்தபிணமாகிநான்சாகாப்பிணமாய்நின்று
திகைத்துப்பரதவிக்க விட்டாயே

பதுமகோமளை புலம்பல.

விருத்தம்

வாட்டமுற்றுச் சூரனிவ்வா றசுரர் சூழ
வந்திரணை களத்திற்கண்ட துண்ட மாகிச
சேட்டையுற்றுத் துடிக்குமுட லொடுசி ரத்தைச்
சேர்த்தணைத்திட் டரண்மனைவந் தெதிரி கையிற்
காட்டியெனைக் கொடுத்தாயோ மகனே யென்று
கதறுதல்கேட் டிடன்பதும கோமளைப் பெண்
சூட்டலர்பூங் குழல்சரியப் பதறி வாடிச்
சுதனுடல்மேல் விழுந்துமிகக் கதறி னாளே. (சஅ)

(சஉ) கீர்த்தனம். இராகம் - முகாரி—சாப்புதாளம்.

பல்லவி.

ஐயய்யோமகனே - உன்றனையிழந்
தாவியெப்படித்தரிப்பேன்

அனுபல்லவி.

வெய்யவடிவேல்கொண்ட - கையன் துணைவன்வாளால்
வெட்டுப்பட்டழிந்தாயே - பட்டுயிரொழிந்தாயே (ஐயய்யோ)

சரணங்கள்.

(க) பாற்கடலுக்கொப்பான வாழ்க்கைமிகுமுன்றகப்
பனைமணம்புரிந்துகை தொட்டேனே - முன்பு
தாய்க்குத்தலைமகளாய் ஆக்கமுடனேநானுன்
தனைப்பெற்றெடுத்தானந்தப் பட்டேனே - எனைக்
காக்குங்கண்மணியென்று பாற்குழம்பூட்டியயற்
காற்றடிக்காமல்வளர்த் திட்டேனே - இன்று
வீக்குமெமனுக்கிரையாகவுனைக்கொடுத்து
விட்டென்புகழெலாம்போய்த்தட்டழிந்துகெட்டேனே (ஐயய்யோ)

(உ) சினத்தமராகுலகையனற் கொளுத்தியழித்துத்
தெய்வப்பெண்களைச்சிறை பிடித்தாயே - யானை
தனக்குமடிசறுக்குமெனச் சொல்பழமொழியைச்
சற்றுமெண்ணுமல்துடி துடித்தாயே - தீ
வினைப்பகுதிவந்தடுத்தனர்த்தகாலமாகிய
விபரீதத்தாலுன்புத்தி மடித்தாயே - மிக
மனக்கருவங்கொண்டோடி அவத்தமாகவே யென்றன்
வயிற்றினில்நெருப்புத்தணலைவாரி அடித்தாயே (ஐயய்யோ)

(ங) அல்லற்பட்டழுகண்ணீர் செல்வத்தைத்துடைக்குமென்
றடுத்துநான்சொலநீவெ குண்டாயே - காவில்
வல்விலங்கடித்திந்திரன்செல்வனைச்சிறையிட்டு
வலுவிலேபகைதேடிக் கொண்டாயே - அந்தத்
தொல்லைவினையாலல்லோ மல்லார்புயன்கைவாளால்
தோளுஞ்சிரமும்வேறாய் விண்டாயே - உன்றன்
வல்லுயிரழிந்திடக்கல்லுயிராக விந்த
மண்டலத்திருந்துநான் திண்டாடிக் கண்டாயே (ஐயய்யோ)

சூரன்சிங்கமுகனுக்குத் தூதரையனுப்புதல்.

சந்த விருத்தம்.

வனப்பதுமகோமளை தனித்துருகுவேளையின்
மயிற்குலமெனத்தனது சகிமார்கள்
வயிற்றிலுரமாகவே புடைத்தலறியோடியே
வளைக்கையிலணைத்தலொட மிதமாக
தனத்துறுகணீரது துடைத்தரிவையோடுமே
சரித்தலுமனைக்குளவ னுடனேகத்
தருக்கொடிகல்சூரனு மகத்தொழிலினுலுடல்
தனைச்சிரசினிற்பொருதி விரைவாக
வினைத்தனையனுவியு மெழுப்பிவருவேனென
விதித்துடலினைத்தமர்கள் வசமாக
விடுத்தருகுமாமுகவ னுக்குமறுதூதரை
வியப்பொடுமனுப்பியவ னவையேகச்
சினத்தகுவனுகிய வினைப்பகைவனுருயிர்
தெறித்தனனெனக்குடக டலின்மூழ்கிச்
செகத்திருளுமாறிட மகிழ்ச்சியுடனேகுண
திசைக்கடலுதித்தனனி ரவிமாதோ (சகூ)

சிங்கமுகன் சூரனுக்குப் புத்திகூறல்.

விருத்தம்.

பங்கயங்கள் கண்விழிப்ப விருமூன் றுநாட்
பரிதியெழச் சூரபத்மன் விடுத்த தூதர்
சிங்கமுக னிடத்திலெம தூதர் போலச்
சென்றுமது தலைவன்வர விடுத்தா னென்றார்
வெங்கனல்வாய் மொழிதனைக்கேட் டவனுங் கால
விதிவசமென் றெழுந்துமயேந் திரத்தை நண்ணி
வன்கணவெஞ் சூரனைக்கண் டிறைஞ்சிக் கண்ணீர்
வடிக்கின்று னீதிமொழி படிக்கின் றுனே. (ருய)

(சுரு) கீர்த்தனம். இராகம் - காம்போதி —சாப்புத்தாளம்.

பல்லவி.

இனிமேலாகிலுமென்சொற்கேளண்ணு - நன்றாய்
இதத்தோடிருந்தரசை யாளண்ணு

அனுபல்லவி.

அனியாயத்தினாலிந்த அவதிக்கிடமுண்டாச்சே
அடுநின்றவிடத்தில் மயிரொன்றில்லாமற்போச்சே (இனி)

சரணங்கள்.

(க) முடுக்காய்முதலிலின்றன் படைத்திரளுடனேவந்
முகநாதனுக்கெதிரிற் சென்றாயே - முனைக்
கொடுக்கொடிந்ததேளைப்போற் படைக்கலங்களெலாம்போய்க்
கூசித்தலைகுனிந்து நின்றாயே - முட்ட
இடித்துங்குலியாமலே கடற்றானைகளையும்பின்
ஏவிவீரன்கைவாளால் கொன்றாயே - பாம்
படுக்கடுக்காய்முட்டையிட் டுடைத்துத்தின்பதுபோலே
அருமைமைந்தர்கள்மூவா யிரவரையும் தின்றாயே (இனி)

(உ) புத்திரன்பானுகோபன் செத்தபோதேநமது
பூச்சுங்கைவீசுமங்கே செல்லாதே - வீணிற்
புத்திமயங்கியின்னம்யுத்தம்செய்யவென்றெண்ணிப்
பூவிற்றகடையிற்புல் லில்லாதே - சொன்னேன்
உத்தமமானசெய்கை யைத்தவிர்த்தினிமேலும்
ஒட்டியொளிந்தோரையும் கொல்லாதே - பர
தத்துவனுங்குமரனைப்போய்வணங்கியுயிர்
தரிப்பதுகுணமல்லால்திருப்பியொன்றும்சொல்லாதே (இனி)

(ங) மெலுக்காயரன்கொடுத்த வரத்தின்சூதறியாமல்
மெய்யெனவேமகிழ்ந்து மெய்த்தோமே - இந்தத்
தலத்தில்நங்குடிக்குசகுனியம்வைத்ததுபோற்சயந்
தனையும்சிறையிற்கொண்டு வெத்தோமே - நல்ல
குலத்திறன்மகளும்போய் மலைத்துக்கோலிழந்திட்ட
குருடன்போலயர்ந்துள்ளம் கைத்தோமே - தப்பி
நிலைத்திங்கேசிரைத்துமிஞ்சினது குடுமியென்றே
நீயும்நானுமாய் மிஞ்சிவாயும்வறண் டெய்த்தோமே (இனி)

சிங்கமுகன்சொன்னதைக்கேளாது சூரன்கடிந்து விடையளித்ததும் சிங்கமுகன் உடனே போர்க்கோலங்கொண்டு தன் படைகளுடன் இரணகளம் செல்லலும் அதைக்கண்டு தேவர்கள்பயந்து குமரக்கடவுளிடம் முறையிடலும்.

விருத்தம்.

* உளந்தளர்ந்து சிங்கமுக னிவ்வா றோத
வுறுத்தெழுந்த சூரபத்ம னவனை நோக்கி
யளந்தசொல்லை மறுவடியுங் கொட்டிக் கொட்டி
யளக்கவந்தாய் நீயுமென்க ணெதிர்நில் லாதே
வளம்பெறுமுன் பதிக்கோடிப் பிழைப்பாயென்ன
வணங்கியிணை யடிபணிந்திட் டண்ணு நான்போ
யிளங்குமரன் றனைசெயித்து வருவே னென்னை
யேவென்று னுகந்துவிடை தாவென் றானே (௯௧)

(௪௪) தீபதை. இராகம் - கல்யாணி—சாப்புத்தாளம்.

(க) சூரனைவணங்கியுத்தாரம் பெற்றுச்சிங்கமா
சுரன்றனதரண்மனை கண்டானே - நிறை
சோரிமாங்கிசமுதல் வேரிமதுக்குடங்கள்
தொகையற்றசகடஞ்சோ றுண்டானே

(உ) உண்டுமிகலாகிரிகொண்டுகளபம்புனு
குங்கலந்துரமதில் தரித்தானே - சிறை
வண்டுகள்கடிநறை யுண்டிடுமலர்மாலை
வகைவகையாயலங் கரித்தானே

(ங) துலங்குநுதலில்வெண்ணீ றிலங்கத்தோளினில்மணிச்
சொன்னப்பணிகளெல்லாம் பூட்டினான் - மிகு
பொலங்கொள்செவியிரண்டா யிரங்களுக்கிணங்கவே
பொருந்துங்குண்டலங்களு மாட்டினான்

(௪) தாட்டிகமுடனோரா யிரஞ்சிரத்திலுமெழில்
தனிமணிமகுடமும் புனைந்தானே - தலை
ஆட்டித்தேரினிலேறிக் கோட்டைவெளியினில்வந்
தன்னைமாயையைநெஞ்சில் நினைந்தானே

(௫) தனித்துச்சிவனளித்த முனைத்தகுலிசஞ்சூலம்
சக்கரமுதற்கையி லெடுத்தானே - தன்னைச்
செனித்தமாயையானவள் கொடுத்தபாசமும்பல
தெய்வப்படையுங்கட்டித் தொடுத்தானே

(௬) துடிப்போடிரதகஜ துரகபதாதிகளைத்
தொகையிட்டணிவகுத்துச் சேர்த்தானே - இன்னம்
கடற்கிணையெனவருமிலக்கவெள்ளம்படையைக்
கண்களிப்புடனெதிர் பார்த்தானே

(௭) கண்களனல்பரியும் வன்கணசுரர்வீர
கண்டாமணியணிந்த கழலோர்கள் - அகல்
விண்கொள்டரமீதென்றும் காடென்றும்குவடென்றும்
பேடென்றுய்தெரியாத விழலோர்கள்

(௮) வேர்த்துச்சங்கமொலித்திட் டார்த்துப்புயங்கள்தட்டி
கீறிட்டெழுந்துமிக நடிக்கவே - மேள
வாத்தியங்களினோசை யாற்றிரைக்கடலொலி
யழுங்கத்திசைகளெங்கும் துடிக்கவே

(௯) இந்தவிதமசுரத் தளங்களக்கணத்தில்வந்
தேகப்பெருவெள்ளமாய் குவிந்தாரே - நேரில்
வந்தித்தடிபணிந்தெ முந்திட்டடனேசிங்க
மாசுரன்றனைச்சுற்றிக் கவிந்தாரே

(௰) கவிந்தவனிரதத்தைத்தொடர்ந்துதிகொண்டமர்க்
களமதைச்சடுதியில் அடுத்தாரே - அடுத்
துவந்தபடைகளைக்கண் டயர்ந்தயரர்கள்பயந்
துளறிக்கதறியோட்ட மெடுத்தாரே

(௰௧) ஓடிப்பாசறைதன்னை நாடிச்சண்முகனைக்கண்
டோலமிட்டிறைஞ்சியே துதித்தாரே - புகழ்
பாடிச்சிங்கமுகன்முன் சீடித்தவரம்பெற்ற
பலத்தைச்சொல்லியேகண்ணீர் உதிர்த்தாரே

வீரவாகுதேவர் யுத்தசன்னத்தராய் இரணகளம்வர இரண்டுபடைகளும் கைகலக்க அசுரப்படைகள் இறந்ததைக்கண்டு சிங்கமுகன் பூதர்களைவாரி ஆகாயத்தில் எறிதல்.

விருத்தம்

வானவ ரிவ்வா றலறுதல் கேட்டு மதிமுகக் குமரவே ளமர்க்கு
 வளம்பெரு மிரதங் கொணர்கென வீர வாகுவ னின்றடி பணிந்து
தானவ னான சிங்கமா முகவன் றனைவென்று வருகுவே னெனக்குத்
 தரவுதந் தருள வேண்டுமென் றியம்பச் சண்முகன் கருணைகூர்ந் தனுப்பச்
சேனைவெம் பூதர் வீரரோ டெழுந்து தேர்மிசை மேவியே வீரன்
 செருக்கள மடைந்துங் கரித்திடும் போது செறிந்திரு படையுங்கை கலக்க
ஈனரா மவுணப் படைசிலர் மடிய விகலரி முகவன்றேர் நிலைவிட்
 டிறங்கியப் பூதப் படைகளை வாரி யெடுத்துவிண் ணினிலெறிந் தனனே. (௯௨)

சிங்கமுகன் மைந்தர் நூறுபேர்களின் யுத்தமும்
அவர்கள் வதமும்.

பின்னும் விருத்தம்.

பூதர்களைப் பலவுலகந் திசைக ளெங்கும்
 புரட்டியெரிந் தரிமுகவன் றேர்மீ தேறி
யோதுமைந்தர் நூற்றுவரை நோக்கி வீர
 ருளம்பிளந்திக் கணம்வருவீ ரெனலும் பாரின்
மீதொலித்து வருமவுணப் படையை நேரில்
 வீரவா குப்ரபல விசயன் கண்டு
கோதில்வரி சிலைவளைத்திட் டௌத்தில் வன்மங்
 குறித்திட்டா னவர்களைப்போய் மறித்திட் டானே (௯௩)

(௬௫) கீர்த்தனம் இராகம் - நாதநாமக்ரியை—ஆதிதாளம்.

பல்லவி.

வீரன் சமரம்புரிந்தான் - அதி - விரைவிற்சிலைவளைத்து
வீரன் சமரம் புரிந்தான்

அனுபல்லவி.

வாரியெழுந்ருமபொங்கி - கேரிலெழுந்தோர்பருங்கின்
மண்டிநெடும்புவி - யுண்டிடுமாறென
வன்கணைசேனையெ - னுங்கடலோடதி (வீரன்)

சரணங்கள்.

(க) தக்கவீரர்கள் மருண்டு
தட்டழிந்தோடுதல் கண்டு
விக்ரமவீரன் வெகுண்டு
விற்குதைவளைத்துக் கொண்டு
அக்கணங்கணைகள் தொழித்தான் - அசுரர்தலை
யற்றுவீழும்படி யழித்தான் - சிலரைமண்ணிற்
சொக்கிட வீரங்கள் கிழித்தான் - ரணகளத்தைத்
துப்புரவாகவே யொழித்தன் - அதனைக்கண்ட
மிக்கரிமாமுகன்மக்களுமாகிய நூறு - பேர்களுமுனைந்
திக்களமீதிலுனைக் கொலுவோமென வீறு - கூறியெழுந்து
மைக்கனமாரியெனக்கணையாயிர நூறு - விடக்கண்டிவன்
சிக்கெனவேய யுதக்கணையாலதை நீறு - செய்திட்டுதிரங்
கக்கிடவம்பு தெறித்து
கண்டகர்வில்லை முறித்து
துக்கிடத்தேரை மறித்து
துண்டுதுண்டாகத் தறித்து
நொய்க்கிணையாகநொறுக்கியுரத்தொடு
பொக்கெனவாரிநடுக்கடன்மீதுற (வீரன்)

(உ) சித்திரரத மிழந்து
மெத்தவசுரர் மெலிந்து
உத்தமவீரன் முன்வந்து
ஓங்கியதட்டிச் சினந்து
கத்தியும்பிடித்திட் டாவென்று வாயைத்திறந்து
காட்டியிரைந்துட னேவென்று புயங்கள்தட்டிச்
சுத்தவீரனென்றால் வாவென்று பேடிநீயாகிற்
ஞேற்றிட்டேனென்றோடிப் போவென்று நூற்றுவர்சொல்ல
மெய்த்துணைவனதிசினத்துடனவர்களை யெட்டியறையும்போதுன்
மத்தவசுரரொருமித்திவனருகினிற் கிட்டி வாள்வீசக்கைச
ளைத்தவர்களன்றிச் சற்றுமுபாயமில்லாமற்கெட்டி மலைபோனிற்கும்
நித்தன்மகனையுற மித்தருவர்வளைந்து கட்டிப் பிடிக்கவிவன்
சத்திதரனைப் படித்து
சங்கொலிசெய்து படித்து
கைத்தலத்தில்வாள் பிடித்து
கண்டகர்தம்மை மடித்து
ரத்தமெழுந்துபினைத்திரள்யாவுஞ
ரித்திரள்கூவியெழுந்திடவேஜெய (வீரன்)

(௩) வெங்கணைக்கொன்று மோதி
வெற்றிவீரனுந்தேர் மீதிற்
பொங்கமுடனிற்கும் போதிற்
சிங்கமுகனுங் கண்ணுதி
பொங்கியசெம்புபோற் கனன்று தேரைமுடுகிப்
பொட்டெனவீரனெதிர் சென்று பயமில்லாமல
இங்குவந்தவனீயா ரென்று கேட்கும்பொழுதில்
எற்றியுன்னகர்தனை யன்று சின்னபின்னமாய்ப்
பங்கமுறவேயரணங்கணமாளிகைதனை யிடித்து
அரண்மனையுத்
துங்ககோபுரமுதற்செங்கற்பொடியெனவேபொடித்து
அசுரர்களு
ரங்கெட்டலறிவிழச் செங்கைக்கதைகளைக்கொண்டடித்து
வசிரவாகன்
அங்குற்றனைவெலத்து சங்கட்டினவனுயிர்குடித்து
செயங்கொண்டுபின்
னிங்குற்றுங்களையும் வெல்ல
வேதுவாயெழுந்த வல்ல
துங்கச்சண்முகற்குச் செல்ல
துணைவீரனென்றுசொல்ல
அங்கவனெண்கணை யுங்கைதொடும்பொழு
திங்கிவனும்பதி னெண்கணைதூறியே (வீரன்)

(௪) மண்டிவீரனம்பு பாய்ந்து
மார்பினிற்பட்டுடன் றேய்ந்து
விண்டுபல்பொடியாய்த் தீய்ந்து
வீழ்ந்திடப்பாதகன் காய்ந்து
தண்டுகொண்டிவனைத்தாக்கினன் நூறுபாணத்தாற்
சத்திவீரனதைப் போக்கினன் மற்றுமவனி
ரண்டயுதங்களை தேக்கினன் வீரன்பல்களை
விடடதைப்பொடிய தாக்கினன் அசுரன்பின்கைக்
கொண்டொருசூலமதைக்கடிதாகவே விட்டான்
வீரனதனை
முண்டியுடன்பலதுண்டெனவேதுக ளிட்டான்
சிவன்படையை
யண்டவனேவவெகுண்டிவனதை விடுத்திட்டான்
அசுரன்றேரைத்
துண்டரிகமொடிவன் விண்டலமதிலெறிந் திட்டான்
அந்தக்ஷணமுத்

தண்டமாய்ப்பூத ரெழுந்து
தானவன்றனைக் கவிந்து
குண்டுமலைகள் பொழிந்து
கூச்சலிட்டாடி யிகழ்ந்து
கண்டிதமாகவே புண்டனில்வாள்கொடு
மிண்டினவாறென மிண்டுகள்பேசிட (வீரன்)

வீரபாகுதேவர் சிங்கமுகன்ரதத்தை எடுத்துப் பூமியில் மோதல்.

சந்த விருத்தம்.

மொய்த்தபூதர்கள்க - ளத்திலேயரிமு
  கத்தனுடைமர்க ளாடவே
மூற்றியோர்கதைத - யித்தியனகொடு
  டுக்கவேபடைக ளோடவே
மைத்தலாயகன்மு - கட்டிலேயொளிப
  ரப்பவேகணைக டேறியே
பற்றிவீரனிர - தத்தையுந்துகள்ப
  டுத்தவேவிருது கூறியே
யொத்தவார் சிலைவ - ளைத்து கேரிலொரு
  மித்திவன் கணைகள் சாடவே
யுற்றெழுந்தவன்மு - னைத்திவன்றனையு
  றுத்துமார்பிலறை போடவே
எய்த்திடாதொருக - ணத்தில் வீரனுமெ
  திர்த்துமேசபத மோதியே
யிற்றிடும்படியெ - டுத்தவன்பொனிர
  தத்தை மேதினியின் மோதினான் (கூச)

சிங்கமுகன் வீரபாகுதேவருள்ளிட்டபடைகளை மாயாபாசத்தாற் கட்டி உதயகிரியில போட்டு விடல். பின்குமாரக்கடவுள் பூதப்படைகளோடு இரணகளம் சேர அப்பூதப்படைகளைச் சிங்கமுகன் வாரியுண்ணுதல்.

(சுக) நீபதை இராகம் - மத்யமாவதி—திரிபுடைதாளம்.

(க) சிங்கமுகன் றோசழிந்தபின்மற்றொரு
தேரினிலேறிட் வீரனுங்கண்டுமேன்,
வெங்கணையாயிரம் - விட்டவனையிரம்
விற்களெலாமொடித்தான் - பின்னுமவன்மேற்

பொற்கணை கொண்டடித்தான் - அதனைக்கண்ட
செங்கள மெங்குமெ - ருங்கிய பூதருக்
திண்புயராம்லக்கத் - தொன்பதுவீரருங்
கொங்குயர் விண்ணுறை - தேவரும்யாவருங்
கூடித்துதித்தனரே - வீரனைக்கொண் - டாடிக்குதித்தனரே

(உ) வெங்கணனுகிய - சிங்கமுகன் வீரா
வேசத்துடன்மாயா - பாசத்தைக்கையினில்
மின்கனல்போலவி ளங்கிடவேயதி
வீரத்துடனெடுத்தான் - மனதிலுங்
காரத்துடன்விடுத்தான் - அது
மங்குன்மழையிடி யுங்கடிதாகவ
ளைந்ததுபோலக்க ளந்தனில்வந்துட
னங்குளவீரர்கள் பூதர்களைச்சுற்றி
யார்த்திட்டிறுக்கிக் கொண்டே - விரைவுடன்
சேர்த்திட்டிறுக்கிக்கொண்டே

(ங) நீண்டகடலேழுந் தாண்டியாகாசத்தி
னிட்டேபாயொளி யிட்டுமுழங்கிக்கொண்
டாண்டகைதன்படை யாவையுந்தூக்கிக்கொண்
டப்புறஞ்சென்றகன்றீ - அடங்காத
வெப்பத்துடன்கனன்று - இரதத்தைத்
தூண்டியருணன்வி டுக்கமறையோர்து
திக்கக்கதிரோனு திக்குங்கிரியினிற்
பூண்டகுகையினிடத்திற் றிடமெனப்
போட்டுவிடுத் திட்டதே - உயிர்தனை
வாட்டிப்படுத் திட்டதே

(ச) மாசுற்றவன்செய்த மோசத்தைவிண்வழி
மாருதன்கண்டுவெ குண்டுமிகவும்ப்ர
காசித்திருக்கின்ற பாசறைமேவியே
கந்தன்முன்னின்றனனே - அவ்வினைப்ப
ணிந்துநவின்றனனே - அந்த
மோசத்தைக்கேட்டையன் காசுற்றபன்மணி
மொய்த்திடுஞ்சிங்காசனத்திலிருந்தி
ரோசத்துடன்ப்ரபை வீசப்பொற்றேரிலா
ரோகணித்தார்ப்பரித்தே - முனைந்ததி
வேகத்துடன் சிரித்தே

(௫) துள்ளியோராயிர வெள்ளமெனும்பூதர்
சுற்றிவரத்தேவர் கைத்தலத்தான்மலர்
அள்ளிச்சொரியமு னிவர்ஜெயஜெயென்
றாசிமொழிந் திடவே - துதிபல
பேசிப்புகழ்ந் திடவே - எங்கள்
வள்ளல்குமரகு ருபரனுந்திரு
மாலயனோடுங் கோலாகலத்துடன்
கள்ளவசுரனி ருக்குமிரணக
ளந்தனைக் சண்டனனே - சினத்தையு
ளந்தனிற் கொண்டனனே

(௬) கண்டவுடனேபசிக் கொன்றுமிரையின்றி
காய்ந்தகடாகம்பிற் பாய்ந்ததுபோன்முங்ஞ்
சண்டியேபூதரைக் கண்டரிமாமுகன்
றுள்ளிமிகக்களைத்தே - வாரியுண்ணை
வுள்ளமதி னினைத்தே - பேருருவங்கொண்
டண்டம்விழுங்கிடு முண்டனுக்குப்பருங்
குண்டுமலையொரு சண்டைக்கறியென
வொண்டியபூதரைக் கண்டகன்வாயினு
லாவியடைத் தனனே - இரண்டுவி
லாவும்புடைத்தனனே

சிங்கமுகனுக்கும் குமரக்கடவுளுக்கும் நடந்த யுத்தமும் சிங்கமுகனையக்கடவுளர் வச்சிராயுதத்தால் மாய்த்தலும்.

விருத்தம்

வளைத்தசுரன் சகஸ்த்ரவெள்ளம் பூதரையுண் டிடலுமெங்கள்
வள்ள லான
மதிக்குமரன் றேரினின்று சிலைவளைத்த குணத்தொனியான்
மயங்கி வீழ்ந்தே
யுளைத்தவுணப் படைகளெலா மடிந்திடக்கண் டரிமுகவ
னுறுமிச் சீறி
யும்பருக்கு மெந்தமர்க்கும் ஞாதிவழக் காம்பகையா
லுறத்துத் துன்பம்
விளைத்தலெங்கட் கியல்பாகு நீயெமது பகைவனல்ல
விளங்கொண் டிங்கே

வீணை வம்புவளர்த் தமர்செய்வ தேனெனலும்
விமலன் றானும்
இளைத்தவரைக் காப்பதுவுந் துர்ச்சனரை மாய்ப்பதெங்கட்
கியல்பா மென்ன
இனிச்சரிதா னென்றவன்வில் லெடுத்திட்டான் குமரனும்போர்
தொடுத்திட்டானே (௬௫)

(௬௭) கீர்த்தனம் இராகம் - மோகனம்.—சாப்புத்தாளம்.

பல்லவி.

சண்முகநாதன் சரங்கள் தொடுத்தானே - சிங்கமாமுகன்
சமருக்தயங்காமனின்று சமரங் கொடுத்தானே

அனுபல்லவி

கண்ணழற் பூதரைத் - திண்ணமதாயுண்டு
காய்ப்புடனின்றவ - னேப்பமிடல்கண்டு
முண்முனைவாளிகி - மலன்விளைத்திட
முட்டனுரம்புகுந் - திட்டுத்துளைத்திட
மொத்திவயிற்றில - டைத்தகுறட்படை
தொத்திவெளியிற்கு - தித்துகிலத்திடை
தத்துமுன்னஞ்சனை - யத்தவுணன்கைக
ளைத்துளையிற்கொண்ட - டைத்திடல்கண்டெழிற் (சண்முக)

சரணங்கள்

(க) மிண்டவுணனூறு - தண்டையுரத்திலுத்
தண்டமதாய் விட்டுச் சிறினன் - அந்தத்
தண்டையென்னையனி - ரண்டுகணையாற்சி
தைத்தவனெற்றியைப் பிறினன் - நெற்றி
பிண்டுதளர்ந்துதி ரக்களையாங்ப்பி
ணித்தவன்கைநெகிழ்ந் திடவே - பூதர்
மண்டியெழுந்துவி மலன்முன்வந்தும
லரடியைப்புகழ்ந் திடவே - மற்றொருபாணம்
மருவித்தொடுத்தான் - குகனுதய
கிரியில்விடுத்தான் - அதுசென்று
மற்புயவீரர் - பூதர்களெனும்
அற்புததீரர் - தமைக்கட்டி
வாரியணைத்துக்கொண் டேறிக்கொணர்ந்திட்டு
வைவடிவேற்குமரையனெதிர்விட்டுச்

சீருடனம்பருத் தாணியிலேறிட
சென்றவுணர்சுற்றி நின்றம்புதூறிட
தீரத்துடனேரெண்கணை சேரிற்கடிதாயேவியே
கோரப்பகைவன்சேனைகள் வீறிட்டுடனேமா
ரணமாய்ப் பிணமாய் நிணமாய்ச் சிதைந்துருளச் (சண்முக)

(உ) மங்கியவுணர் மடிந்திடக்கண்டரி
மாமுகன்கோபங்கொண் டடுத்தான் - அடுத்
தங்கவனேங்கி விடுங்கணையாவுமென்
புங்கவன்றாள்செய்து கெடுத்தான் - வஞ்சன்
சங்கையிலாதசுடுங் கணையாற்கந்தன்
சாரதியை மூர்ச்சை யாக்கினான் - சினம்
பொங்கிமுருகன்ச தங்கணைமாரிபொ
ழிந்தவன்றேர்களைப் போக்கினான் - அசுரன்பின்பு
பூவிற்குதித்தான் - ஆயிரங்கணை
யேவிப்பிளிர்த்தான் குமரவேளும்
பொற்கணைபூட்டி - யவனுடைய
விற்களைவீட்டிப் - பொடிசெய்யப்
பொக்கெனவே சூலங்கொண்டவன்றாக்கவும்
போதனொருகணை போட்டதைநீக்கவுந்
தக்கணமேயவன் - றண்டொன்றெடுத்தெட்டிச்
சாமிவிடுங்கணையாவும் விழத்தட்டித்
தாவிப்பொருதக்கண்டெழு - தாரைக்கணையைக்கொண்டட
னேவித்தகுவன்றண்டட - னேகைப்புயம்யாவுங்கண்
டங்கண் டமெனத் துண் டமதாய்ப் பிண் டுருளவே (சண்முக)

(௩) அற்றுவிழுந்தக - ரங்களிரண்டுசெ
கத்திரமுமுளைத் தாறினான் - கடுந்
துற்றவன்மீதின்முனைத்தெழுந்தாயிரம்
பத்தெனும்பாணங்கள் தூறினான் - அதை
யெற்றியவுணன்க - ணைத்தொருபாசமெ
டுத்தையன்மீதினில் வீசினான் - பரி
சுத்தனும்வஞ்சன்வி டுத்ததனைத்துந்தொ
லைத்தவனையிகழ்ந் தேசினான் - சத்தமிட்டிதழ்
மடித்துத்தோள்தட்டி - சத்திதரனைப்
பிடிக்கவென்றெட்டி - யங்கவனேங்கி
வருங்கதிகண்டு - துங்கனுமூவா

யிரங்கணைகொண்டு - முடுகிவிட
மாமலையொத்தசகஸ்த்ரஞ்சிரங்களுட்
வண்டனிரண்டு சகஸ்த்ரங்கரங்களுப
பூமியிலற்று விழுந்து துடித்திடப்
புத்தப்புதிதாயனைத்துங் கிளைத்திடப்
போரிற் கிரியைக்கைக்கொடு பூரித்தகுவன்லீஞெடு
வாரிக்குமரன்மேல்விட வாளித்திரளாலே
பலர் படரெனச்ச டுதியிற்பொடிந்துதிரச் (சண்முக)

(ச) அய்யன் மறுபடி வெய்யவன்மேற்கோடி
யஸ்திரத்தை விட்டு மாட்டினன் மாட்டிச்
செய்யகரங்கள் சிரங்கண்முழுதுஞ்சி
தைந்து விழும்படி வீட்டினன் இந்த்ரன்
துய்யகுலிசத்தாற் கொய்தமலைகள்போற்
றோள்சிரங்களற்று விழுந்தான் - மற்றுங்
கைதவன்போனசிரங்கரங்களலங்
காரமதாய்முளைத் தெழுந்தான் அதனையெங்கள்
கந்தனும்பார்த்தே - இதொருபுது
விந்தையென்றார்த்தே - இன்னமுந்தலை
களைவெட்டிக்கிளைக்கப் - பின்னையும்பல
களையிட்டுமுளைக்க - வேலவன்கண்டுங்
காரஞ்செய்தழற்கண்கள் சீறியேவிழித்திடக்
கைசிரங்களுமுளைத் தெய்தாமலொழித்திடத்
தீரன்குமரன்செ யல்கண்டுளநொந்து
சிங்கமுகனோர்சி ரங்கொண்டெதிர்வந்து
தேறிப்பெரிதாயோர்கதை தேவர்க்கதிபன்மேலதை
மீறிக்கடிதாயுந்திட வீறுற்றுடனேகைத்
தடியாற் றுடியாய்ப் பொடியாய் நொறுங்கிவிழச் (சண்முக)

சிங்கமுகனைச் சங்கரித்ததற்காக தேவர்கள்
குமாரக்கடவுளைத் துதித்தல்.

சந்த விருத்தம்

திண்டிறலவுணன் றெறித்தபடைகளெ
றுங்கிடவிரைவா யெழிற்குமரனெதிர்
சென்றயில்களைவிட் டடிக்குமொருமுறை யதுதானே

செம்படையினிவே றுனக்கிலையோவிடு
வென்றவனொருதண் டெடுத்தெறியவொளிர்
சின்மயகுகன்வச் சிரத்தையரிமுக னாமீதே
மண்டிடியெனவிட் டடித்திடலுமன
வஞ்சகனுடலைத் துளைத் துருவியுள
வன்மமொழியினரக் குடிந்துறுதியொடு வெளியேகி
வண்சுரநதியிற் குளித்தருமைமிகு
புங்கவனொருபொற் கரத்திலுறமத
வன்கணனுயிர்விட் டிறக்கமகிழ்வுட னிமையோர்கள்
தண்டலைமலரைச் சொரிந்துதிமிதிமி
யென்றெழினடமிட் டெழுந்துகுகனிரு
தண்மலரடியைப் பணிந்துவகையுட னிசைபாடத்
தன்றுணைவருமென் குறட்படையுமிகு
சம்ப்ரமமொடுமெக் களித்துவரவருள்
சண்முகனணிபா சறைக்குளணுகியு மினிதாக
வெண்டரளமுறுர் தனிப்பொனரியணை
யின்பொடுகொலுவுற் றிருப்பமுகினிற
விண்டடனயன்வச் சிரத்தன்முனிவர்க ளனைவோரும்
மிஞ்சியவுவகைக் கடற்றண்முழுகியெ
ழுந்தடிபரவித் திருக்குமரனது
மின்புகழதனைப் பெருக்கமொடுதுதி புரிவாரே(௬௩)

(௬அ) திபதை இராகம் - இந்துஸ்தான்காபி - ஆதிதாளம்.

(௧) ஜயஶ்ரீஸம்ஸார ஸாகர தாரணாய ஜயஸஜ்ஜநபோஷாய ।
ஜயஸம்ஸாரபாவாருக ஜயஸஜ்ஜநாநந்தநாய ॥
(௨) ஜயஶக்திஹஸ்தகோரா ஜயஷண்முகவதந ।
ஜயமோஹநாகார ஜயநீலஹார ॥
(௩) ஜயவல்லீஹ்ருதயாநந்த ஜயபங்கஜநேத்ர ।
ஜயதீநஜநாவந ஜயஸாதுஸ்தோத்ர ॥
(௪) ஜயஶிவபார்வதீ ஜயகார்த்திகேயா ।
ஜயலோககாரண ஜயஸுநிஸ்தேயா ॥
(௫) ஜயஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரகாரணாத்மா ।
ஜயகோடிஸூர்யஸம ஜயகீர்த்திவிஶாலா ॥

(சா) ஜயதேவகணஸேநா யிவஸம்ஹகாரா ।
ஜயஸுதகணநாத ஜயரத்னவிநாயக ॥

சிங்கமுகனிறந்ததற்காகச் சூரன்புலம்பல்.

விருத்தம்.

கொண்டல்வண்ணன் முதலானோ ரிறைஞ்சி வாழ்த்தக்
குமரன்மிக மனமகிழ்வுற் றிருந்தா னிப்பால்
மண்டிரண களத்தினிலங் கிருந்த தூதர்
மனவேகத் துடனரச னருகி லோடிக்
கண்டுமது சிங்கமுக னிறந்தா னென்னக்
கனகமணிக் கோபுரத்தி லிருந்த சூரன்
விண்டலம்விட் டுறுமிவிழு முகில்போற் பாரில்
வீழ்ந்துவிட்டான் றுயர்க்கடலி லாழ்ந்திட் டானே. (ருஎ)

(சகூ) திபதை. ஸ்ரீராகம்—ஆதிதாளம்.

(க) மட்டுமிஞ்சியென்சொல்லைத் தட்டாமற்களத்திற்போய்
மாண்டிருண்டாயோதம்பியரிமுகனே - கண்ணைக்
கட்டிமறைத்துநடுக் காட்டில்விட்டாற்போலென்னைக்
கதறவிட்டாயோதம்பியரிமுகனே

(உ) எட்டுத்திசையுஞ்ஜெயங் கட்டியுன்பலத்தைக்கொண்
டிருந்தரசாண்டேனடாவரிமுகனே - என்றன்
கட்டுங்குலைந்ததன்றிக் காரியமுந்தாழ்வாச்சே
கண்ணின்மணியேதம்பியரிமுகனே

(ங) கலிக்குஞ்சேனைகளையுந் தொலைத்துன்னையுமிழந்தே
காங்கியாகினேனடாவரிமுகனே - இருப்
புலக்கையானதுதேய்ந்திட் டுளிப்பிடியானதுபோ
லுருவங்குலைந்தேனடாவரிமுகனே

(ச) எய்த்ததென்றலானது முற்றிப்பெருங்காற்றுமென்
றெண்ணுமற்போனேனடாவரிமுகனே - நல்ல
புத்திரரையும்வீணிற் போக்கினான்பிணந்தின்னிப்
பூச்சிபோலானேனையோவரிமுகனே

(ரு) ஆரென்முகத்தைப்பார்ப்பா ராரென்கவலையைத்தீர்த்
தாதரிப்பாருனைப்போலரிமுகனே - இனித்
தேரோட்டின்றுநீயே தெருவோடலையென்றென்னைத்
திகைக்கவைத்தாயேதம்பியரிமுகனே

(சு) பாமரர்களாகிய தேவர்கள்கூடவென்னைப்
பழிக்கும்படிவிட்டாயேயரிமுகனே - கடிந்
தீயப்புகைபார்க்குங்கொம் பேறிமூக்கன்போலவர்க்
கிளைக்கரமானேனடாவரிமுகனே

(எ) கைக்கடங்காச்சேனையுந் திக்கண்டமனைத்தும்நான்
கட்டியாண்டேனின்றனலரிமுகனே - இப்போ
தொக்கலுமக்களும்போய் வெட்கமின்றியொற்றைக்கா
லோரிபோலானேனடா வரிமுகனே

(அ) சஞ்சலங்கொள்ளாதேயென் றென்றனைத்தேற்றவோருற்
றாருமில்லையே தம்பியரிமுகனே சும்மா
நெஞ்சோடேவெந்துருகி நெருப்போடேயாதலித்து
நின்றுநான்றவிப்பேனோ வரிமுகனே

(க) படிக்குமுன்றன் புத்தியைத் தடுத்தசுரரைப் போரிற்
பரிகொடுத்தேனே வீணிலரிமுகனே - விழுந்
திடுப்பொடிந்திட்டகோழிக் குரற்குழியே கதியோ
லேக்கமுற்றேனே தம்பியரிமுகனே

(ய) கூட்டத்துடனுங்களை யோட்டியமன் கையினிற்
கொடுத்துநான்மட்டு மிங்கேயரிமுகனே - நாளும்
ஈட்டுக்கும்பாட்டுக்கு மிருந்துகெட்டேனேபாரி
லென்னைப்போற்பாவி உண்டோவரிமுகனே

(யக) குழந்தைவேலவன்கையா லழிந்துநங்குலத்துக்குக்
குறைவுவைத்தாயே தம்பியரிமுகனே - யாருந்
தொழுந்தகையென்றுமுடி சூட்டிவைத்ததீபழி
சூட்டிவைத்தகன்றாயோ வரிமுகனே

பிறகு சூரனேவலால் ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ள
அசுரர்களும் வந்து சேரல்.

விருத்தம்.

அளவிறந்த பெருந்துயரி லாழ்ந்த சூர
னமைச்சர்களாற் றெளிந்தனனு நவனு மேலைத்
தெளிகடலி லுவகையொடு மூழ்கிக் கீழைத்
திசைகடலி லெழுந்தனனன் றேழா னாளிற்

களவுண னேவல்கொண்டா யிரத்தெட் டண்டங்
களுமடைந்தக் கணத்தினிற்கிங் கரர்போய்க் கூற
விளமிருந்தங் குனக்காச்சிங் கெனக்காச் சென்றே
மெய்த்திட்டார் திரண்டசுரர் மொய்த்திட் டாரே (௯அ)

(௫௰) தீபதை இராகம் - நாதநாமக்ரியை—சாப்புதாளம்

(௧) திட்டமுடனாயிரத் தெட்டண்டங்களுமேவிச
சென்று தூதுவர் சொல்ல வன்றிறலவுணர்கள்
கொட்டமிட்டிருபுயந் தட்டிக்கொந்தளிப்புற்றுக்
கொத்துடனெழுந்தனரே அண்டமுகட்டைப்
பொத்துவந்திழிந்தனரே

(௨) நெட்டைமலைகள்பொடி பட்டுநொறுங்கமூச்சு
விட்டுவனங்களெரிந் திட்டுநீறுநீறாகக்
கட்டழல்வழியினூற் கொட்டிமுனிவுகொண்டாங்
காரமாய்ப்படர்ந்தனரே - மிகவுமதி
கோரங்கொண்டெழுந்தனரே

(௩) செங்கதிரவனொளி யுங்கடல்வடவைசெந்
தீயொளியுமழுங்கப் பாயிருட்படலங்க
ளெங்குநிறைந்ததென வஞ்சனரொலிமுழக
கிட்டுப்புவியில்நிறைந்தார் - அதிகவேக
மிட்டுக்குதிகொண்டுறைந்தார்

(௪) சம்புவின்கனியாற லப்பும்விரதகண்டந்
தத்துந்திரையெழச முத்திரத்திலுமுள்ள
அம்புவிகளிலுநி ரம்பியிடங்கொள்ளாம
லரன்கயிலையுமெட்டினார் - திக்கஜங்களு
முரங்குலைந்திடமுட்டினார்

(௫) வெம்பியேழுலகமுங் கம்பமுற்றுநடுங்க
மிடுக்குடனவுணர்கள் நடக்குந்தூசிகளினா
லம்பரம்பொன்னுல குமபாலாழியமப்பு
வனைமுதற்படிந்திடவே - பக்ஷிமிருகத்
திணைகளும்பொடிந்திடவே

(௬) நத்தனமனோடும்முப் பத்துமுக்கோடிதேவர்
நவையற்றமனமுற்ற தவமுனிவர்கள்சித்தர்
வித்தியாதரருந்தி கைத்துளமருண்டுதீ
வினையெனவெதும்பினரே - தாமரையிலைப்
புனலெனததும்பினரே

(எ) சத்திவடிவேலன்வ சித்துகந்திடும்பொன்பா
சறையினணிநிலைக்கோ புரவாயின்முதல்வந்து
மொய்த்தவுணர்கள்மேகஞ் சுற்றிக்கொண்டதுபோல
மூடியேகவிந்தனரே - சூரன்றனைக்கொண்
டாடியேகுவிந்தனரே

(அ) தீங்கவுணப்படைகள் தாங்கவிடமில்லாமற்
செறிந்தடர்ந்தனரென்று நெருங்கித்தூதுவர்சொல்ல
வாங்கதறிந்துசூரன் வீங்கிப்புயங்கள்பூரித்
தகமதுமிகக்களித்தான் - தூதருக்கெல்லாந்
தகைமிகுபரிசளித்தான்

(கூ) அங்கியவியும்விளக் கோங்கியெழும்வகைபோற்
றுடித்துமடியுங்கால மடுத்துப்பொன்னரியணை
நீங்கிச்சூரன்பிரபை யோங்குங்கனகமணி
நிலைமண்டபத்திற்புகுந்தான் - மனக்கருவந்
தலையண்டைசுற்றிமிகுந்தான்

சூரன்தேரேறி இரணகளம் செல்லல்.

சந்த விருத்தம்.

பழுதற் றிடுசீர் முழுகிப் பரிவால் படுபொற் றளிரா டைகள்பெற் றரனார்
பரிசுத் தவிபூ தியுமிட் டுடனே பலபட் சணமா வவிதே முறுதே
னொழுகக் கனிபா லடிசிற் சுவையோ டுதரந் தினிமேல் நிறைவித் தகிலா
ருயர்பற் பலவா சனைமொய்ப் பனிநீர் உசிதத் தொடுபூ சியுமார் பதிலே
யழகுற் றிடுகோ சணிமுத் தணிதோ ளணிதொட் டிடையா யுதமுற் றவெலா
மருகிற் பலதா னவர்கைக் கொளமே லளவற் றிடுசே னைகள்சூ ழுறவோ
ரெழுபத் தெனுமா யிரமற் கரியோ டெழுபத் தெனுமா யிரமற் பரிசூ
ழினவற் புதமா மணிமுற் றியதே ரிசைமற் புயசூ ரனுமே றினனே (௬௧)

(௬௧) கீர்த்தனம். இராகம் - ஸாவேரி—சாப்புத்தாளம்.

பல்லவி.

எக்களிப்பொடுஞ்சூரன் சக்கரம்பிணைந்தபொன்
னிரதங்கொண்டமர்க்களஞ்சென்றனே

அனுபல்லவி.

மக்களுங் கிளைகளும் படிந்துமறிவில்லாமல்
மருவுமனை வியர்க ளொருவருக்குஞ்சொல்லாம (லெக்க)

சரணங்கள்.*

(க) ஆயிரங்கோடிதேரி லாயுதங்களடுக்கி
அடுகளஞ்சடுதியிற் கொடுபோவெனக்கடுக்கிப்
பாயுஞ் சிங்கவாகனத் தோடுந்தன்னிரதத்தை
வாயுவேகமாய் முடுக்கிப்
பேயினம்பல பூதங்களுமாடப்
பெருஞ்செந்துளிதிசை மறைந்தெங்கணுமூட
மாயிருங்கனலி மீதிலிருள்சாட
மருண்டெழுபரியுஞ் சுருண்டடிதள்ளாட (எக்க)

(உ) படருப்வரிசைச்சிங்கக் கொடியால்விண்முகில்பீறப்
பறக்குந்தேர்விசையாலெண் திசைக்கயுங்கள்கண்வீறக்
திடவிசயகம்பீர சூரபராக்கெனவந்
தியர்கள்கட்டியங்கள் கூறக்
கடலொலியெனவே பூடகங்களடிக்க
ககனமோடண்டகடாகமும் வெடிக்க
உடுவினங்கள்பட படவென்றுதுடிக்க
ஊளையிட்டெதிர்நின் றோரிகள்நடிக்க (எக்க)

(ங) இந்திரஞாலத்தேரை முந்திவிண்வழிசெல்ல
எவித்தாளொருதேரின் மேலிவிரைவிற்செல்ல
னொந்தவுணமங்கையுர் சிந்தைதளர்ந்துடன்மெ
லிந்துவாய்புலர்ந்து மெல்ல
அந்தகன்பிடரி லுந்திநின்றுதள்ள
ஆயிரங்கோடிவீதியுங்கடந்து வெள்ள
பந்தியாயெதிர்கொண் டண்டங்களிலுள்ள
படிறவுணர்கள்வந் தடிபணிந்துதுள்ள (எக்க)

குமரக்கடவுளும் இரதத்தின்மீதி லாரோகணித்து இரணகளம் சேரல்.

சாத விருத்தம்.

மிண்டுடல்கொண்டசு ரன்களமீதுவி ரைந்ததிகோப மதாய்
விண்பலவண்டமு றும்படைசூழமி குந்தெழுவாரிதி போன்
மண்டிடல்கண்டொரு விண்டொடுதேவர் பருண்டுயர்பாசறை வாய்—
வந்தயில்கொண்டகு கன்றனைமேவிவ ணங்கியேகூறலு மே-
திண்டிறன்மிஞ்சிய வம்புயவீரர்தி ரண்டிடுபூதரெ லாஞ்
சிந்தையிலன்புசி றந்திருபாலும டர்ந்திடவேயணி லோன்
எண்டிசைவிண்டல முந்துகளாகவெ ழுப்பரியூரிட வே
இன்பொழிசண்முக னுமட னவேசர தந்தனிலேறி னனே. (௩௰)

(௫௨) கீர்த்தனை இராகம் - தோடி—ஆதிதாளம்.

பல்லவி.

கந்தஸாமிதேரேறினார் - விஜயசுப
கர முறமுனிவர்கள் - மறைமுறையாசிகள் - கூறினார்

அநுபல்லவி.

சந்த மல ரவனனமேவுமு
குந்தன் பத காதிபன்மேவுமெ
மூந்துபந்திபந்தியா யருகில்வரச்
சந்ததம்புரந்தரன் றுதிபகரக் (கந்த)

சரணங்கள்.

(௧) இந்து நிகர் நுதன்மிசையெழில்பெரு
சிந்தூரமெனுந் திலதமதுபு
னைந்தாறிருசெவியினுமணியில
குந்தே சுற குழையுமணிந்துய
ரிரவிகிரணமதை மருவநிறைமதியி
னுருவமனையவொளி பயில்வதனக் (கந்த)

(௨) தாட்டி கம தாகமணிமகுடஞ்
சூட்டிக்கவசங்கள் தோள்வளைகள்
பூட்டிப்பதமலர் மிசைபாதுகை
மாட்டிக்கனகாம்பர மிடையினிற்
தரித்துத்தும்பையாலலங் கரித்துத்திரிபுரத்தை
எரித்தருத்ரனெனப்புன் சிரிப்புற்றறுமுகவக் (கந்த)

(கூ) சத்தி வடி வேலொடுபதினொரு
ருத்ராதியர் படைகளுமொருபது
கைத்தாமரைமலர்மிசைகொடுவசு
ரத்தானைகளைப்பொடியெனவிழத்
தாட்டிச்சூரனுயிரை வீட்டியிந்த்ரனைமுடி
சூட்டித்தருமநிலை நாட்டி யருள்புரியக் (கந்த)

பூதர்கள் அண்டத்தசுரர்களை கண்டுபயந்து குமரக்
கடவுளிடம முறையிடுதல.

விருத்தம்.

திருத்தேர்மேற் குமரனெழுந் தருளிச் சென்று
செருக்களங்கண் டதிவியப்புற் றிடும்போ தங்கே
பருத்தவண்டத் திருந்துவந்த வசுர வெள்ளப்
படைக்கடலைப் பார்த்துமனம் பதறிப் பூதர்
திருத்தநெடுஞ் சடைபுரளத் தரையில் வீழ்ந்து
தேவர்கள்சே னாதிபனைப் பணிந்து போற்றி
உருத்தளர்ந்து மிகநடுங்கி யுயிர்மே லாசை
ஒழிந்திட்டாரசுரர்பயம் மொழிந்திட் டாரே (சுக)

(ரு) கீர்த்தனம். இராகம் - அசாவேரி —அடதாளம்

பல்லவி.

நடுங்குதேஸாமிநாதா இந்தவினைக்கு
நாங்களினியென்செய்குவோம்

அநுபல்லவி

இடங்கொள்ளாயிரத்தோரோ ரெட்டண்டத்தசுரரை
ஏறிட்டுப்பார்க்கப்ப கீரிட்டென்கண்கள்
இடுங்கியெங்கள்வேக மொடுங்கிமிகத்தேகம் (நடுங்கு)

சரணங்கள்.

(க) கைக்குள்ளேவளைத்தவிட்ட திக்கஜத்தையுங்கொழுக்
கட்டைபோலெடுத்துண்ணும்பெரு வாயர் - தங்கள்
தக்கமைந்தர்களுட னொக்கல்தந்தையர்பெற்ற
தாயையுங்கொலைபுரிந்திடுந் தீயர் - எழு
மைக்கருங்கடலெ லாங்கரைபுரண்டு
வரும்ப்ரளயமெனப் பெரும்படைதிரண்டு
இக்குவலயங்கொள் ளாமலேயிருண்டு
எங்குமவுணரோ ருங்கிடுதல்கண்டு (நடுங்கு)

(உ) மடுத்துமூவுலகையுண்டி டினுமானைப்பசிக்க
மனைப்பொறியெனவுந்தி நிறையாதே - படை
யெடுத்துமூவர்கள் நூறுண் டெதிர்த்தழித்திடினுமா
யிரத்திலொருபங்கேனுங் குறைபாதே - பல்லாற்
கடித்தநசலமதை யடக்கிப்பொறிவிளங்
காயெனவேதின் னும் பேயரொடுங்களம்
அடுத்துச்சமர்செயில் நொடிக்குளெங்கள் தளம்
அழிந்துடலுயிர்விட் டொழிந்திடுமென்றுளம் (நடுங்கு)

(௩.) மத்தன்பானுகோபனுற் சுத்தோதகக்கடலின்
மாண்டுயிர்பிழைத்தும் மால்வந்தோமே - பல
மொய்த்தசிங்கமுகன்வ யிற்றினிலகப்பட்டு
மூச்சுமுட்டித்திகைத்து நொந்தோமே - நாங்கள்
மெத்தவமரில்வ ருத்தமிகப்பட்டு
விழலுக்கிறைத்திட்ட புனலெனவேகெட்டு
எய்த்துளதயிரி யத்தையுங் கைவிட்டு
எரிமுன்மெழுகென வுருகித்திகிலிட்டு (நடுங்கு)

மஹாவிஷ்ணு பூதப்படைகளைத் தேற்றுதல்.

விருத்தம்.

தப்பியுயிர் பிழைக்கவென்று லசுரச் சேனை
தரணியெங்கு மிடைவிடா தடர்ந்த தாலே
எப்புவனத் திற்புகுவோ மெனமற் பூத
ரிகல்வீரர் களுமிகவு மயங்கும் போது
மெய்ப்பதும நாபன்முனிந் தவரை நோக்கி
வெதும்பிமனப் பயங்கரமேன் கொண்டீ ரென்னக்
தற்பரனு மறுமுகன்றன் பெருமை யைவித்
தரிக்கின்றான் புகழ்ந்துவிவ கரிக்கின் றானே (கஉ)

(ருச) கீர்த்தனம். இராகம் - சுருட்டி—ரூபகதாளம்.

பல்லவி.

வீணுக்கேனீங்கள் வெருவிநடுங்குறீர் இந்த
வெறும்படைகண்டு

அநுபல்லவி

பாணிச்செஞ்சடை யரன்குமரனும்
படிந்தவுணர்முன் மடிந்ததறிந்துங்
காணிக்கற்றது கோடிக்கென்றுங்கள்
கருத்திலெண்ணுமற் குறத்தனமாக (வீணுக்கேன்)

சரணங்கள்

எரித்தழன்முகன் கதிர்ப்பகைவனோ
டிகற்சிங்கமுகன் முதற்றகுவர்கள்
வருக்கமாகிய கோடிவெள்ளங்கள்
மடிந்திடவில்லையா - பெரும்
பருத்திப்பொதிகண் டொமுத்தெருதுகள்
பயந்தகதைபோ லயர்ந்தவனியின்
மரித்திடுமெண்டத் தசுரரைக்கண்டு
வாய்க்குரலெல்லாம் போக்கியய்யய்யோ (வீணுக்கேன்)

(உ) பதுமத்தலைவ னுகிபுலகம்
படைத்துமென்னுரு வெடுத்துக்காத்தும்
இதமுற்றவுருத் திரனெனக்கடை
யீறுசெய்தழித்தும்
மதியுற்றருள்மகேசுரனென
மயக்கஞ்செய்தும் ஸதாசிவமெனக்
கதியுற்றவனு க்ரகஞ்செய்யும்பஞ்ச
கர்த்தனிவனென் றுற்றிடாமலே (வீணுக்கேன்)

(ங) அன்னகாலையிற் பொன்னின்மேருவி
லகிலசரா சரங்களனைத்துந்
தன்னிடத்தினிற் றோன்றிடச்செய்து
ஷண்முகத்துடனே - புகழ்
மன்னும்விசுவ ரூபங்கொண்டுடன்
மறைந்தபோதிலங் கிருந்தசிங்களை
உன்னியொக்கலிற் பிள்ளைதனைவைத்
தோடியூரெங்கு தேடியேடர்போல் (வீணுக்கேன்)

(ச) கணத்திலுலகை யழித்துண்டாக்குங்
கடவுளேயிந்த வடிவென்றுங்கட்
குணர்ச்சியிருந்தும மனத்திடத்தைவிட்
டுலமபலாகுமோ - அய்யன்

மணிப்பதினெண்கண் களினுதற்கண்ணால்
மாறிச்சினங்கொண் டேறிவிழித்தால்
அணிப்பெரும்படையாவுஞ்சாம்ப
ராகுஞ்செய்கையை நோக்கிடாமலே (வீணுக்கேன்)

குமாரக்கடவுள் அண்டத்தசுரரையழித்தல்.

விருத்தம்.

முகினிறத்தோ னிஃதுரைக்கப் பூதர் வீரர்
முண்டகம்போல் விழியினொளி யிருந்தும் பட்டப்
பகலையிருளெனமயக்க முற்றோ மென்றே
பகர்ந்திடும்போ தசுரர்விட்ட பெருமூச் சாலே
மிகுபூதப் படைகண்மண்ணின் மடியக் கண்டு
வேற்கடம்பன் சிலைவளைத்துக் கணைகள் பூட்டி
அகிலவண்டத் தசுரரைப்போ ராடி நேரி
லழிக்கின்றான் பூபார மொழிக்கின் றானே (கக)

(௫௫) கீர்த்தனம். இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி

அண்டத்தசுரரைப்போர்செய்தார் ஷண்முகநாதன்
அண்டத்தசுரரைப் போர்செய்தார்

அனுபல்லவி.

விண்டலங்களைளையடித்துப் பெண்டிரைச்சிறைபிடித்து
மிக்கமும்முரங்கள்கொண்டு அக்ரமஞ்செய்திடல்கண்டு
வெள்ளிமலைதனைநாடிப் பள்ளஞ்சேர் புனல்போலோடி
வேதன்முதலோர்பயந்து ஆதிசிவனைப்பணிந்து
வெய்யவசுரர்கள்வாட்டுஞ் செய்கையையுரைக்கக்கேட்டு
வெம்புலியதன்புனைந்த சம்புவினைநற்கண்வந்த
வேற்குகன்படையெடுத்தீத் தாக்கிமுன்னமர்தொடுத்து
வீறுகொள்தாரகவஞ்சன் மாறுகொள்வரைக்ரவுஞ்சன்
வீரசிங்கனதிதீரன் கோரவச்ரபுயதீரன்
வெங்கனலியதிசூரன் மங்கசுரேசன்விகாரன்
மீறுதனிப்புலிமுகன் நீறுசெய்யக்கிளிமுகன்
மெய்த்தமூவாயிரஞ்சேயர் மற்றெண்மூவாயிரந்தீயர்
மித்திரன்தருமகோபன் புத்திரன்பரிதிகோபன்

விளைச்சமரினின் மீசுரன் எனச்சொலுஞ்சிங்கமாசுரன்
வீரமயேந்திரபுரத் தாரிலுமுள்ளவசுரர்
வீய்ந்தழிந்தனர்களென்று பாய்ந்துடன்றூதர்கள்சென்று
வித்தரித்தண்டத்திலுள்ள மத்தவசுரர்க்குவிள்ள
விரைவாகவேநடந்து திரையாழிபோலடர்ந்து
வீரமுடனேயெழுந்து சூரபத்மனேரில்வந்து
மெய்படியவேதொழுது கைநிரவியேயழுது
மிக்த்தயிரியங்கள்சொல்லி யகத்தொடுந்தழுவிப்புல்லி
மிடுக்காகவேமுனைந்து துடுக்கோடமர்க்கெழுந்து
மிடற்றானையோடலைந்தங் கடுக்காகவேவளைந்த (அண்டத்தசுரரை)

சரணங்கள்.

அசுரப்படைகளினது இரதகஜதுரகபதாதியின் வர்ணனைகள்.

(க) மறியெனுமுகத்தர்பலர் கரியெனுமுகத்தர்பலர்
மற்கடமுகத்தர்பலர் குக்குடமுகத்தர்பலர்
வரிப்புலிமுகத்தர்பலர் கரிப்புலிமுகத்தர்பலர்
மண்டூகமுகத்தர்பலர் குண்டிகைமுகத்தர்பலர்
வானரிமுகத்தர்பலர் கோளரிமுகத்தர்பலர்
வக்கிரமுகத்தர்பலர் குக்கலின்முகத்தர்பலர்
வட்டிகைமுகத்தர்பலர் ஒட்டகைமுகத்தர்பலர்
வல்லயமுகத்தர்பலர் பல்லுகமுகத்தர்பலர்
மாயுவின்முகத்தர்பலர் பாய்பரிமுகத்தர்பலர்
மகிடமுகத்தினர் பலர், சகடமுகத்தினர்பலர்
மதிகேடர்கள்பலர்கள் சதிமூடர்கள்பலர்கள்
மகராலயங்கள்பொங்கிச் சகமானதைநெருங்கி
வருமாறெனக்கவிந்தனர் - திசைகளெங்கும்
உருமாறிடக்குவிந்தனர் - ஓங்கிவளர்ந்த
மலைபோலோராயிரம் தலைதோளீராயிரம்
மந்திரிகர்வத்திரங்களும் - கனத்தபெருந்
தொந்தியின்விசித்திரங்களுங் - கானகத்தினின்
மண்டெரிமேனச்சிகைகள் கொண்டெரியொடுப்புகைகள்
மண்டியெழுநேத்திரங்களுஞ் - சுளகினெழில்
கொண்டகன்றசோத்திரங்களும் முகத்திற்கரு
மலைக்குகைகளென நாசிகளும்மழு
வுலைக்கொழுவின்முனை மீசைகளும்பரு

மாகத்தைமுட்டுஞ்சிரங்களும் - மலர்ப்பிரம
லோகத்தையெட்டுங்கரங்களும் குடங்குடமாய்
மதுக்களைப்பலவாயின்மடுத்துடல்
கொழுத்தபண்டிநிறைந்துளமானது
மறுக்கிக்கொண்டலைவாரும் - கண்கள்சிவந்து
கிறுக்கிக்கொண்டலைவாரும் - என்றன்விரலை
மடக்குவீரெனியொருவர்தமையொருவர்
பிடித்துவ்வொருடுநெருகிமறுகிமிக
மற்கட்டியெக்களிப்பாரும் தரையில்விழ்ந்து
பற்கிட்டித்தத்தளிப்பாரும் செம்மறிதலை
மான்கள்புன்றியொடும்புலிமேதியன்
மாங்கிசங்களை லும்புவிடாமலே
வாயப்புடையிலடைப்பாரும் அடைத்திருவி
லாப்புறமும்புடைப்பாரும் கண்டிகைமுத்து
மணிக்கிரீடமதாணிக டோள்வளை
யணிச்சிலம்புகள் வால்வளைதாள்வளை
மகரக்குழைக்குண்டலங்களும் அணிந்துதெய்வ
நகரமெழுமண்டலங்களும் ப்ரபைஜொலிக்க
வடங்கள்மோகன மாலைகளங்குல
மிடுங்கன்மோதிர மானதிலங்கிட
வார்கழற்கிண்கிணிபுலம்ப - வீரவெண்டயப்
பேரணித்தொனிகளலம்ப - சிரத்தைமுட்டி
மதத்தெழுங்கச மீதிலகுந்தொனி
மிகுத்தநர்துபி பேரிகையுஞ்சர
மண்டலநாக சின்னங்களும் செவியினிசை
கொண்டெழுதாரை சின்னங்களும் - உறும்முழு
வம்பரிசைபல சங்குகள்கொம்புக
ளும்பதலையொடு பொங்கைகள்பம்டைகள்
மழையிடிகளெனவொலிக்க நடுநடுங்கி
எழுபுவனமுஞ்சஞ் சலிக்க ஒட்டைமீதில்ட
மாரமும்துடிகாகளமுஞ்செய
வீரமங்கல தூரியமும்பறை
மத்தளங்கைத்தாளங்களும் டக்கயங்களுந்
துத்திகளெக்காளங்களும் படகம்பண
வந்திமிலைகள்தடாரிகள்தவின்முர
சந்தகுணிதமு தாரிகளொடுகர

மல்லரிமணியிடக்கையும் ரீலிகளொடு
சல்லரிமுத லுடுக்கையும் எழுதந்திரி
வகுத்தணிந்த விபஞ்சிகளெந்தரி
முகத்துடன்றிகழும்பலதம்புரு
வாத்தியங்களடித்துக்கொண்டே சண்டையின்றைக்கு
வாய்த்ததென்று துடித்துக்கொண்டே தடக்கைகளில்
மழுக்கள்பிண்டிமுசண்டிகளுங்கடு
வெழுக்கள்தண்டுகள்குண்டுகளும்படு
மற்பரிகழுற்கரங்களும் அங்குசங்களும்
விற்பரிசைசக்கரங்களும் கட்கமுங்கட்டு
வாங்கமுங்கவணும்புதையுஞ்சிகை
யோங்குமொண்கழுவும்முனையாகிய
வாளொடுவேலாயுதங்களும் முட்டடிகளும்
நீளொளிச்சூலாயுதங்களும் பல்விதமான
வல்லயஞ்சமுதாடுகுறுந்தடி
கல்லிரும்பொடு நீடுபெருந்தடி
மண்டாக்கஞ்சுத் தீட்டிகளும் மணிக்குடலைத்
துண்டாக்குஞ்சிற்றீட்டிகளும் தோமரங்களும்
மடக்குமுனையசி கேடயமும்பல
படைக்கலமுடைய ராயகமிஞ்சிய
மாகோடிவெள்ளஞ்சேனைகள் பரித்திரள்கோ
டாகோடிவெள்ளம் யானைகள் தந்தம்பதித்த
மங்கலகனக தண்டிகைசிவிகையி
னங்களொடும்மொளி தங்கியகவிகையும்
மந்திரகாவிக்குடைகளும் மூகமலுற்ற
சந்திரகாவிக்குடைகளும் பிடித்துடன்செவ்
வரிப்பணிலமணி யெறிகடலலையென
நிறைக்கவரிவிசி றிகள்முறையொடுகன
மஞ்சுவர்னப்பாவாடைகளும் ஈயோட்டியும்
பஞ்சவர்னப்பாவாடைகளும் பலர்கள்வீச
வழுத்துநவமணி தமனியவிரிதக
டிழைத்தபடியொடு மழகுயிர்பதுமைகள்
வகுத்தசிங்காரரதங்களும் அதனிற்பூட்டி
உகைத்திடுந்துரகதங்களும் வேகமாகவே
வரும்பரிகளுட குரமதிலதிரொடு
மெழும்புழுதியல ரியினெழுபரிநடை

மார்க்கமதைப்போர்த்திடவே அலைகொளெழு
நீர்க்கடலைத்தூர்த்திடவே - வாசியின்கடை
வாயினிலெழுவி லாழிகளாழிக
ளோடகழிகுழி மீதில்விழுந்தரி
மணிகளெனவேயிலங்கவே எரிக்கும்நிலா
வணிகளெனவே துலங்கவே யானைகளின்மும்
மதங்கள்வரைகளி லெழுமருவிகளென
மிதந்துபுவிமிசை பலநதிகளினொடு
வண்டலடித்துக்கொண் டெழும்ப நீச்சிடமின்றிக்
கொண்டலடித்துக்கொண்டெழும்ப மீதியுலகை
மருட்டிடிசையொடு தடவிவருகொடிகள்
சுருட்டியிசைமிகு வரிசைபுகழ்தடிகள்
மயில்விசிரிஆலவட் டங்கள் ஒளிநிறைந்த
ஒயில்பரிசுதாலவட் டங்கள் பிடித்தசுரர்
வகைப்பிரபலம தாகியவிமரிசை
மிகுத்துததியென்ன வேவருபடைகளை
மடிக்கவையனுன்முடி யுமோ அய்யய்போவிந்த
இடுக்கணெந்நாள்விடியுமோ எனவேயஷ்ட
வசுக்கள்கின்னர ரமரர்கள்முனிவர்க
ளிசைக்குமந்தணர் கருடர்களுரகர்கள்
மயங்கிக்கண்ணீர்வடித்தனர் என்னசெய்வோமென்
றயங்கித்துடிதுடித் தனர் மயக்குமைந்து
வகைப்புலன்களைவென்றமனத்தர்கள்
எனச்சொலும்பதினெண்கணசித்தர்கள்
வசிக்கவிடமின்றி விழித்தார் எவ்வுலகமும்
நசித்திடுமென்றுரையொழித்தார் இவ்விதமாக
வஞ்சமும்புலை யுங்கொலையுஞ்சிலை
நெஞ்சிடங்கள்கொ ளாமலுறைந்திடும்
அஞ்சனந்திக முஞ்சயிலும்மென
மிஞ்சிடுந்திர ளாகிநிறைந்திடும் (அண்டத்தசுரரை)

அப்படைகளனைத்தையும் குமாரக்கடவுளழித்து அசுரர்கள் வரும் அண்டத்தின் வழியையுமடைத்தல்.

(உ) திக்கடங்கக்கைகள்வீசி மிக்கவிடும்புகள்பேசிச்
சிக்கெனக்கால்கணடித்துப் பற்கொடிதழைக்கடித்துத்

தேர்ப்பரிகளையுறுக்கி யார்ப்புடன்வீசைமுறுக்கித்
திண்டிறல்கொண்டகமேவி மண்டிவரிசைபிற்றுவித்
திக்கெனவணிவகுத்துச் சக்கரயூகம்வகுத்துச்
செகுத்திடுமெனச்சொலியுந் தகர்த்திடுமெனச்சொலியுஞ்
சிதைத்திடுமெனச்சொலியும் - உதைத்திடுமெனச்சொலியுந்
தின்றிடுமெனச்சொலியும் - வென்றிடுமெனச்சொலியுந்
தேய்த்திடுமெனச்சொலியும் - மாய்த்திடுமெனச்சொலியுஞ்
திரட்டிடுமெனச்சொலியும - உருட்டிடுமெனசசொலியுஞ்
சீரழித்திடுங்களென்றும் - பேரொழித்திடுங்களென்றுஞ்
செண்பகமலரில்வண்டு - கும்பல்கும்பலாய்த்திரண்டு
    தேனருந்தமொய்த்தவகைபோல் - சலபங்கள்வெங்
    கானனலைமொய்த்தவகைபோல் - அசுரவெள்ளந்
திரளோடெழுந்தொருங்கி - யிருகோடிமுன்னெருங்கி
செருக்களஞ்சென்றேயடுத்தனர் - சண்முகன்றனைத்
தருக்கிநின்றுபோர்கொடுத்தனர் - கொடுக்கும்போது
செஞ்சரவணக்கடவுள் - புன்சிரிப்பொடும்புடவுட்
சிங்கமெனவெழுந்துநின்றே - தேரைமுடுகி
வன்கணருக்கருகிற் சென்றே - நாணொலிசெய்யத்
    தீரன்மெய்த்துணை - வாகுவனுங்கணை
    மாரிவிட்டசு - ராதிபரைத்தலை
திருகிவிழும்படியழித்தான் - கூக்குரலிட்டுவீ
ழுருகிவிழும்படியொழித்தான் - ஒழிக்கவும்பின்
    திமிக்குலங்களுடன்றிரைமோதிய
    சமுத்திரங்களெனப்படுதானவர்
செறிந்திடவீரன்கைசளைத்தான் - நகைத்தப்பாலே
பிரிந்தவன்மனதுகளைத்தான் - அதனைக்கண்ட
    சேந்தனுஞ்சில வாளிதொடுத்துட
    னேர்ந்துவிண்புவி யாவையுமூட்டிய
தீயர்களைவென்றுதுமித்தான் - பிணக்குவையா
காயத்தையொன்றிடக்குமித்தான் - மறுபடியுந்
    திறந்துயண்டக டாகமடங்கினு
    முறைந்தடர்ந்த நிசாசரருந்திடு
திடுக்கெனவேவந்துகுதித்தார் - அய்யனைவெடு
வெடுத்துநின்றறம்பெதிர்த்தார் - ஸாமியும்வாயு
    தேவனைக்கடிதாயிரதங்கொடு
    மேன்மத்தியிலே விடெனக்கடு

திருவுத்தரங்கொடுத்தனன் - அங்கவன்தேரை
விரைவிற்கொண்டேவிடுத்தனன் - தேவர்கள்சேனா
திபனிரதம்புவி யிடத்திலும்மக
பதியுலகுங்கட - விடத்திலும் அதி
சீக்கிரஞ்சுற்றி வந்தடுக்க - அசுரர்மீதிற்
றுக்கியையனம்புதொடுக்க - கந்தன்விடுமத்
திரங்களொன்று தசஞ்சதமாயிர
முயர்ந்தசங்க மநந்தமதாகவே
சென்றசுரர்களைத்தொலைக்க   பக்கத்தொதுங்கி
நின்றவசுரரு   மலைக்க   விட்டபாணத்தாற்
சிரங்களற்று விழுந்தவரும் அடி
கரங்களற்று விழுந்தவருங்கொடி
சிவிகையற்றுவிழுந்தவரும்   பிடித்துவந்த
கவிகையற்றுவிழுந்தவரும்   மலைகளொத்த
திண்புயங்களுரங்கண்மருங்கொடு
மென்பொடிந்துநொறுங்கிநெடுந்தலை
சிதறிவிழுவோர்களநந்தம்   ஓரிகள்போலே
கதறிவிழுவோர்களனந்தம்   குடீரெனவே
சிலம்பருவியென - வாயினிலும் இட
மகன்றமுழையென - நாசியினுங்கறை
சிந்திவிழுவோர்களநந்தம்   தெய்வமேயென
நொந்துவிழுவோர்களநந்தம்   களமெங்கினுந்
திணுக்கெனப்புவனங்களதிர்ந்திடத்
துணுக்கெனப்பனையின்குலைபோலவே
திரண்டுருளுந்தலையநந்தம்   கடகடெனப்
புரண்டுருளுந்தலையநந்தம்   கபந்தந்திமி
திமிங்கலங்கண்மு - தலைகளெனக்குரு
தியின்பருஞ்சல - தியினிலமிழ்ந்துறு
சிரங்களுடலங்கள்பதைக்க   உயிர்போகாமல்
விரைந்துவிடகால்களுதைக்க   மணிரதங்கள்
சிவிகைகள்கவிகைகள் - கதலிகைமுதலி
மிதவைகளுததியில் - வருவதுபோலவு
திரக்கடலின்மிதந்தோடப்   பம்பரமெனத்
திருக்கிவிசையெழுந்தாட   பாணங்கள்வஞ்சர்
செவிக்குள்வந்து புகுந்துகுடைந்துகு
டலைக்களைந்து பரிந்தொளிவீசியே

சிறந்தெழுந்துஜொலித்திடவே தேவர்களின்பம்
நிறைந்துளங்கெக்கலித்திடவே பெருவெண்ணுவற்
    நீவிலும்அறு - நீவிலுமேலுல
    கேழிலும்பிண - மாமலையானது
திட்டுகளாகவே 'துன்றியே சாயிதேர்நிலை
விட்டெழும்பவிடமின்றியே களமெங்கினுஞ்
    செங்குருதிகண்மிகுந்துமலைகளொடு
    சிந்துவாரமெதிர்ந்ததுபோலுயர்
செங்கதிரொளியை மறைக்கச் ககமெங்கினும்
மங்கியிருண்மண்டி நிறைக்க கணக்கில்லாத
    சேனமுங்கழுகுங்கொடியுஞ்சதை
    யூனையுண்டுபிணங்களினின்றிரு
சிறையடித்தடித்து மிதிக்க மூக்கினுற்கொத்திக்
கறைமடுத்துடல முதிக்க நரிக்குலங்கள்
    சிசுக்கள்புடையொடு மிகுபசியாலெல்பு
    சித்துவயிறுகள் பொறுமியுமாயேங்.
திரத்திளைப்பார்த்துலையிட்டிட ஓசைகள்சமுத்
திரத்திலுமெங்கும்போய்முட்டிட ஞாளிகள்கூடிச்
    செறிந்துதொந்திகள் சந்துகளைக்கவி
    யெழுந்துமண்டையின் மூளைமணிக்குடல்
தின்றுகொழுத்தெக்களிக்கவே குதிகுதித்து
நின்றுதிரங்கொப்புளிக்கவே ஒன்றின்மேலொன்று
    சிடுத்தெயிறுகள் பிளந்துமுடுவலொடு
    கடித்துளரியே புரண்டுவெறியிலெருடு
செருக்களமெங்கினுங்குலைக்க பறவைகளுண்
டிருக்குநிலைகளைக்கலைக்கப் பேய்க்குலங்கூடித்
    திரித்திடுஞ்சடையடியில்விழத்தலை
    விரித்துடன்பிண - மலையையுரத்தொடு
சேர்த்திருகைகளாலெடுத்து வயிற்றின்பள்ளந்
தூர்த்திடங்கொள்ளாமன்மடுத்து ஆநந்தங்கொண்டு
    திருக்குமரனது மலரடிதனைமன
    திருத்தியழகுயர் - களரிகொளுமெவர்
கீர்த்தியைக்கொண்டாடிநடிக்க இவனேதிரு
மூர்த்தியென்றிசைகள்படிக்கக் குமரன்கண்டு
    தீக்கணைங்கணு தலின்விழியினிலெழ
    நோக்கியண்டமு - லவுபிணமலையினைத்

தீய்த்துவெண்ணீருக்கிவிட்டனன் துப்புரவாகக்
காற்றிலெழப்போக்கிவிட்டனன் பற்றுங்கங்காபத்
திரங்களைப்பலவாகவிடுத்துமு
னயன்றனைச்சிறைநீத்தினிலிட்டெழு
தெண்டிரைசூழ்புவிபடைத்தான் அசுரர்வரும்
அண்டத்தின்வழியையடைத்தான் அடைத்தவுடன்
தீப்பொறிகளுடல் பட்டிடவேசிலர்
வாய்ப்புட்டனுயிர்பி - ழைத்திடுவோமெனச்
சிந்தித்துக்கொண்டோட்டமெடுத்தார் நிலவறையின்
சந்துக்குட்சென்றோடிப் படுத்தார் இந்தவிதமாய்ச்
சிந்துரந்தீர - ககமிரதங்களொ
டைந்துகோடிவெ - ளங்களெரிந்திட
வெந்திடுங்கனன் மெழுகெனவங்கமெ
லிந்துசூரனு - மூன்றுசினந்திட (அண்டத்தசுரரை)

பிறகு சூரன் குமரக்கடவுளுடன் போர்புரிந்து ஸ்வாமியடைத்த அண்டத்தின் வழியைத்திறக்க அதினின்று மறுபடியும் வந்த அசுரப் படைகளை ஷண்முகா எரித்தழித்ததுமன்றி பஞ்சாயுதங்களை விடுத்து அண்டத்தசுரரைச் சங்கரித்தல்.

(௧) தந்திரக்குமரனிந்த· விந்தைசெய்ததைத்தெரிந்த
சாமளமுகின்மெய்யனுந் தாமரைவளர் துய்யனுஞ்
சல்லாபமாயன்பூறிப் பல்லாண்டுமிகக்கூறிச்
சாத்திரமறையாலேத்தித் தோத்திரமுறையாய்வாழ்த்திச்
சங்கந்தொனித்திடக்கண்டு பொங்கியேசூரன்வெகுண்டு
தற்பரச்சிவன்மகனைச் சிற்பரனைகுகனைச்
சமராடியுடன்வென்று அமராதிபரைக்கொன்று
சதைக்கிறேனினிப்பாரென்று மதத்திறப்பேசிக்கனன்று
சாதரூபந்தழுத்தி மேதகுமணிரதத்திற்
சகடபரிசையாய்மாட்டி இகலரிபரிகள்பூட்டிச்
சாரதிபரிகள்தூண்டக் கார்முகிலெனவேநீண்ட
தடந்தேரின்மீதெழுந்து கடந்தேகியேயடர்ந்து
சண்முகநாதனைப் பார்த்தே சூரபத்மன்றன்
கண்முகமுஞ்சிவந்தார்த்தே தற்பரமாகந்
தன்திருமேனியாய்வந்த - சுந்தரப்பரமன்முந்தத்
தந்தநல்வரத்தி னாலே அழிவின்றிநான்
எந்தநாளும்புவி மேலே வாழ்வதேயல்லாற்
சாவதில்லைநாளுமெனக் சேவல்செய்யுந்தேவர்முனஞ்

சாற்றினதையுண்மையென்றெண்ணி   யக்ரமமாகத்
தூர்த்தர்கள்போலென்னெதிர்நண்ணித்   துன்னுகிறாயுன்
றனைச்சிறுவனெனவினி   விடுகிறதிலை
யெனச்சொலுமொழிய-தனைமனதினிலுபர்
சந்தவரைக்கந்த   னுணர்ந்தே   பன்னிருகண்க
ளுந்தழற்பொறிகள்சொரிந்தே   தேவர்களுள்ளந்
தளர்ந்திடச்செய - முன்றனையேயவ
ளுளைந்திடச்செய - மென்கணைபேயுத்
தரஞ்சொலுமெனவில்வளைத்தான்   வளைத்திட்டவ
னுரம்புகக்கணைகள்   விளைத்தான்   அந்தவேளையத்
தலத்திலவுணனை - வீரர்களானவர்
வளைக்கவவன்விடு - வாளியினாலுயிர்
தட்டலைந்து   வாடினரே   பூதர்கண்முது
கிட்டலைந்திட்டோடினரே   ஓடவேயெட்டுத்-
தலைத்துணைவரொடு - வாகுவனுஞ்சிலை
வளைத்தசுரனுட - லூடுருவும்படி
சரமாரிகள்   சொரிந்திட   அவன்மேற்பட்டு
விரைவாயவைமுறிந்திடச   சூரன்ப்ரசண்ட
சரங்கள்தொட்டிவர் தேர்களொடுஞ்சிலை
தகர்ந்திடும்படி - செய்துரமீதிலுஞ்
சகத்திரங்கணைகள்தொட்டினன்   தனிவீரர்கண்
முகத்தினுமழுந்த   விட்டனன்   விட்டபாணங்கள்
தட்டுருவவேவி - லக்கரொடுந்துணை
யெட்டனுசருமு - டற்களையாகிவி
தனங்களுற்றுத்தியங்கினரே   களந்தனிற்ப
தனங்களுற்றுக்கயங்கினரே   வாகுவன்கண்டு
தடக்கரத்தினில்வாள்கொடுசூரனி
ரதத்திலுற்றவன் வார்சிலையானது
தக்கெனமுறிய   வெட்டினான் -   சூரனிவனைச்
சிக்கெனப்பிடித்துக்கட்டினான் -   கட்டியோரறை
தகர்த்துவீரனை விண்டலமீதினி
லெடுத்துவீசவு பன்றுயிரோடிருந்
தாரணியில்வந்துசேர்ந்தனன்   ஷடானனஸம்
பூரணனடியைச்சார்ந்தனன்   கடிந்துசூரன்
சரத்தொகுதிகள்வி - டுத்தறுமுகவனி
ரதத்தெழுகொடிமு - றித்ததிவிசையொடு

சாய்த்திடக்கண்டையன்முனைந்தே   யினியிவனை
மாய்த்திடவுள்ளத்தி னினைந்தே   எழுபாணத்தாற்
றயித்தியன்ரொடு - கணைகளையும்மணி
ரதத்துறும்பல - ரொடிகளையும் எதிர்
துண்டித்துக்கடலில் வீட்டினான்   சூரனகத்தைக்
கண்டித்துப்பின்னோடை வாட்டினான்   அதனைக்கண்டங்
தரத்திலுறைபம - ர்களுவகையினொடு
மொலித்திடலுமவு - ணனுமவருரமிசை
தாவியோர்கணையைத்தூவினான்   அய்யனுமங்கு
லாவியோர்கணையை யேவினான்   வஞ்சன்விடுத்த
சரந்தனைப்பொடி - செய்தலுமிருவரி
ரதநதனித்துட - னெய்தவிவைரகொடு
சந்திரலோகத்தினுஞ் செல்லும்   மலரயனு
றைந்திடும்லோகத்தினுஞ்செல்லும்   மாயனுலகுஞ்
சக்கரகிரியும் - அண்டமுழுவதுநொ
டிக்குளவனொடு - சென்றதிவிரைவொடு
சாமியீரேழம்புதொட்டனன் -   அவனுந்தேரைப்
பூமியிற்றிரும்ப விட்டனன் -   விட்டசுரன்பூ
தலத்தில்வாதழ - லம்புகளெய்ததை
விலக்கியுங்குக - னங்கவன்மீதெதிர்
சத்திரங்கோடிகள் வீசினான்   சூரனதனை
நொய்த்துகளாக்கியேயேசினான்   ஏசியேவஞ்சன்
சகத்திரங்கணை - அறுமுகன்மேல்விட
அதிர்த்தெழுந்தவை - புயமதிலேபடச்
சதனுளியாய்விலங்கவே   மத்தினிற்பட்ட
ததிபோலவன்கலங்கவே   ஐயனும்பின்பு
சகத்திரம்பல - வாளிசொரிந்திட
வொறுத்தவன்சிலை - நாணுமறுந்தெதிர்
தக்கணமறுவில்லெடுத்தான்   கெக்கலித்துற
மிக்குகனருகி லடுத்தான்   பிறகுகந்த
சாமியுஞ்சரமாரிகளாகவே
சாடிடும்பொழுதாகுலமாகவே
தானவனும்புவியில்வந்தான்   அன்பருக்கமு
தானவனும்புவியில்வந்நான்   வஞ்சனுந்தேரைச்
சமுத்திரம்பல - திசைகளினும் புக
விடுத்திடும்பொழு - தறுமுகனும் மிகு

தாரைப்பருங்கோல்களேற்றினன் சூரனேறிய
தேரைத்தவிடாகத் தூற்றினன் அன்னவன்முன்பு
தவத்தொடும்புரி - யாகமதிற்சிவ
னளித்தவிந்திர - ஞாலரதந்தனைத்
ததியில்வரும்படி கூறினன் அங்கதுவரக்
கதியோடதன் மீதிலேறினன் ஏறியேயந்தத்
தடத்திரதமிசை - நின்றசுரன்கடு
விடத்தையொத்தப்ர - சண்டமெனுமுத்
தண்டசரங்கள்விட் டெறிந்தான் - கந்தனடைத்த
வண்டத்தின்வழியைத்திறந்தான் - அதனினின்று
சத்தகுலபரு - வதமெனவேபல
சத்தமொடுமட - மடமடெனப்பரு
தரையிடங்கொள்ளாமல் நிறைந்தார் - அசுரர்பல
திரைபுவனமெங்கு முறைந்தார் - ஸாமியுங்கண்டு
சாக்கிரதைபுட னேநுதல்விழிகொடு
நோக்கியளவறு சேனையை முனிவொடு
சாம்பரெனநீற்றி விட்டனன் - பூமாதேவிமே
வாம்பொறையை மாற்றிவிட்டனன் - மாற்றவுமின்னந்
தளத்துடன்பல - கோடியவுணர்மள
மளப்புடன்கடு - கோடையிடியனைய
சத்தமிட்டிரைந்து மண்டினர் - ஸாமிதேர்தனைக்
கைத்தலத்திற்றூக்கிமுண்டினர் - மாலயன்றேடத்
தழற்பிழம்புருவெனமுனமண்டக
டகத்தையொன்றிய வரனருள்குகனெதிர்
சங்கரிப்பேனென்றுச்சரித்தான் - உச்சரித்துட
னுங்கரித்தவரை யெரித்தான் - அண்டத்திருந்து
தாவியேபல தசுவர்களின்னமு
மேவுமுன்னெழில் குருபரனும்பஞ்
சாயுதங்களைவிட்டடித்தான் அண்டத்திருந்த
தீயவசுரரை மடித்தான் கோதண்டஞ்சங்கஞ்
சக்கரங்கதை - வாண்முதலாலவு
ணக்குலங்களெ - லோருழிந்திட
வக்கணம்மிமை - யோர்பலகீதமு
முக்கியும்மலர் - மாரிபொழிந்திட (அண்டத்தசுரரை)

மறுபடியும் சூரன் பல விசித்ரமான ரூபங்களை யெடுத்துப் போர்புரிதல்.

விருத்தம்

தொகைக்கடங்கா வகிலவீண்டத் தசுர ரெல்லாந்
துவரையடித் திடுகளம்போற் றொலையச் சூரன்
சகிக்கவொண்ணாத் தீவினிவுடனே யான்முன் னீந்த
சக்கரந்தேர்ட் டதையுமைபன் கரத்திற் கொண்டான்
திகைத்தவனு மனந்தெளிந்தின் றிரண்டி லொன்று
செய்வதுவே கீர்த்தியெனச் சினந்து தேர்கொண்
டிகற்களத்தில் விசித்திரமாய்ப் பலரூ பங்க
ளெடுத்திட்டான் குமாரனும்போர் கொடுத்திட் டானே. (௯௪)

(௫௯) கீர்த்தனம். இராகம் - அசாவேரி—அடதாளச்சாப்பு.

பல்லவி.

ஆறுமுகவடி - வேலனுஞ்சூரபத்
மாசுரனுஞ்சண்டை செய்தாரே.

அனுபல்லவி.

சீறியெழுந்துகரும் பாரமைமலைபோலும்
சிந்திமும்மதங்களை யுந்துங்கைம்மலைபோலும்
மீறியெழுந்துறமுங் கார்முகிலிடிபோலும்
விரிந்தபுவனங்கள்கோ புரங்கொடுமுடிபோலும்
வீறுகொள்சிங்கஞ்சரபத்தொடு வடவைச்செங்கனல்போலும்
மேதகுசங்கந்தரளத்தொடு மலைதத்தும்புனல்போலும்
மாறுகொள்வஞ்சத்தவுணன்பல வுருத்திடல்கண்டு
வானவர்தங்கட்கதிபன்கையில் ஞானத்திரங்கொண்டு
மருவிவிடவவன் புரியுமருள்வலி
மறையவெயிலொளி நிறையவதிபொலி
பரவிவிரைவொடு கரமலரின்மிசை
படியவசுரனு ளிடியவருளிசை (ஆறுமுக)

சரணங்கள்.

(௧) நனித்துச்சூரன்வி தனித்துத்தேரினினின்று
பனித்தையோவிதற் இனிச்செய்வதெனவென்று
தடத்தொடண்டபித் திகையிடத்தினையேவி
விடக்கண்டையனக் கணத்திற்றேரொடுந்தாவி

சகத்திரங்கோடி வடிம்கக்கணைதொட்டுத்
துகைக்கச்சூரனப் புறத்தண்டந்தனைவிட்டுச்
சகத்திரத்தோடெட் டண்டமுழுதுநண்ணித்
திகைப்போடையனை மயக்கஞ்செய்திடவெண்ணித்
தடுக்குத்தடுக்காய்ப்பற்றி யிடுக்குமுடுக்குஞ்சுற்றித
தாண்டியவன்முன்செல்ல ஆண்டவனும்பின்மெல்ல
அடுத்தடுத்தெதிரோடி முடுக்கிப்பற்பலகோடி
அண்டமெலாந்திரிந்து உண்டுகணைசொரிந்து
சாமிவிசித்ரச்சமர்செய்யுஞ் சாதுரியத்தைத்தெரியாத
பூமகன்வச்ரத்தனுநொந்தப் போதினில சுதனுக்கோதத்
தாமவருக்குக்குகன்சீர்புகழ் யாவையுமர்த்தத்தொடுகூறிச்
சேயகரத்தைச்சொலும்போதகல் சேனுலகத்தைக்கிழித்தேறிச்
சக்ரவாளகி ரிக்குயர்தேர்களும்
உக்ரமாகவி டுத்திருபேர்களும்
தரணியாவையுஞ் சுற்றிப்பூம்சைவந்து
பரவும்போதுச ளைத்தசுரனயர்ந்து
தருகிநிற்பது கருதிவீரர்கள்
பருவயிற்றொடு நரைகொள்பூதர்கள்
சருவிவிற்கணை மலைகள்வீசியே
விருவிருப்பொடு மிழிவுபேசியே
தடைசெய்குறட்படை யலறிமகுபடை
தரையிலுருளவுஞ் சுரர்கள்வெருளவும்
அடுசெய்வெகுசர மடுமவுணனுர
மதிரக்கணையெய்ய வதிரயமழைபெய்யு (ஆறுமுக)

(உ) அளவிறந்தப டைகளும்போகியே
கனையொடிந்தப மூமரமாகியே
அன்னைமாயையை யுன்னித்துதித்திட
மின்னல்போலவள் முன்னிலுதித்திட
அட்டாங்கத்தண்ட மிட்டுத்தொழுதவன்
பட்டதைச்சொல்லி முட்டியழுதபின்
ஆதரவுடன் சூரனைத்தேற்றினள்
யாதுவேண்டுமென ரயெனச்சாற்றினள்
அழிந்ததன்படைமுற்று மெழுந்து நல்லுயிர்பெற்றும்
அமராடியெதிர்நின்று குமரன்றனையும்வென்று
தழைந்தவமரர்சிரம ஒழிந்திடும்படிவரந்
தருவாயென்றவன்சொல்லச் கருதிமாயையும்நல்ல

ஆழ்கடலுக்கப்புறத்திலுற் றிருக்குஞ்சஞ்சீவிவரை
யானதைநீயிக்கணத்திற்கண் டெடுத்திங்குற்றிடில்விரை
வாகவிறந்தோர்பிழைப்பாரென வுரைத்திட்டவனுடனேக
வாகுறுசிங்கத்திவனுரோ கணித்துப்பரவசமாக
ஆக்ரமித்திந்த்ர ஞாலரதந்தனை
நோக்கிபந்தச்சஞ் சீவிமலைதனை
யாகருஷணஞ் செய்யென்றுரைத்திட
வேகமோட்டைக் கொண்டதுவைத்திட

அரிமுகன்றரும கோபன்கரிமுகன்
எரிமுகனிரவி கோபன்புலிமுகன்
அகனிதஸமுக மானநிருதரும்
அய்விரதகஜ சேனையொடும்பரு

அண்டமுகடுகள் பிண்டுமலைபட
எண்டிசையுநிலை விண்டுதலைகெட
அமரரிருவிழி கடைகள்சொருகிட
அவுணருயிர்புகுந் துவகைபருகிட (ஆறுமுக)

(௯.) சுத்தமானசஞ் சீவிமலையாலே
செத்தொழிந்தவ ரர்கள்முன்போலே
தூமமோடர்த்த சாமத்திருள்களும்
வேமுறுங்கடுங் காடுந்திரைகளும்
சுற்றிவந்துவ ளைந்துகொண்டாலென்ன
சத்தமிட்டொரு மித்தருகிற்றுன்னச்
சூழ்ச்சியாங்குகன் கண்டுதிகைத்திட்டு
ஆச்சரியமுநீங் கொண்டுநகைத்திட்டு
துடிக்கக்கரங்களையு மொடித்துசிரங்களையுந்
துணித்திட்டுதிரமெழ பிணப்பெருங்குவைவிழ
மடித்துநீறுநீருக்கி நொடிக்குட்காற்றினிற்போக்கி
வருவரென்றுரையாடிப் பரவித்துதிகள்பாடித்
தூயகுகன் கிரீசாத்ரங்களை யாத்ரங்கொடுவிடுத்திட்டிட
வேயதினின்றனிலாத்ரமன லாத்ரமுலகழிக்கும்பல
சோதிசெயஞ்சலியாத்ரங்குலி சாத்ரமுரகாத்ரங்கடு
மேதகுபஞ்சமுகாத்ரமரி யாத்ரம்பிரமாத்ரத்தொடு
சுண்டுவிற்களுங் குண்டுங்கதைகளுஞ்
சூலமோடுவை வேலும்புதைகளும்
பிண்டிபாலமும் வாண்முற்காங்களும்
பெற்றிசேர்முச லஞ்சக்கரங்களுஞ்

சுடர்கொடிடிகட லொலிகளொளவெழுந்
தடலசுரரடி முடிசிதறவிழுந்
தடுகளரிமடு முழுதுமுதிர்சதை
யொடுகறையருவி பெருகும்படிகணை
சொரிந்தையனைவலம் புரிந்துகரதலம்
துலங்கவுகந்திடத் தலங்கள்புகழ்ந்திடக்
கரிந்தவுணனுளங் கலங்கியயர்ந்திடக்
கமலன்முதற்பல விமரர்வியந்திட (ஆறுமுக)

(ச) மத்தசூரன்செய் யுத்தியெலாங்கெட்டுச்
செத்தமாட்டுண்ணி போலவேமனம்விட்டு
மாறியிந்திர ஞாலரதந்தனி
லேறிவெஞ்சம ராடுங்களந்தனில்
வந்தனேகம யக்கம்பலசெய்து
சிந்தைநோகத்தி யக்கங்களுஞ்செய்து
மடக்கிப்பூதர்கள் வீரர்களையுங்கட்டி
எடுத்துத்தேரொடு மாகமதனையெட்டி
வாரிச்செல்கையில்ஸாமி வீரச்செங்கணைநேமி
மாட்டித்தேரொடும்பாரி லோட்டியிருத்தநேரில்
வீரச்சேனையினங்கள் கோரப்பூதகணங்கள்
மெய்மயக்கமுந்தீர்ந்து ஞகதவனுடனேர்ந்து
மாமலைகள்விற்சரங்கள்முற் கரங்கள்விட்டடிக்கப்பொரு
பாமரனுங்கற்சரங்கள்சத் திரங்கள்தொட்டடிக்கத்திரு
மான்மருகன்பத்திரத்தைக்கொடு விடுத்திட்டெதிர்தடுத்துச்சிலை
வார்குதையுங்கத்தரிக்கக்கிறு கிறுத்திட்டெனுறுத்திட்டுலை
வாய்மெழுகாயு ருகியோர்சூலத்தை
தீயனேவவச் சிராயுதத்தாலதை
வாயிற்கவ்விவ ரச்செய்துதாங்கித்தன்
காயும்வன்னிச்ச ரத்தைவிட்டோங்கிப்பின்
வாளவுணன்சிங்க வாகனத்தையன்று
வதைக்கக்கண்டசுரன் ப[illegible]த்துடன்கனன்று
மாளுந்தன்னுருவை மறைத்தொருசக்கிர
வாகப்பட்சியென வேகமொடுக்கிர
வடிவுடனேசம ரிடுகளத்தின்மிக்க
மதிக்குமரனுட னெதிர்த்தருகினிற்க
மிடியிலமரர்கள் தொடைநடுங்கிமெள்ள
விதிவசமென்றுள்ள மதிவிதனங்கொள்ள (ஆறுமுக)

சக்ரவாகப்பட்சி யுருவமாகவந்த சூரனுடன் குமரக்கடவுள் இரதத்தினின்றும் இறங்கி இந்திரனை மயிலாகவர ஆக்ஞாபித்து அம்மயில்மீதேறிச் சண்டைசெய்து சூரனது மாயைகளை ஒவ் வொன்றாயழித்தல்.

விருத்தம்

சக்கிரவா கப்புறவை வடிவங் கொண்டு
சண்டையிட வருமிவனைத் தேர்மே னின்று
மிக்கமர்செய் திடனமக்கு நீதி யல்ல
விளங்கியபொற் சிகியுருவாய் வருவா யென்ன,
அக்கணமே யிந்திரனவ் வடிவங் கொண்டா
றுமுகக் கடவுளந்த மயின்மீ தேறி
உக்ரவஞ்சன் மாயையெல்லா மொன்றன் றாக
ஒழிக்கின்ற னமரர்பய மொழிக்கின் றானே. (கூ)

(௬எ) கீர்த்தனம் - இராகம் - கல்யாணி — ஆதிதாளம்.

பல்லவி

மயில்வாகனத்திலாரோகணித்தானே - கந்தன்
மதத்தசூரனகத்தைத்தணித்தானே

அனுபல்லவி.

பயிலசுரன்சகோரப் - பட்சிரூபம் எடுத்து
பதறிப்பூதர்வீரர்கள் கத்றச்சமர் தொடுத்து
எயிறுமூக்கினுலெற்றி - இரத்தவெள்ளங்க ளோட
வக்கமுற்றனைவர்களுங் கூக்குரலுற்றுத்தள் ளாட
மயூரவாகத்தையும்பின் - மறித்துச்சீறிவெ குண்டு
வருத்தப்படுத்தலுங்கண் - டுறுத்தையனெதிர் கொண்டு
உயராசுகங்களைவிட் - டதிவேகமா யடிக்க
ஓங்கியெழுந்துகையில் - தாங்கும்வில்லை ஒடிக்க
ஓட்டமாகவரும்பறவைக்கெதிர்
நீட்டிவாளதினுலிரு துண்டிட
வீட்டியுந்திருடன் புடையாமலே,
சேட்டையாலுருவம்பலகொண்டிட (மயில்)

சரணங்கள்.

(க) அவனிவடிவுற்றவன் - எழுகடலையுமூடி
அனிலன்சூரியன்செல்லும்வழி தூர்க்க - ஐயன்
கவனமுடனேநெருப்பு - கணையைத்தொடுக்கவெழு
கடல்போலெழுந்தந்தமாயை - யைத் தீர்க்க - அவன்

உவரியுலகையுண்ணூர் - வூழிப்பெருவெள்ளம்போல்
உருவெடுத்தண்டங்களெல் லாம் போர்க்க - ஆதி
மவுனகுருவும்நூறு - வடிகணைதொடப்பெரு
வடவைக்கனலெனச்சென்றதைப் போக்க - பின்னும்
நவையஞ்சாவசுரன் அக்கினியாய்நின்றழல் தூற்ற
நாதனுயிரம்பாணம் - மோதிவிடலுஞ் சீற்ற
பவனவ்டிவங்கொண்டு - பரந்திட்டதனை மாற்ற
பரவிசண்டமாருதப் - படிவங்கொண்டெதிர் தேற்ற
செவிக்கண்ணரவினம்போல் - இலக்கம்பாணங்கள் சென்று
சினத்தபெருங்காற்றுகள் - அனைத்தும் நொடிக்குள் தின்று
புவனமயங்கச்சூரன் - பூதவே தாளங்கள்
போலுமுலகுபதி - னெலொடண்ட கோளங்கள்
பொடித்திடக்கன - பேருருவத்துடன்
அடுத்தெதனையன் மூன்றின் றுகனைந்திட
விடுத்திடும்பல கோடிசரத்தினால்
இடர்க்கண்மாயையழிந்து துலைந்திட (மயில்)

(உ) தற்பரனுங்குமரன் - எப்பொருள்களுமண்ட
சராவசரமும்தன்னுள் மதித்தானே - மதித்
தற்புதமாகியவி - ராட்புருடனுகியங்
கசுரன்கண்ணிற்கெதிர்வந் துதித்தானே - இன்னம்
நுட்பமாகிய அஸ்திர - சேனைதனை எவ்
அற்பன்மனத்துண்பாசைச் சதித்தானே - சூரன்
உட்புலனேடிவனே - எப்பொருட்கு நீசமென்
றுருகிப் பற்பல விதம் துதித்தானே - துதித்
துப்புனலிற் பாசித - னைப்போலவ்வெண்ண மாறி
தூங்கியெழுந்தவன்போல் - ஓங்கியவுணன் மீறி
பற்பலரூபத்தோட - திர்ச்சிகொண்டெதிர்த் தேறி
பதுங்கிப்பூதர் வீரர்கண் - பிதுங்கக்கணைகள் தூறி
இப்படிச்சண்டை செய்வி - யப்பைக்கண்டெதிர் நண்ணி
இனியிவன் சண்டை நாளைக் - கேதுநமக் கென்றெண்ணி
மெய்ப்புடன் மனத்தில்யோ - சித்துத்தாமதமாக
விளையாட்டெனவே யமர் - விளைத்தவனுயிர் போக
வீட்டிடாமலனே கவிதம்பயில்
காட்டியே குகனுஞ்சரமெய்திட
வாட்டமின்றி யினப்பல வாறதி
போட்டியாலவனுஞ்சமர் செய்திட (மயில்)

பிறகு ஷண்முகர் தன் வேலை விடுத்தலும் அதைக்கண்டு பயந்து சூரன் கடலிற்குள் மறைந்து மாமர வடிவமாக நிற்க அதை வேல் இரண்டு கூறாய்ப் பிளத்தலும் அவ்விரண்டு கூறுகளும் சேவலும் மயிலுமாயெழ குமரக்கடவுள் அம்மயின்மீதேறிச் சேவலைக் கொடியாய்ப் பிடித்துக் கொள்ளல்.

(ரு.) அக்கினி பகைவர்தூற் - சனரை மிஞ்சவிடலா
காதென்றரி சொலவுட் பரிந்தானே - கந்தன்
அக்கணமே முனைந்து - கைக்குருதிவை வேலை
அர்ச்சனை செய்து மலர் சொரிந்தானே - சொரிந்
திக்கணம் சென்றசுர - னைக்குடல் பிளந்துவா
என்றெடுத்திட்டுத்தாரம் பூரிந்தானே - அயில்
உக்கிரமாகவே வரக்கண்டு சூரன்பயந்
தோடிக்கடலிற்குள்ளே பிரிந்தானே - மறைந்
தக்கடலினிலொரு - கொக்குருவாய் வளர்ந்து
அந்தரவுலகத்தை - உந்தி யெட்டி பளந்து
நிற்கு மரத்தினைவேல் - புக்கிரண்டாய்ப் பிளந்து
நிறை கடலினில் தள்ள - வெருவிச்சூரன் தளர்ந்து
மெய்க்குந்தன்னுருவத்தோ - டெக்கி நின்று போராட
வீறியவனுடலைக் - கீறிப்புவியிற் போட
வர்க்க மயில் குக்குட - மாகிச்சிறை யடித்து
வரக்கண்டதன் மேலையன் - சிரித்தெழுந்து நடித்து
வாரணத்தை நெடுங்கொடி யாகவே
ஓர்கரத்திலணிந்து திகழ்ந்திட
ஆரணத்தனரிந்த மனேனையர்
ஆர்வமுற்று மகிழ்ந்து புகழ்ந்திட (மயில்)

சந்த விருத்தம்

விடமணிகண்டத் திருருத்திரனு ரருள்வரமும்பெற் றுரமுற்றுடன்மா
விரிவுறுமண்டப் புறவிற்பகூடகொண் டினிதேகி
விதிகொடடச்ந்திட் டடமுற்றமரா பதியையுவெந்திட் டிடமுற்றழல்தூ
வியுமவர்சம்பத் தையுமுற்கொளைசெய் தாமாதர்
வடிவுறநொந்திட் டலறத்துயரோ டனைவருமஞ்சிக் கதறச்சுரர்கோன்
மகனையுமுந்திச் சிறையிற்கொடுசெந் தளையாடி
மலரவனஞ்சக் கரனக்கினிமே தகுநமனெண்டிக் குரிமைத்தலைவோர்
வழிபடுதொண்டிட் டிடமற்புகழ்பெற் றிடுசூரன்

அடல்புரிவஞ்சத் தொழில்மற்றவெலா மழிவுறவும்பர்க் குவகைப்பெருவாழ்
வதுபெறவெங்கட் கிறைபொற்கையினின் றதிரோடும் [யிட்டடலர்
அனன்மழைமண்டிப் புகையுற்றிடியோ டெதிர்கொடுமண்டித் துளை
னதையிரு துண்டிட்டுயர் விட்புனலில் தலைமூழ்கி
கடலுலகம்பொற் கிரியெட்டொடுபா தலவுலகுஞ்சுற் றியுமப்பொழுதே
கதிரொளிமங்கிச் சுழலத் தனிமெய் ப்ரபைவீசி
கருதிய வன்பர்க் கிதமுற்றவெலா மருளியசெந்திற் குமரப்பெருமாள்
கரமிசைதங்கிக் களிபெற்றதுசெங் கதிர்வேலே (௬௬)

முந்தி மயிலும் சேவலுமாயிருந்த இந்திரனும் அக்கினியும் தங்கள் தங்கள் உருவங்கொள்ள பிறகு குமரக்கடவுள் பாசறை சென்று தெரிசனமளித்தல்.

பின்னும் விருத்தம்.

பொற்கரத்தி னிற்குமர னமிலைக் கொண்டான்
　　புரந்தரனு மியமயிலுஞ் சேவ லான
வக்கினியும் மிருவருந்தம் முருவங் கொண்டா
　　ரடலசுர ருங்கலப மயின்மீ தேறிக்
குக்குடகே தனமதைப்பொற் கரத்திற் றாங்கிக்
　　குலிசன்முத லமரர்கண்மா யவனுஞ் சூழ
விற்கனகப் பாசறைசென் றடியார்க் கின்ப
　　விருந்திட்டான் றெரிசனந்தந் திருந்திட் டானே. (௬௭)

(௫அ) **கீர்த்தனம். இராகம் - பிலகரி—சாப்புத்தாளம்.**

பல்லவி

தெரிசனம் தந்தானே - ஷண்முக நாதன்
தெரிசனம் தந்தானே

அனுபல்லவி

மருவுலவு வாகை மாலை புனைந்திருந்து
வாகையொடு மயில் வாகனத்திருந்து (தெரி)

சரணங்கள்.

(க) நிருதவசுரை　　யழித்து - பூமிபாரத்தை
நிவர்த்தியாகவே　　ஒழித்து - படைக்கலங்கள்
கரதலமிசை　　தாங்கி - விஜயலெட்சுமி
கரங்கள்பெற்றருள்　　ஓங்கி - சுந்தரமான

திருமுடிகளினில் மணி மகுடம் துன்ன
செவியின்மகரகுண் - டலங்களொளிமின்ன
வரையைநிகர்புயம் - அதில்வளே துலங்க
மறைச்சதங்கைபத - மலர்மிசையிலங்க (தெரி)

(உ) தரணியோர்கலி மாற - வானுறையுமைந்
தருவும்பொன்மலர் தூற - அறவோராசி
சுருதிமுறைதன் வழங்க - முழவந்தெய்வ
துந்துபியொலி முழங்க - நாரதருங்கை
விரல்மருவியே தந்திரியிசை படிக்க
மின்கொடியிடையரம்பையர் நடிக்க
கரியவுணரெனும் - பொறைவல்லிருள் நீக்கி
கதிருதயமெனக் - கருணைவிழி நோக்கி (தெரி)

(ங) பாரிடருளம் கதிக்க - படைத்தலைவர்
பரிந்தின்பமுடன் குதிக்க - இலக்கத்தெட்டு
வீரர்களுளம் களிக்க - மாலயன்முதல்
விபுதர்களுமெக் களிக்க - வேத்திரங்கொண்டு
சீருடன்நந்திதேவருங் கட்டியம்போட
செயசெயெனச்சிவ - கணங்கள்துதிபாட
வார்கழலிற்பணிந் - தோர்பெருகுவீர
வாகுதேவன்மகிழ்ந் - தாகங்களிகூர (தெரி)

சூரபத்மன் முடிவைக்கேட்டு பதுமகோமளே போர்க்களம் சென்று புலம்பல்.

விருத்தம்

பத்தஜனங் களுக்கினிய சேவை தந்து
　　பாசறையி லறுமுகன்வீற் றிருந்தா னப்பால்
மத்தமிகு சூரனிறந் ததுகேட் டேங்கி
　　மதிப்பதும கோமளேப்பெண் சகிமார் சூழ
கொத்தலர்பூங் குழல்சரியப் பதறி வந்து
　　துணையிழந்த மடமயில்போற் சோர்ந்து வாடிச்
செத்தகண வனைக்காணு தலம லந்து
　　தேடினு ளொப்பாரி பாடி னுனே. (கூ௮)

(ருகூ) தீபதை. இராகம் - ஆகிரி—சாப்புத்தாளம்.

(க) ஐயயோபாவியிதற்கென் - செய்குவேனென்றனைப்போ
அந்தரத்திலேவிட்டாயே - ப்ராணநாயகா - பொல்லாக்
கைதவங்காணியாய்நம்பி - துய்யசெய்கையைமறந்து
கண்தெரியாமற்கெட்டாயே ப்ராணநாயகா.

(உ) சிந்தித்துநீயாபிசார - மந்திரத்தாலோமஞ்செய்து
சிவனிடம்வரம்பெற்றாயே - ப்ராணநாயகா - அவ
தந்திரஞ்செய்வதுதனக்க - ந்தரமென்றறியாமல்
சாய்ந்துயிரொழிந்திட்டாயே - ப்ராணநாயகா.

(ங) திட்டமாகவேயுகநூற் - றெட்டுவரையிலெனக்குத்
தீதுகள்வாராதென்றாயே - ப்ராணநாயகா - அட்டா
துட்டியாலவ்வரமெல்லாம் - பொட்டெனத்துலைத்திட்டொன்றும்
சொல்லாமல்நீயுஞ்சென்றாயே - ப்ராணநாயகா.

(ச) சூத்திரஞ்செய்துதேவலோ - கத்திலுள்ளமாதர்களைக்
கொண்டுகற்பழித்திட்டாயே ப்ராணநாயகா - அந்தப்
பத்தினிமாருள்ளநொந்தெ - றுத்திடுங்கனலால்வெந்துன்
பவுஷெல்லா மொழிந்திட்டாயே - ப்ராணநாயகா

(ரு) சவுரியஞ்செல்வம்பெற்றவர்க் கவகுணமாகாதென்றுன்னைத்
தாழ்ந்துநான் வேண்டிக்கொண்டேனே ப்ராணநாயகா - பாரில்
அவலமாய்வாழ்பவரெல்லாம் - சபலமின்றிச்சாவதுன்றன்
அளவினில் நிசங்கண்டேனே - ப்ராணநாயகா.

(சு) ஐயரிகொளுத்தியும்பர் - தெய்வலோகத்தையுங்கொள்ளை
அடித்தனீதஞ்செய்யலாமோ ப்ராணநாயகா - பூவில்
மெய்யரசனன்றுகேட்பான் - தெய்வமின்றுகேட்கும்
என்றவசனம்பொய்யாமோ - ப்ராணநாயகா.

(எ) சண்டாளியஜாமுகியுன் - தங்கைசெய்யும்சதிக்கெல்லாம்
தட்டாமலிடங்கொடுத்தாய் - ப்ராணநாயகா - எங்கும
பெண்டுகள்மூப்பாங்குடிக் கிடைஞ்சல்வருமென்பதைநீ
பேணாமலுயிர்விடுத்தாய் ப்ராணநாயகா.

(௮) கந்தனைநிந்தனைசெய்த கந்தனையடைந்துவீணில்
காய்ந்தயர்கள்தொடுத்தாயே ப்ராணநாயகா - யானை
தன்றலை மீதிலேமண்ணைத் - தான்கொட்டிக்கொண்டாற்போல்விரு
தாவிலென்னைக்கெடுத்தாயே ப்ராணநாயகா.

(௯) அதியகங்காரமானது பதனத்திற்கேதுவென்பதை
அறிந்தடங்காமற்போனாயே ப்ராணநாயகா - நெஞ்சில்
இதமகிதங்களிரண்டின் - பகுதியையுணர்ந்திடாமல்
எடுப்பார்கைப்பிள்ளையானாயே ப்ராணநாயகா.

(௰) தொட்டுச்சண்டைக்கென்றடி - யிட்டமுதல்நாளில்தானே
தோற்றுடைந்தோடிவந்தாயே ப்ராணநாயகா - முந்தித்
திட்டெனத்தலைமீதிலே - முட்டியுங்குனியாமலே
சிந்தைமயங்கிநொந்தாயே - ப்ராணநாயகா.

(௰௧) மெய்த்துணைச்சிங்கமுகன்சொல் - புத்தியைக்கேளாமல்வெறி
வெடுத்துமதிமருண்டாயே ப்ராணநாயகா - ரு
சித்திடுங்கரும்பானதைக் கைத்திடும்வேம்பாகவெண்ணிச்
செருக்களத்திலுருண்டாயே ப்ராணநாயகா.

(௰௨) வேலைக்குமரன்விடநீ - வேலைக்குளோடிமறைந்தும்
விட்டிடாமற் பின்சென்றதே ப்ராணநாயகா - அது
காலைச்சுற்றும்பாம்புகடித் - தாலன்றிவிடாதுபோலக்
கறுவியேயுனைக்கொன்றதே ப்ராணநாயகா.

(௰௩) எந்தநாளினுமென்வாழ்க்கை - சிந்திடாதென்றெண்ணினவென்
எண்ணங்களெல்லாம்பொய்யாச்சே ப்ராணநாயகா - திருச்
செந்திநகர்வேலன்கையால் - மைந்தர்பெருவாழ்வும்போய்நீ
செத்திறந்ததுமெய்யாச்சே ப்ராணநாயகா

பிறகு பதுமகோமளை முதலிய ஸ்திரீகள் அக்நிப்ரவேசம் செய்தல். கடலில் மீனுருவாயிருந்த இரணியன் வந்து இறந்துபோன சூரன் முதலிய அசுரர்களுக்கு உத்தரக்கிரியை நடத்தி நற்கதி யடைய தவத்திற்கேகல். பின் குமரக்கடவுள் ஆக்ஞையால் வீரபாகு தேவர் சிறைச்சாலையிலிருந்த ஐயந்தனை யழைத்துக்கொண்டுவர அவன் குமரக்கடவுளைத் துதித்தல்.

விருத்தம்.

உத்தமி பதும கோமளை முதலா வுரிமைமைந் தரின்மனை வியரு
மோடிகுண் டமதிற் குதித்துயி ரிறந்தா ரொலிதிரைக் கடலின்மீ னுருவாய்
மத்தியி லிருந்த விரணியன் கேட்டு வந்துதன் றந்தைதாய் முதலா
மாண்டவர் தமக்குச் சுக்கிர பகவான் வழுத்திய விதிப்படி நன்று
யுத்தரக் கிரியை முடித்துடன் றவஞ்செய் துயர்கதி யடையவென் றகன்று
னுரிமைசேர் துணைவ னறுமுக னருள்கொண் டழைச்சிறைக் களத்தினங் [கிருந்த
பத்திமான் சயந்தன் றனையுவந் தழைக்கப் பரிந்தவ னமரரொ டெழுந்து
பணிந்தெழிற் குமரன் பதமல ருளத்திற் பதித்தனன் மிகத்துதித் தனனே (சுக)

(சுய) தீபதை. இராகம் - செஞ்சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி.

(க) ஸாமிநாததயாகரசுபகர - சவுந்தரியுமையருள் வரபால
ஸோமசேகரகுமாரஷடானன - சுந்தரநதஜன பரிபாலா (சிவஸாமி)

(உ) அங்கிமின்னாரறுவர் - கொங்கையமுதுண்டருள்
ஆடல்புரிந்தமஞ்சளா காரா - நாளும்
சங்கநிதியென விளங்கியன்பருக்கிஷ்டவம்
தந்தருள்புரியும்பொன்மயில் வீரா - (சிவஸாமி)

(ங) அண்டசராசரங்கள் - அனைத்தும்க்ஷணத்தழித்துண்
டாக்கும் வல்லமையுள்ள பெரியோனே - அ
கண்டிதமானமணி - மந்த்ரவேதாகம
கலைஞானங்களுக்கெல்லாம் உரியோனே (சிவஸாமி)

(ச) முத்துறுங்கடல்சந்த - னுத்திரிமுதலான
முடிவரைகளுக்கெல்லா மன்னவனே - இச்சா
சத்தியினாலே பஞ்ச - கிருத்தியமும் நடத்தும
தற்பரம்பொருளான முன்னவனே (சிவஸாமி)

(ரு) அம்புயனறியாவரும் ப்ரணவப்பொருளை
அரனுக்கின்புறவுரைத்தருள் நீதா - உயர்
தென்பொதிகையில்வளர் - கும்பமாமுனிக்குப
தேசமருளியசின்மய போதா (சிவஸாமி)

(சு) பூர்த்தியாகவோராறு - மூர்த்தமும்திரண்டொரு
பூரணமாய்வந்தவ தரித்தாயே - மன
தார்த்திகளனைத்தையும் - தீர்த்துரெட்சித்தெங்களுக்
கனையுந்தந்தையும்போலா தரித்தாயே (சிவஸாமி)

(எ) உயிருக்குளுயிருமாய் ; அணுவுக்குளணுவுமாய்
உள்ளும்புறம்மொன்றாய் உறைந்தாயே - கணு
வியலுற்றகரும்பினி - ரசமும்பூமணமும்போல்
எள்ளிலெண்ணைபோலெங்கும் நிறைந்தாயே (சிவஸாமி)

(அ) தொட்டுன்பேர்சொல்லிவெண்ணீ - றிட்டிடில்பிரதிபந்த
தோஷசங்கைகளெல்லாம் பறந்திடுமே - பல
கஷ்டஞ்செய்பிணிமுதல் - விட்டகன்றுடன்வஜ்ர
காயசித்திபத்தியும் சிறந்திடுமே (சிவஸாமி)

(கூ) பயந்தருஞ்சிறையிற்பட் - டயர்ந்தஎளியனைச்சொப்
பனத்தில்வந்துதழுவித் தேற்றினையே - மிகத்
துயரஞ்செய்தவெஞ்சூரைத் - துலைத்துப்பவக்கடலில்
சோர்ந்தவெங்களைக்கரை யேற்றினையே (சிவஸாமி)

(ய) தத்துங்கடலின்மீனெடுத்துச் சுமந்ததேவர்
தலையிலுற்றபுண்களை மாற்றினையே - நிதம்
கத்தியலறச்சிறை - வைத்துநிகளமுற்ற
காற்புண்ணத்தனையின் ஆற்றினையே (சிவஸாமி)

(யக) குத்திரங்கள்செய்கின்ற - சத்துருக்கள்குலத்தைக்
குலைத்துச்சமரிற்புறம் கண்டாயே - நாளும்
பத்தர்கள்தமக்கிஷ்ட - சித்தியெல்லாமுதவிப்
பாலிக்கும்வேலையும்கைக் கொண்டாயே (சிவஸாமி)

(௰௨) தீயவெஞ்சூரன்செய்த - மாயையெல்லாமொன்றொன்றாய்த
தீர்த்திரணகளத்தைத் துடைத்தாயே - பா
லாயகடலிலன்று - மாயன்கடைந்தளித்த
அமுதம்போலவேவந்து கிடைத்தாயே (சிவஸ்வாமி)

(௰௩) எதிர்த்துரும் மூர்த்திகளிங் குதித்தெழுந்தாலு மிந்த
இகல சுரரை வெல்ல முடியாதே - அன்பு
கதித்து நீசரவணத் துதித்திடா விடி லோருக்
காலு மெங்கள் துன்பங்கள் விடிபாதே (சிவஸ்வாமி)

(௰௪) மைமுகிலானவை - செய்யு முதவிக்குக்கை
மாறுலகஞ் செய்யுமோ விள்வாயே - எங்கள்
உய்யு முடலுயிரும் செய்ய பொருளுமுனக்
கீந்தோமிதனை யொப்புக் கொள்வாயே (சிவஸ்வாமி)

பிற்கு கந்தன வீரமகேந்திர நகரைக் கடல்கொள்ளும்படி செய்து சகல தேவர்களுடன் திருச்செந்தூர் நகர்க்குவருதல்.

விருத்தம்

அமரரொடு சயந்தனிவ்வா றனந்தக் கடலிலமிழ்ந் தாடிப் பாடி
யாறுமுகக் கடவுளிணை யடிமலரைத் தொழுதருகிலமர்ந்தா னையன்
விமரிசை சேர் வீரமயேந் திரநகரைக் கடல்விழுங்க விடுத்து மாயோன்
வேதனிமை யோர்கண் முதந் பூதர்களும் வீரர்களும் வியந்து போற்றத்
தமனியமாம் பாசறைவிட் டெழுந்துமயில் வாகமதிற் றாவித் தேவர்
சாமரைக ளேலயதுபோ லிருபாலு மிரட்ட வெற்றிச் சங்க மோடின்
பமுலவுவாத் தியமுழங்க மறையவரா சிகள்வழங்கப் பரிந்துவானிற்
பரிபூர்ன மாகவுவா மதிவந்தா லெனச் செந்திற் பதிவந் தானே (௭௰)

(௬௧) கீர்த்தனம் இராகம் - கமாசு—ஆதிதாளம்.

பல்லவி.

செந்திநகரில்வந்தானே - சிவகுமாரன்
செந்திநகரில்வந்தானே.

அநுபல்லவி.

மந்தமா ருதமுலாவ - வாரணகேதனம்கூவ
வரிச்சங்கந்தரளம்பன் - மணிச்சங்கந்தரங்கம்தெண்
திரைச்செங்கரங் கொண்டெற்ற - மருச்சந்த வரையுற்ற (செந்தி)

சரணங்கள்.

(க) நிறைகடலெனு ஆர்த்து சமர்தொடுத்த
நிருதரையாகப் பார்த்து அமரர்க்குற்ற
குறைகளனைத்தும் தீர்த்து அன்பர்களுள்ளம்
குளிர்ந்திடக்கருபை பூத்து பூதகணங்கள்
கூட்டங்கள் கொண்டாட்ட - பாட்டங்கொண்டெழுந்துகொண்
டாட்டமுற்றிடமுர - சீட்டங்களுமுழங்கச் (செந்தி)

(உ) மாலயன்முதல் தொடர்ந்து அவரவர்தம்
வாகமீதேறி அடர்ந்து விண்டலமீதில்
காலிற்கடிதாய் நடந்து வருணன்வழி
காட்டத்தென்கடல் கடந்து தெய்வகம்மியன்
கணித்தவகையினுடு - மணித்தொகுதிகளினற்
பணித்துநிர்மிதம்செய்த - அணிப்பொன்மய விமானச் (செந்தி)

(ங) தேவதுந்துபி அடிக்க வீரபாகுமெய்த்
தேவனுடைவாள் பிடிக்க நாரதர்கீதம்
நாவிசையுடன் படிக்க ரம்பையரபி
நயமோடுவந்து நடிக்க இந்திரனுந்தன்
நந்தனவனமுறை - ஐந்தருமுகைகள்வி
ரிந்தமலர்கொடுசொ - ரிந்துதுதிபகரச் (செந்தி)

உயுத்தகாண்டம் முற்றுப்பெற்றது.

விருத்தங்கள்	...	...	எ௰
கீர்த்தனங்கள்	...	...	கூக

ரு-வது தேவ காண்டம்.

தெய்வயானை பரிணயம்.

குமரக்கடவுள் சிவாராதனை புரிந்து திருப்பரங்
கிரிக்கெழுந் தருளுதல.

விருத்தம்.

செந்திலம் பதிபிற் சுந்தரக் குமரன் றேவர்கள் பணிபுரிந் தேத்தத்
திருவருள் கூர்ந்து சிவார்ச்சனைக் குரிய திரவிய முழுவது விரைவி
லைந்தரு வுடனே காமதே னுவுமீய கடுத்துவந் தளித்திட வதனு [விதியான்
ரம்பமாந் துறையிற் பவித்திரம் புனைந்து அனுக்ஞைஸங் கற்பமெய்
மந்திர வருண சூக்கமும் புகன்று மணிக்கடல் படிந்துகண டிகைபொன்
மலர்த்துகி லொடுநற் றிருவெணீறணிந்து மகிழ்ச்சியோ டாசனத் திருந்து
தந்திர மனுவா லுமையொடு பரனைத் தாபனஞ் செய்துபன் மலர்கள்
சாத்தியன் பொடுமெய்ப் பூசனை புரிந்து தனித்துநின் றெதிர்துதித் தன
[னே. (க)

பின்னும் விருத்தம்

கனத்தபொன்மே ருவைச்சிலையாய் வளைத்தநீலக்
கந்தரனைத் துதிபுரிந்து செந்தூ ரையன்
வனத்துளப மணிந்தசெங்கண் மால்ஸ ரோசன்
வானவர்கோன் முதலமரர் பூதர் வீரர்
முனைத்தசிவ கணங்களுடன் விஜய பேரி
முழங்கமயின் மீதிலெழுந் தருளி நாளுந்
தன்க்குரிய பரங்கிரியை மனக்கண் ணலட்
சணங்கண்டான் களிப்பொடுப யணங்கொண் டானே. (உ)

(க) கீர்த்தனம் இராகம் - ஆரபி—ஆதிதாளம்.

பல்லவி

திருப்பரங்கிரிக்கெழுந் தருளினர் - எழில்
சிறந்தஷடாக்ஷரமெய்ப்பொருளினர்

அனுபல்லவி.

தருக்குலங்களடர்ந்த புரிச்செந்தூரிலி ருந்து
சங்கத்தொனிக்ஜய மங்களமோடு வந்து
அருடகனிந்தபன்னிரு விழிக்கருணை பொழிந்து
அலங்கல்வேலொடுபடைக் கலங்களணிந்து கந்து (திரு)

சரணங்கள்.

(க) பொன்னின்மரகதமுந் துன்னி யிழைத்ததொத்த
புள்ளிமயின்மீதி னின் மேவியே - யொளி
மன்னும்வாகன மீதி லுன்னிவளைந்து வரும்
மூலயனுடனேகு லாவியே - தாரை
சின்னமொடுமெல்லரி சல்லரிகள் தடாரி
திமிலைதவுண்டைமொந்தை ஜயபேரிகனபேரி
யின்னம் பல்விதமான வியங்களலைகொள்வாரி
எனமுழங்கத்தேவர்கள் பணிகொள் பூமலர்மாரி
இறைத்திடப்பலரம்பையரதிநட மியற்றிடத்துவசங்கள்ககனவெளி
மறைத்திடத்தவவந்தணர்கள்சுருதி வழுத்திடக்கமலங்களருவிமிகு
(திரு)

(உ) பொற்கனகச்சிறை - யடிக்குமோசையாலெழு
புவனங்கிடுகிடென நடுங்கவே - வன
மிக்குறும்பாதலத் திருக்குநாகருஞ்செவி
விடைத்துத்தலைகள் குனிந் தொடுங்கவே
திக்கெஜங்களுந்திகிலிட்டு யலம்பதற
சிங்கம் யாளிபுலிதுரங்கமெலாங்கதற
மொய்க்கருமுகில் களிடிக்கணங்கள்குதற
முடிக்கிரிகள் தகர்ந்து பொடிப்பொடியாய்ச்சிதற
முடுக்குடன்றுடிவாரணகேதுவு முனைத்தெழுந்து தீவரமாகவே
உடுக்குலங்களை யாயலகால்விழ வுதிர்த்துவிண்டல வீதியின்
[மேலெழ (திரு)

(ங) வில்லார்மழுக்கவேளந்து - வல்ல பூதர்செல்லோசை
விரிகடலினொலியை யடக்கவே - துணை
மல்லார்திண் புயவீர ருல்லாசமாகச்சேர்ந்து
மகிழ்ந்துவிந்தைகள் பேசி நடக்கவே - யிசை
நல்வளங்கள் சிறந்தகல்விச்செந்தமிழ்ப்பாண்டி
நாட்டிலன்பர்க்கின்பங்களூட்டி ரெக்ஷிக்கவேண்டி
கொல்லையானிரைசூழ்ந்த முல்லைமருதந்தாண்டி
குறிஞ்சி நன்னிலஞ் சேர விணைந்துமயிலைத்தாண்டி
கோதறுங்குமுதம்மலர்வஞ்சிகள் கூவிளம்பனசங்களிலஞ்சிகள்
மாதுளங்களரம்பை பெவந்திகள் மாவளம் தருநந்தனமுந்திகழ் (திரு)

பரங்கிரியில் நகரமொன்றமைத்தல்.

விருத்தம்.

செப்பரிய பரங்கிரிசென் றமலன் றானுந்
தேவர்குழாஞ் சூழ்ந்திடவீற் றிருந்தன் போடங்
கொப்பரிய நகரமொன் றுண் டாக்க வெண்ணி
உம்பர்கள்கோன் றனையழைத் துவந்து கூற
பொற்பதத்தி னைப்பணிந்தங் கவனுங் கந்தன்
புகலுமொழி தனைச்சிரமேற் றரித்துக் கொண்டே
அப்பொழுதே கம்மியனு லால யங்க
ளருமையுடன் விநவிதமா யமைத்தா னன்றே (க.)

(உ) கீர்த்தனம். இராகம் - கேதார கௌளம்—ஆதிதாளம்.

பல்லவி.

திருமாநகரொன் றமைத்தான் விசுவகன்மன் - திருமா.

அனுபல்லவி.

விரிகொள்நவக்ரகங்கள் கருமாமுகிலினங்கள்
விருப்பமுடனேகொடு முடிப்படியினிற்றங்குந்
திருப்பரங்கிரியினிற்பெருக்கமுடனிலங்கும (திரு)

சூர்ணங்கள்.

(க) தங்கமயமாகவி ளங்குஞ்சிலைகளினாற்
சதுரமாகவேகோட்டை மதிலெடுத்து வளம்
பொங்கும்பதுமையால லங்கிருதம்சேர்நிலைக்கோ
புரங்கட்கிணங்கியவா சலும்விடுத்து அதி
துங்கமின்னவரத்தி னங்களழுத்தியதோரி
சொர்னச்சிகரக்கும்பங் களும்படுத்து வானின்
கங்கையலைதனை நகுந்தவள தோரண
கம்பங்கள்துகிற்கொடி களுந்தொடுத்து இகல்
சிங்கம்யாளிகரி துரங்கங்களும்வகுத்து
சேமமதிலைச்சுற்றி யாவணமும் பகுத்து
மங்களபேரிகை முழங்கும்படி மகுத்து
வங்களுளமணிமா டங்கள்பலதொகுத்து
மனுச்சுருதிபக ரந்தணர்மனைகளும்
மகிப்புரவலர்கள் சொந்தரண்மனைகளும்
தனப்பரதரிசை யுந்தொழிலொடுமிகு
தனித்துறையுளும மைந்தவணியிலகு (திரு)

(௨) வெற்பனையகோட்டையினுட் புறங்களின் மகா
விஷ்ணுபிரமன் றனக் காலயமும் மலர்க்
கற்பகநிழலுறை மெய்ப்புரந்தரன்முதற்
பற்பலதேவர்களுக் காலயமும் ஜய
மற்புயநவவீர ரொப்புமிலக்கவீரர்
வசிக்கும்படிக்குகந்த வாலயமும் நன்று
யற்புதமாகவே நந்திப்ரமதகணங்க
ளனைவருக்கு முகந்த வாலயமும் தன
தட்புலங்களுங்குளிர்ந் தொப்பும்படிமதித்து
உம்பர்சேனாதிபன்மே லன்புமிகக்கதித்து
சுப்பிரமாகிய மணிப்பீடமும்பதித்து
சொர்ணமயவிமான முன்னதயாய் விதித்து
துறந்தவிரதியர் குண்டிகைகரமிசை
துலங்குதவசியர் பண்டியினிதூரிசை
நிறைந்தஉணவுக ளுண்டிடமகிழ்வொடு
நிதந்தொறுமுதவு மண்டபமுதலொடு (திரு)

(௩) தத்தும் பரிகரி தேர் சுற்றும்வீதியும்பண்டு
சாலைசத்திரக்கூடமு மடங்களும் எழில்
சித்திரஞ்சிறந்த சுவர்த்தலமனைத்தும்வி
சித்ரமான பளிங்குப் படங்களும் உயர்
பத்திமிகுந்த தவசித்தர்கள் முதலிசை
பாசுபதர்களுறை விடங்களும் கொடி
வித்துருமங்களொடும் பற்றியகமலங்கள்
விரிந்துபடர்ந்த மலர்த் தடங்களும் பேசுந்
தத்தைகுயிலினமும் பெற்றிமயிலினமும்
தரித்துக்கொம்பரில்வசித் திருக்குமுத்தியானமும்
முத்துறுங்கன்னல் செந்நெலொடொத்த விளைபுனமும்
முதிர்ந்தநறையருவி செறிந்தநந்தவனமும்
முகிழ்த்தரும்பு மலர்ந்திடுஞ்சோலையு
முனைத்தெழுந்து வளர்ந்திடுசோலையும்
சகத்தரும்பலபண்ட முதற்பொருள்
சமஸ்தமுங்குறைவின்றி யளித்தருள் (திரு)

ஷண்முகநாதன் பராசரரிஷி மைந்தர்களுக்கு தத்வோபதேசம் செய்தல்.

விருத்தம்.

விமரிசை யாய்த்தே வாலய மமைத்து விசுவகா மனுபூரை வழங்க
விதிமுத லான விபுதர்கள் பூதர் வீரர்க ளுடனெழுந் தருளி
அமரர்கள் சேனு திபன்றனுக் கமைத்த வாலயம் புகுந்துபொன் மணிச்சிங்
காசனத் திருந்தா னனைவருந் தமக்கென் றமைத்தபே ரிருக்கையி லிருந்தார்
சமயம தறிந்து பராசர முனிவன் றனயர்க ளறுவருங் குமரன்
றுளிணை மலரிற் சகத்திர நமஸ்கார்ச் சனைபுரிந் தேத்தினின் றெமது
திமிரமா சகற்றி யோகசா தனத்தைத் தெருட்டெனப் பகர்ந்ததா பதர்மேற்
சிந்தையோ டன்பு சிறந்துப தேசஞ் செய்தனன் பரமதே சிகனே (௪)

(௩) கீர்த்தனம் இராகம் - ஆனந்தபைரவி—திரிபுடைதாளம்.

பல்லவி.

தத்வஞானோபதேசஞ்செய்தார் சண்முகநாதர் (தத்வ)

அனுபல்லவி.

முத்தராம்பராசர முனிமைந்தருக்குப்பர (தத்வ)

சரணங்கள்.

(க) உட்பகையாறுமக லப்புறம்பாயகற்றி
உடல்பொருளாவிமூன்றும் தடையறவேகைப்பற்றி
கட்புலன்களாலுட லேப்பரிவொடிநந்தி
களித்துமும்மலமாயை யொழித்துதன்மயசித்தி (தத்வ)

(உ) பாதமலர்க்கரத்தைச் சோதிமுடிமேல் வைத்து
பஞ்ச க்கரக்கயிற்றால் நெஞ்சிலுறவிசைத்து
போதவானந்தவாரி நீதிற்படியத்தாக்கி
போக்குவரவில்லாத ஞானவடிவாக்கி (தத்வ)

(௩) உரித்தாகியசின்முத்தி ரைப்ரகரணம்பஞ்ச
வுருப்புகளால்விளக்கி யருட்சிந்தனை நெஞ்சக்
திருத்திச்சுழிமுனையில் நிறுத்தியுறத்தாள் பூட்டி
இன்பமயமானபே ரின்பவமுதையூட்டி (தத்வ)

உபதேசம்பெற்ற ரிஷிகுமாரர்கள் குமரக்கடவுளைத் துதித்தல்.

விருத்தம்.

இன்புறுபெய்ஞ் ஞானவுப தேசம் பெற்ற
விருடிஞர்ந்த ரறுவர்களும் பரமானந்த
அன்புருவா யனலின்மெழு கதுபோல் மோன
வறிவெரிடுமுட் கனிந்துருகி யாடிப் பாடி
உம்பர்கள்போற் றிடுங்குகன்சன் னிதியை முக்கா
லுவந்துவலம் புரிந்துபணிந் தெழுந்து நின்று
சம்ப்ரமமா மலர்கொடுபொன் னடியின் மீதிற்
சாத்தினர் மிகத்துதிசெய் தேத்தி னரே. (௬)

(ச) கீர்த்தனம் இராகம் - செஞ்சுருட்டி—ரூபகதாளம்.

பல்லவி.

[illegible]
[illegible] ஓம் ஶர

அனுபல்லவி.

[illegible]
[illegible] ஓம் ஶர

சரணங்கள்.

[illegible] ண
[illegible] ஓம் ஶர க.

[illegible] ர
[illegible] ஓம் ஶர உ.

[illegible] ரா
[illegible] ஓம் ஶர ங.

[illegible] வ
[illegible] ஓம் ஶர ச.

இந்திரன் தன்மகள் தெய்வயானையை குமரக்கடவுளுக்கு மணமியற்ற விரும்பி இந்திராணிக்குத் தூதரையனுப்ப அவர்கள் நடந்தசரிதையை இந்திராணிக்குக் கூறல்.

விருத்தம்.

அருட்பொலி பராசரர் தனிக்குமரர் கந்தனடி
யஞ்சலி புரிந்தகன்று
றைந்தரு நிழற்குரிய விந்திரன் முகுந்தனொடு
முந்தணனை வந்தணுகியே
திருக்கிளர் முகத்துடனெனக்கருமை யெனவந்த
தெய்வகுஞ் சரியம்மையைச்
செஞ்சரவ ணக்கடவு ளர்க்குநா னுரிமையொடு
திருமண மியற்றவுங்கள்
கருத்தெனவெ னப்புகல வங்கவரு மின்புறு
கடற்குளாழ்ந் தவர்நமக்குக்
கனிமையொடு செய்தவுத விக்குமிது வேயினிய
கைமா றெனக்குலிசனும்
விருப்பமொடு தூதனை யனுப்பவவன் மேருவரை
மீதுசசி யடிவணங்கி
வித்தகரு கன்றனிவி சித்ரவிளை யாடலை,
விரித்துரைக ளாடினனே. (சு)

(ரு) கீர்த்தனம். இராகம் - சங்கராபரணம்—அடதாளம்.

பல்லவி.

இந்த்ராணியேகேளம்மா - விவரமெல்லா - மிந்திரா.

அனுபல்லவி.

இந்தமலையினில்வைத் தந்நாளிலுன்றனை
இந்த்ரன்பிறிந்தபின் னடந்தசரிதைதனை (இந்த்)

சரணங்கள்.

(க) வனச்சரவணத்துட் சண்முகர்வந்தவதரித்து
மலர்க்கைவேலுடன் புல்டூடைக்கலமுந்தரித்து
இனப்பருங்கணத்தொடு முனைத்துமாயாபுரிப்பட்
டினத்தைச்சென் முர்ப்பரித்து - சுற்றிச்

கனத்தபெருங்கோட்டைக ளனைத்துந்தூளாயிடித்தார்
காரவுணப்படைகள் சோரவுயிர் குடித்தார்
வினைக்ரவுஞ்சகிரியைத் தினைத்துகளாய்ப் பொடித்தார்
வீறியுரம் பிளந்து தாரகனை மடித்தார் (இந்த்)

(உ) மருத்தண்டலைசிறந்த திருச்செந்திற்பதிசேர்ந்து
வார்கடல்கடந்து மயேந்திரபுரியைச்சார்ந்து
திருக்குறுமசுரரையொழித்துச் சூரனுடனே
செருக்களமதி னேர்ந்து அவன்
மருட்செய்மாயைகளெல்லாம் துலைத்துத்துகளாக்கினார்
வண்டனுடலைவேலாற் பிண்டுவிழத் தாக்கினார்
உருத்தெழுந்தவனுரை உவர்க்கடலிற் போக்கினார்
உம்பர்கள்தமக்குற்ற கம்பலையை நீக்கினார் (இந்த்)

(ந) வெந்துயரிலுற்ற சயந்தன்சிறைகளைந்து
விண்டயன்முதற்று திவிண்டிடவேநடந்து
செந்திலம்பதியிலிறங்கி யன்னகர்விட்டுத்
திருப்பரங்கிரியில் வந்து - அதி
சுந்தரமாளிகைமீதிற் கந்தசாமியு மேவினார்
சுரர்கள்நின்றடியிணை பரவிமலர் தூவினார்
செந்திருமாலயனுட னிந்திரனுங் குலாவினார்
தேவிதனையழைத்துவாவென் றெனையேவினார் (இந்த்)

இந்திராணி தெய்வயானையோடு பரங்கிரிசேர்ந்து ஜயந்தன் முதலியோரைக்கண்டு மகிழ்தல்.

விருத்தம்.

இந்தவிதந் தூதுவன்சோ பனங்கள் கூற
இன்பமத டைந்துசசி தெய்வ யானைப்
பைந்தொடியோ டெழுந்தைரா வதமேற் கொண்டு
பரங்கிரிவந் தருஞ்சிறையை நீங்கி வந்த
சுந்தரஞ்சேர் தெய்வமா தரையும் வாழ்த்திச்
சுதனெனுஞ்சயந்தனைக்கண் டாவ லோடு
முந்தவுட னினைத்தழுவி யணைத்து மோச்சி,
முகந்திட்டா ளாசிசொல்லிப் புகழ்ந்திட் டாளே. (எ)

தன்மகளை விவாகம் செய்துகொள்ளும்படி இந்திரன் குமரக்கடவுளை வேண்டுதல்.

சந்த விருத்தம்.

அன்பொடுஜ யந்தனையு வந்திடலு மிந்திரனை
 நிந்துள முவந்துசசி யெதிரேகி
அங்கமுழு துந்தழுவி யுந்தகுவ சந்ததிய
 டங்கலுமி ளங்குமர னயிலாலே
கும்பொடும டிந்ததுவு மும்பர்கெடெ ளிந்துகளி
 கொண்டவிவ ரங்களையு முரையாடிக்
குஞ்சரியெ னும்நமது பெண்கொடியை யங்கவர்கை
 கொண்டுமண மும்புரித லழகான
சம்ப்ரமமெ னத்தனிமொ ழிந்துடனெ ழுந்துபிர
 சந்தொனிமி குந்துளப னயனோடுஞ்
சண்முகரு கன்கொலுமு கந்தனைய டைந்துபல
 சந்தமறை யின்றுதிக ளிசைபாடிச்
செம்பொன்மணி யின்ப்ரபைது லங்கியெழில் பொங்கியசி
 லம்பொலிக ருங்கழலி னினிதோடு
சென்றெதிர்வ ணங்கியெதிர் நின்றுவகை கொண்டருள்சி
 றந்திடந யந்துரைகள் மொழிவானே. (அ)

(கூ) கீர்த்தனம். இராகம் - பைரவி—அடதாளம்.

பல்லவி.

அருமைக்குமரிதன்னைத் திருமணஞ்செய்தெனையுத்
தாரணஞ் செய்யுமையனே.

அனுபல்லவி.

தருமப்பயிர்தழைக்க மருவும்சரவணத்துட
சந்த்ரோதயமென வந்தவதரித்த
சண்முகனே யென்றன்கண்மணியாகிய (அருமை)

சரணங்கள்.

(க) கெட்டசுரராலே நான் பட்டபாடுகள் தீர்ந்தேன்
நின்னருட்டுணையினாற் றுன்னும்பதவி சேர்ந்தேன்
அஷ்டபோகங்களும்பெற் றிட்டதெங்களி கூர்ந்தேன்
அனப்பேடைநடையளை யுனக்கென்றுண்மையாய் நேர்ந்தேன்
 ஆண்டவனேயன்பு பூண்டிந்தமலையில்
 ஆக்கமுடன்சுப சீக்கிரமாகவே. (அருமை)

(உ) நாதனின்னுளமறியாதுண்டோ புவிமீது
நற்பவளவாயினுட் கொப்பாருங்கிடையாது
கற்றவியாமிவளென் றுதரவுடன்பாது
காக்குந்தெய்வமுநீயே தாய்க்கொளித்தகுலேது
கருத்திலிசைந்ததே பொருத்தமெனவே நிஷ்
களங்கமாகவே மங்களசுபதினத்தில் (அருமை)

(ங) சிலைக்கூர்நுதலினை யென் னிலக்காய்மணை மீதேற்றித்
திருமங்கலமீபுனைந்து பெருமைதந்தெனைத் தேற்றி
மலைப்புறுமலேயென்றன் தலைப்பாரந்தனை மாற்றி
மருகனென்றெனக்கொரு மகிழ்ச்சிதர்து காப்பாற்றி
மாதவமுனிவர் வேதமுறையொலி
வழங்கிடவியங்கண் முழங்கிடவே யெங்கள் (அருமை)

குமரன் இந்திரன் வேண்டுகோளுக்கிசைய இந்திரன் உடனே தூதரை யனுப்பிப்புவியரசர் முதலியோருக்குத் திருக்கல்யாண நிகழ்ச்சி தெரிவிக்க அவர்கள் வந்து நிறைந்து பரங்கிரியை யலங்கரித்தல்.

விருத்தம்.

மருத்துவன்சொன் மொழியதனைச் செவியிற் கொண்டே
வள்ளலெனும் சண்முகவேள் கருணை கூர்ந்து
கருத்திலுவந் தப்படியே செய்வோ மென்னக்
கடைத்தலைசென் றவன்றூதர் முகத்தை நோக்கிப்
பொருத்தமிகு தெய்வநா யகிகல் யாணப்
புதுமைதனைப் புவியரசர் முதலோர்க் கெல்லாம்
விரித்துரைசெய் தழைத்துவரு வீரென் றோலை
விடுத்திட்டா னவரதுகொண் டடுத்திட் டாரே. (க)

முப்பத்திரண்டடி ஆசிரியவிருத்தம்.

திங்களணி பரமசிவ னுமையி னொடுகயிலைச்
செழுஞ்சோலை யருகின் மேவிச்
சிந்தைகளி கொண்டதி லிருக்கமுசு வொன்றுபல
திப்பியம தானவில்வச்
செந்தழைகள் கொய்திருவர் முடிமிசை சொரிந்திடத்
தேவியு முவந்து நோக்கச்
சிவபிரான் கைகொண் டமர்த்தியக் கீசகந்
திரிகரண சத்தி யாகச்

செய்திடும் பூசைக் குகந்துலக முழுவதும்
செங்கோல் செலுத்தியாளத்
திருவரமளித்தபடி பொன்னிமன் தனதுகுல
திலகனெனவந் துதித்த
தென்கருவைநகரிலுறை முசுகுந்த சக்ரவர்த்
திப்புனிதன் முதன்மை யான
சிங்களர் கலிங்கர்கன் னடர்களி லாடர்கள்
தெலுங்கர்காம் போஜர்குடகர்
கொங்கணர்கடங்கணர்க ளொட்டியரவந்தியர்
குலிந்தர் கேகயர்கிராடர்
குருகர்காஸ் மீரர்காந் தாரர்சோ னகர்துளுவர்
கொல்லர்சவ் வீரர் சீனர்
குச்சரர்கள் கன்னடர்கள் மச்சர ருணர்கள்கருசர்
கோலமிகு செகர்மராடர்
கோதில்சா லவர்கோசல லாதிபர்பு ளிந்தரதி
கோமளமி குங்கேரளர்
குவலயம் புகழ்திரா விடர்நிடதர் பப்பரர்கள்
குலவுமலை யாளர் மகதர்
குருநிலத் தவர்கள்நே பாளர் பாண் டியர்காசர்
குதிகொள்பல்லவர்விதர்ப்பர்
குறைவிலாத் தனமதிப் படைத்தபாஞ் சாலர்மிகு
குளிர்சிந்துதேசமன்னர்
குணமிகு யுகந்தரர்கள் வங்கர்வங் காளகுயர்
குந்தளர்கள் சூரசேனர்
அங்கர்மா ளவர்போடர் பொங்கமிகு யவனரெனு
மைந்துபத் தாறுதேசத்
ததிரதர்கள் மகரதர்கள் சமரதர்கள் சித்தர் வித்
யாதரர்க ளுரகர்முனிவர்
அன்புறுமி சைப்புலவர் கிம்புருடர் கின்னரர்க
ளணிகொடும் புருநாரதர்
ஆய்ந்தபெரி யோர்கள்யோ கியர்கள்பாதலர்கள் முத
லஷ்டதிக் குப்பாலக
ரனைவர்களி டத்திலும் விரைவினிற் றூதர்சென்
றுறுமுக வோலவீர்க்கும்
அமரர்கோ னுக்கினிய குமரிகுஞ் சரியான
அமலைக்கும்வதுவை நாளைக்

காணகயா லறிவீர்க ளெனவுரைத் திடலு முட
　　லானந்த பரவசர்களா
யக்கணமெழுந்துசெனவர்க்கங்களொடு மாடை
　　யாபரண பூஷிதர்களாய்த்
துங்கமிகு மிரதகஜ துரக மொடு படைகள் புடை
　　சூழ்ந்திடப் பயணமேசி
துந்துபி முழங்கிட வெழுந்துபல வரைகளும்
　　திடவைதட மடுநதிகளும்
சொன்னமணி களையனைய செந்நெல் மிசை பணிலமுத்
　　துலவியசெழும்பணைகளும்
தோன்றிய சிவஸ்தலமெ லாம்பரவி யுரிமையொடு
　　தொன்மதுரைநகரிலணுகிச்
சொக்கேச ரொடுமங்க யற்கண்ணி யம்மையைத்
　　தொழுதுதென் கிரியைநாடிச்
சுரர்பதியை யுங்கண்டு பரவிமகிழ் வுடனின்று
　　சுபமொழி பகர்ந்திடலுமே
துரந்தரனு மங்கவரு மந்தநிமி டந்தனில்வி
　　சுவகரும னையுமழைத்துத்
துலங்கொளிபரங்கிரி யலங்கிர்த முளங்களி
　　சுகங்கொள வியற்றினர்களே (ய)

(எ) தீபனை இராகம் - மத்தியமாவதி—திருபுடை தாளம்

(க) தேவர்க்கதிபன்முதல் யாவர்களுமுவந்து
திருப்பரங்கிரிமிசை யடுத்தாரே - அந்தத்
தேவலோகமும்நாணத் திகழும்பன்னவமணிச்
சிலையினற்றிருமதி லெடுத்தாரே.

(உ) திடத்தபதுமைகளுந்தொடுத்தபொன்மயமான
சிகரமணிமாடங்கள் வகுத்தாரே - மிகு
வடிப்பமாகவேநாலு வாயின்முகப்பினிலு
மகமேருவையும்கன்றாய்த் தொகுத்தாரே.

(ங.) நித்திலச்சுதைதீற்றி யுற்றசுவரெங்கினும்
நிலைக்கண்ணடிகளை யாட்டினர் - செய்ய
வித்துருமமோடயர் முத்துச்சரங்களை
விதானங்களிலொழுங்காய்ப் பூட்டினர்

(ச) சீதச்சந்தனம் பனிநீர்கலந்துமெழுகிச்
சித்திரக்கோலமுந் தீட்டினார் - பாரி
ஜாதம்மந்தாரம்ஸந் தானம்சந்தனங்கற்ப
தருவுமங்குறும்படி கூட்டினார்

(ரு) சட்டமாகவே யாலவட்டங்களுந்துவஜ
ஸ்தம்பமுமொழுங்காக நாட்டினார் - சந்திர
வட்டக்குடையருகி னட்டெடங்கினுந்தெரிய
வரிசைக்கொடிகளையும நீட்டினா

(சு) சிறப்புறுங்குளிர்மதி தனையுஞ்சந்திரகாந்தச்
சிலைஸ்தம்பமதில்வரத் தேக்கினார் - வெளி
மறைக்குமசகிரிப் பந்தலில்விசித்திரமான
வால்சயிட்டுகள் முதற் றாக்கினார்

(எ) மணஞ்செய்வேதிகையதற் கிணங்குமொளிசிறந்த
வச்சிரமு மிழைத்துப் பொருத்தினார் - பல
கணங்களும் பணித்தெழி லிலங்கு மிந்திரநீலக்
கற்றள வரிசையுந் திருத்தினார்.

(அ) தாதுப் பொற்பொடிகளுந் தூவிக்கமழ் மிகுந்த
தனிச்சுகந்தமுங்கரைத் தூற்றினார் - ஜக
ஜோதி மயமாய் நாலு வீதிகளடங்கலுந்
தூண்டாத மணிவிளக் கேற்றினார்.

(கூ) சுளைப்பனசமொடுமுக் கனியுங் கழைகமுகுந்
தொடுத்துப்பந்தலிலலங் கரித்தாரே - மாந்
தளிர்க்கனையமகமற் சுருட்டுப்பைந் துகில்களைச்
சதுர்க்கூட மடங்கலும் விரித்தாரே.

(ய) மணக்கோலந்தரிசிக்க வருமுனிவரமரர்
வசிக்க விடுதிகளும் சமைத்தாரே - பே
ரணிச்சிங்காதனமுநன் மணிப் பொன்னாசனமவ
ரவர்க்குத்தகுதியாக வமைத்தாரே.

(கக) அக்கணமு சுகுந்த சக்ரவர்த்தியோடர
சர்க்கிருக்கைகளு முண் டாக்கினார் - அஷ்ட
திக்கெங்கினும்புகழத் தக்க நகர் முழுதுஞ்
சிறந்த தோரணங்களும் வீக்கினா.

(கஎ) நகைதருங்கனகப்பா லிகையும் வளமிகுந்த
நவதானியங்களையும் பரத்தினர் - வேண்டுஞ்
சகல கருவிகளுந் தொகையில்லாமலே யாக
சாலை மண்டபமதில் நிரத்தினர்.

(கஅ) பூரிமாந்தளிர் தேங்கும் குசையினொடு நூல்சுற்றிப்
பூரணகும்பமும் பதித்தாரே - பல
சீருடன் மணவிருந் தளிக்கக் காமதேனுவைச்
சீக்கிரம் வரும்படி விதித்தாரே

தெய்வ குஞ்சரி மணக்கோலங் கொள்ளல்.

விருத்தம்

விமலமுயர் பரங்கிரியை பலங் கரித்து
விண்ணவர் கோன் மிகமகிழ்ச்சி படைந்தா னப்பா
லமையுமிந்தி ராணி சொல்லைச் சிரமேற் கொண்டே
வரம்பையர்க ளெழுந்தருகில் வணங்கி நின்று
குமரகுரு பரன்றனக்கென் றிசைந்த தெய்வ
குஞ்சரியம் மனையழைத்தங் கரவணைத்துத்
தமனியபீ டமதில்வைத்து மணக்கோ லங்கள்
தரிக்கின்றார் பணிகளலங் கரிக்கின் றாரே. (௰க)

(அ) கீர்த்தனம். இராகம் - சகானா—ரூபகதாளம்.

பல்லவி.

அலங்க்ருதம் செய்தா ரெங்கள்
அன்னை தெய்வகுஞ்சரி யம்மைக் கலங்கிருதம்.

அநுபல்லவி.

நலங்கொளரம்பை மகளிர் கூடி
நளினரஞ்சித மாபுரையாடி
துலங்கிலைவேல்வரைக் கொண்டாடி
சுபமங்கள கீர்த்தனங்கள் பாடி (அல)

சரணம்.

(௧) தெய்வசந்தனுதித்தயிலத் திருமஞ்சன நீராட்டி க்குழல்
சீவி வகிர்ந்த பின்னலிஞெளி சிறந்த பணிகள் பூட்டி - நறுந்
துய்யமலர்த்தொடை யுந்தகை மிஞ்சிய
சூரிய சந்த்ரப்ரபையமைத்து ரத்நச்
சுட்டிப் பொற்பட்டமுங்கட்டி நுதற்கு்ச்சிந்
தூரப் பொட்டிட்டுவிஸ் தாரமதாகவே (அலங்)

(௨) தேசுறுங்குமிழ் நாசிதனில் நித்திலநத் தணியும் பூட்டி யிரு
சேல்விழிக்குமை தீட்டிச்செவியிற் செழுமணிக் குழைமாட்டி - உயர்
காசணியோடு முத்தாரமுஞ்சங்கக்
கழுத்துக்கிணங்கத் தரித்துப்பணைத்துக்
கனங்கொண்டெழுந்த-சுணங்குபடர்ந்த பொற்
கச்சணி பூண்முலைக் குச்சித்திரம்பணித் (தலங்)

(௩) மின்னிடைதனில் விலைக்கடங்காத சொன்னப்பைந் துகி லுடுத்தி - [மணி
மேகலைகொடு துவளுமருங்கை வீசித்துடன்றிடப்படுத்தி -
கன்னனிகர் புயத்துன்னுங் கேயூரமுங் [உயர்
கங்கணக் கைவிரற்கங்குலியமுங்
கழற்றிடுதண்டைச் சுதங்கையின்ஞைசை
கலிக்கப் பிரபை ஜொலிக்க விநோதமாய் (அலங்)

பிறகு கந்தர் திருமணம் செய்யப்பவனி வருகையில் மடவார் கண்டு மயல் கொளல்.

விருத்தம்.

மங்கைதெய்வ யானைமணக் கோலங் கொண்டாள்
மகபதியு மவகையொடெ ழுந்து கந்தன்
செங்கமலத் திருவடியிற் பணிந்து நோக்கித்
திருமணத்துக் கெழுந்தருள வேண்டு மென்னப்
பங்கயன்மா லருகிலுறச் சிகிமேற் கொண்டு
பவனிவருங் குமரனைக்கண் டுளத்தி லாசை
பொங்கிமட வார்களெலா மயிற் குலங்கள்
புயல்கண்டா லெனப்பரிந்து மயல்கொண் டாரே. (௰௨)

(௯) தீபதை. இராகம் - எதுகுலகாம்போதி—ஆதிதாளம்.

(௧) சொன்ன மயின் மீதில் வரும் பன்னிரு புயாசலனைத்
துதித்தனர் - அன்பு - பதித்தனர் தேவ
கன்னியர்களுமகில மன்னவர் மங்கையர்களுங்
கண்டனர் - மோகங் - கொண்டனர்.

(௨) கோங்குதள வங்கமலம் பூங்குவலயம் பூத்தாற் போற்
குவிந்தனர் - சுற்றிக் - கவிந்தனர் கொங்கை
தாங்கொணு திடைதள்ளாடப் பூங்கொடி போலே வணங்கித்
தாழ்ந்தனர் - விரகத் - தாழ்ந்தனர்.

(௩) கருவிழிநோக்கம்வேறின்றி முருகனைமட்டுங் கண்டுள்ளங்
களித்தனர் - கண்ணீர் - துளித்தனர் தவத்
துரிமையோருக் கண்டு பரம் பொருளினைக்கண்டுவந்தவா
றொத்தனர் - மேனி - பூரித்தனர்

(௪) இக்குவில்மதன்விடு மலர்க்கணைகொங்கையிலேறிட்
டிடைந்தனர் மெலிந் - துடைந்தனர் தங்கள்
கைக்கணிந்ததொடியும் பொற்கங்கணந்தோள்வளைகளுங்
கழன்றனர் - மனஞ் - சுழன்றனர்.

(௫) பூந்துகில்நெகிழ்ந்திடப்பின் றய்ந்ததையெடுத்துடுத்திப்
புலம்புவார் - வெட்கமுற் - றுலம்புவார் செழு
மாந்தளிர்மேனிமுழுதும் பூந்தளிர்க்கணை துளைக்க
மயங்குவார் - மதி - தியங்குவார்.

(௬) பரவுவெளியெங்குங்கந்த னுருவெளித்தோற்றம் போல்கண்ணுற்
பார்த்தனர் - தழுவிச் - சேர்த்தனர் அணி
மருவுமிருகொங்கையன்றி யுருவமங்கில்லாம லுள்ளம்
வாடினர் - அருகிற் - கூடினர்.

(௭) ஒன்றிடுமெங்கொருத்திமே லுற்ற பணிகளிலைய
னுருக்கண்டார் - அதி - மருட்கொண்டார் அவள்
பின்றொடர்ந்தென்னையனை நீ தந்துபோடியென்றுமடி
பிடிக்கின்றார் - வசை - படிக்கின்றார்.

(௮) எங்கினுமிவனைப்போலே வன்கணனை கடவு
ளிலையென்பார் - நெஞ்சம் - சிலையென்பார் பெண்கள்
தங்களிமடநாணமச் - சங்கவர்ந்த கள்வனிவன்
றனென்பார் - இனிவி - டே னென்பார்.

(௯) ஈரமெட்டுணையில்லாத சூர்முதலோர்களைவென்ற
ஈசனே - குமா - ரேசனே அந்தச்
சூரனைவென்றநீ யிந்த மாரனைவெல்லமுடியா
தோவென்பார் - என்ன - சூதோவென்பார்

குமரக்கடவுள் கல்யாணமண்டப வாயிலிற் சேரலும் இந்திராணி அஷ்டமங்கலங்களோடு மெதிர்சென்று அவரது பாதாரவிந்தங்களில் பாலைவிட்டு அர்ச்சனைசெய்து ஆலாத்திசுற்றி பொன்னும் பழமும் தேங்காயும் மடியிற்கட்டி மணமண்டபத்தில் அழைத்துச்செல்ல ஐயன் சிங்காதனத்தில் வீற்றிருத்தல்.

விருத்தம்.

மங்கைய ரிவ்வா றியம்பிடக் குமரன்
மங்கள வியங்களு முழங்க
மாநகர் பவனி வந்துகல் யாண
மண்டப மணிமுகத் திருப்பப்
பங்கயன் றிருமா லமரர்கள் முனிவர்
பண்புறுந் தேசமன் னவரும்
பரிந்துளங் களிப்ப நிறைகுடம் விளக்குப்
பளிங்கிணை கயல்கொடி முரச
மங்குசங் கவரி யட்டமங் கலங்கொண்
டரம்பைய ரொடுஞ்சசி யணுகி
யடியிணை பால்விட் டருச்சனை புரிந்தா
லாத்தியுஞ் சுழற்றிவான் பொருளுஞ்
செங்கனி தேங்கு மடிமிசை நிறைத்துச்
செங்கைதொட் டழைத்திடச் சென்று
செழுமணிச் சிங்கா தனத்தி னிலையன்
றிருத்தமாய் வீற்றிருந் தனனே (௯௩)

கைலாசத்திலிருந்து பரமசிவன் தென்மதுரைவந்து மீனாக்ஷி சகிதராய்ப் பரங்கிரி சேர்தல்.

பின்னும் விருத்தம்.

கனகசிங்கா தனத்திலைய னிருந்தான் வெள்ளிக்
கயிலையினின் றகிலகயி லாயனான
தனிமதுரை நகரில்வந் தங் குமைமீ னாட்சி
சகிதராய் ப்ரமதசிவ கணங்கள் சூழப்
புனிதமைந்தன் றிருமணக்கோ லமது காணப்
புரிசைபொழில் சிறந்தபரங் கிரியை நோக்கி
இனிதமரர்க் காகவிட முண்ட கண்டத்
திருளினர் விடையிலெழுந் தருளி னாரே. (௯௪)

(ய) கீர்த்தனம். இராகம் - காபி—ஆதிதாளம்

பல்லவி.

கைலாசபதி யெழுந்தருளினார் கனகவாகனமீதிற் (கை)

அனுபல்லவி.

மயில்வாகனனுனசுந்தரர்கு மாரன்றிருமணச்சிங் காரப்பெருமைகாண (கை)

சரணங்கள்.

(க) மாதவமுனிவர்வேத முறைகண்மொழிய மந்தாரம்பாரி
ஜாதமலரம ராதிபர்களும் பொழிய உத்தளமான
பூதிகண்டிகைகல னுதியணிந்துபெரும்
பூதகணங்களிரு பாதமலரைத்துதித்
தாதிசங்கரபரஞ் சோதி யரகரவென்
முடியிருமருங்குங் கூடிநெருங்கிவரக் (கை)

(உ) மூவுலகுந்தொழத் தேவதுந்துபிமுழங்க - யாழுங்கைக்கொண்டு
நாவினினிதொடு நாரதரிசைவழங்க - உயிர்கொள்நடை
யோவியங்களெனவே தாவியரம்பையர்க
ளாவலுடனெதிரு லாவிநடம்புரிய
மூவர்களுக்குமுதலான பொருளிதென்று
முத்தர்கள்பரவச முற்றுளமுங்களிக்கக் (கை)

(௩) மாதுதிரையென மாதர்கவரிபோட - விண்ணிலுலவி
மேதகுவிடப கேதனமசைந்தாட - துளபமணி
நாதனுமலருறை வேதனும்பணிபுரிந்
தோதியெதிர்கொண்டழைத் தேதுதியும்பகரச்
சீதமஞ்சள் நீர்கலன் மீதிலெடுத்துகந்து
திருவுங்கலைமகளும் பரவியெழுந்துசுற்றக் (கை)

விமானத்திலிருந்து பரமசிவன் உமைசகிதராகக் கல்யாணமண்டபம் சேரலும் தம்மைப் பணிந்த குமரக்கடவுளைத் தழுவிச் சிங்காதனத்திலமர்ந்தபின் அசுரர்கள் இறந்ததைத் தேவர்கள் பரமசிவனுக்குக்கூற அவர் அதுகேட்டு மகிழ்ந்து ஷண்முகநாதனைப் புகழ்ந்தார். பிறகு தெய்வநாயகிக்கு அலங்கிருதம் செய்து லெக்ஷுமியும் ஸரஸ்வதியும் அவளை மணைமீதில் குமரக்கடவுளது வலப்புறத்தில் வீற்றிருக்கச்செய்ய அவ்விருவருக்கும் நடந்த விவாகம்.

சந்த விருத்தம்.

அம்பொன்விமானத் திருந்தரனுமையோ டுங்கலியாணத் தலந்தனிலுற
வறிந்துடனேகிக் குகன்சிவனருகில் விரைவர்க
அம்புயபாதத் துவந்தினிதுறவணங்கிடவே கைத் தலங்கொடுசுதனை
யன்புடனுகத் துடன்றழுவியரி யணைமீதே
இன்புடனேயுற் றிடும்பொழுதிலய னிந்திரனேரிற் பணிந்தசுரர்க
ளிறந்தவைகூறிப் புகழ்ந்திடலுமுள மகிழ்வாகி
இங்கிதமாகப் புகன் றறுமுகனை மங்களபீடத் தமர்ந்திடவரு
ளிசைந்திடமாதைக் கொணர்ந்தர மகளி ரிசைபாடி
எம்பெருமானுக் கிணங்கவலதுமருங்கினிலேவைத் துயர்ந்தமலர்க
ணறுங்களபாதிச் சுகந்தமொடுபல மணி மாலை
நன்குற மார்பிற் புனைந்தணிவளைக ளங்குலிபாதச் சிலம்பொலியுறவி
ரஞ்சிதமாகத் தருந்தவரிசைக ளுரையாடிச்
செம்பொனினுள்கற் புறுங்கலைமகளு டன்பரிவாரச் சுமங்கலியர்கள்
சிறந்திடமேலச் சுதன்பிரமன்முத லனைவோருஞ்
சென்றுகுலாவிப் புகன்றிடலுமெழில் குஞ்சரிமாதைக் குகன்களிவொடு
திகழ்ந்திடநாணைப் புனைந்தன னருமை யெனமாதோ. (௰௯)

(௰௧) கீர்த்தனம். இராகம் - மோகனம்—ஆதிதாளம்.

பல்லவி.

திருக்கல்யாணஞ் செய்து கொண்டாரே வந்து
தெரிசித்தெல்லோருங் காக்ஷி கண்டாரே

அனுபல்லவி.

உருப்பொலிந்திடுஞ்செம்பொன் மலர்த்தாரணி கடம்பன்
மங்கைசுணங்கவிழ்கொங்கைமணங்கமழ்
மஞ்சரியம்புனை குஞ்சரியம்மனைத் (திரு)

சரணங்கள்.

(௧) பத்தியுடன் பொற்பீடத் துற்றிருந்தயன்றரப்
பவித்திரமது புனைந்து அனுக்ஞை
வைத்தைங்கரன்றனைத்துதித்து விரத ஸமா
வர்த்தனங்களும் புரிந்து பின்னு
முத்தமயாத்திரைசென் றிட விந்திரன் விரும்பி
உபசரித்திடக் கன்னி யுடன் பந்தலிற்றிரும்பி
சித்திரப் பொன்னூசலா டித்தோரணமாலைகள் மாற்றி
சிற்பரையுடன் சிவ னைப்பதம் பணிந்தேத்தி

திங்கள்முகந்திகழுங்குண குஞ்சரி செங்கை பிணைந்திட எங்கள்குகன்கடி
மங்கல வேதியடைந்தன னந்தணர் மந்திரவோசைமுழங்கவிருந்தலை
வாரிநித்தில மாமணியக்ஷதை வாழையுற்ற பலா சுவிரித்ததை
ஏர்பெறச்சம மாகநிறைத்ததி லேமமுற்றிடு பாலிகைவைத்ததி
லினித்திடுங்குயி லார்நவதானிய மெடுத்துடன்பயசாகியபானிய
நனைத்துமங்கையி னல்விதை தூவவுமனத்துளன்புகுலாவியுலாவவும்
நயுமிலகியவரி சினமணிகங்கண மியலுலவியகர மதனிலிலங்கவே
நகைசுற்றியமுக சரின ப்ரபைகொடு மகுடத்தினிலொளி மருவ
க்ருபையொடு (திரு)

(உ) அத்ரி கௌதமன்ப ரத்துவாசன் ஜெம
தக்கினி யகஸ்தியனும் விசுவா
மித்திரன்றவமுனிவ சிஷ்டன் பதஞ்சலி
வியாக்கிரன்புலஸ் தியனும பரி
சுத்தனுகியபரா சரனுங்கிரசன் சுகன்
துருவாசன் பிரகுமிரு கண்ட முனி மகன்
தத்துவ முனிவர் சூழத்தனிமுசுகுந்த
சக்ரவர்த்திமுதற் புவிக்கரசர் மிகுந்த
சந்தடி கூடி நிறைந்திடவும் முசிதம்பிலவாக வரைந்திடவுஞ்சசி
பைந்தொடியாளுட னிந்திரனுங்குளிர் பந்தலிலாறு முகன்றனையுந்தளிர்
பாத பத்மமதிற்பனிநீரொடு பால்விடுத்துரிமைப் பலவாறொடு
மாதரத்துடனேமறை கூறிய னேகவர்ச்சனை மாமலர்தூவிய்
மணிக்குகன்கர மீதிலகும்படி யனத்திலுங்கதி மாது கரந்தனை
இணைத்துமந்தம தாக சறும்புன லெடுத்துமந்திர தாரைசொரிந்தபின்
எழில்கனகவணியி லுயர் திருமங்கல மினிமைபெறுகமுகை நிகர்தருகந்
மிசையப்பரிவொடு புனைவித்ததிசய மெனவுற்றடியவர் பாவித்துதி [தர
செயத் (திரு)

(௩) துய்யவந்தண னெடுதெய்வ மந்த்ரி முதலோர்
சுருதிகளார்ப் பரித்துச் சொல்லச்
செய்யரி வளர்த்தந்த மையவேதியைசுற்றித்
தெர்ப்பை ஸமித்தும் விரித்து மங்கை

கையலர்கொண்டனலில் நெய்பொரியுஞ் சொரிந்து
கனிந்தமதுவர்க்கமு மருந்தி வலம்புரிந்து
தையல் பதந்தொட்டய்யன் மைய நகை பாராட்டித்
தாங்கியம்மி மீதில் வைத் தோங்கருந்ததி காட்டித்
தம்புருயாழினரம்பின் வரம்பிசை தும்புரு நாரதரின்ப முடன்றனி
தம்பெருகீதமியம்பிடவானுறை யும்பர்கண் மாதர்களும்பத பாகம
தாகஜம் கிடதந்தகஜம்தரி தாதிணங்கிடதந்தகிணகிதகி
ஜேகிணங்கிண தாங்கிடு தோம்திமி தீந்ததிங்கிண தோங்கிடுத்தோமென
தளிர்க்கரங்களினலபிநய மா தார்த்தனஞ்செயலாலதிசுக முற
வெளிப்புறம்பிசையடர்ந்து வழங்கிட வியத்தகுணித் மிருதங்க முழங்கிட
விஜயை ஜயையினிசை வனிதை யோடிந்திரை
விபுதவ முதம்ருதுவசன மொடிங்கித
வினயத்தொடு சுபமுறைகண் மொழிந்திட
விரிகற்பக முகைமலர்கள் பொழிந்திட.

வ்ருத்தம்

திருமணம் புரிந்த பெருமையைத்தெரிந்த சித்தர்கின் வித்தியா தரருந்
திகழ்மறை யவரு முனிவரு நன்கா சீர்வதித் தச்சதை யுடனே
மருமலர் சொரியச் செங்கையா லாத்தி மங்கையர் சுழற்றியிங் கிதமா
மங்கலம் படித்துத் துதித்திடக் குமரன் மங்களா சனத்திருந் தெழுந்து
பருவத ராசன் மகளொடு சிவனைப் பணிந்திடப் புரிவொடுந் தழுவிப்
பரமனார் கயிலை சென்றன ரப்பாற் பணிமுக குந்தனு முதலோர்க்
கருள்விருந் தளித்துப் பரிசுகள் கொடுத்தங் கருமையோ டவர்களை யனுப்பி
அம்மைதெய் வானை யுடனுளங் களிப்புற் றமர்ந்தனன் குமரஷண் முகனே
(௰௬)

ஷண்முகநாதன் பூரங்கிரியில் தெய்வானை சமேதராகச் சில காலமிருந்தபின்பு தேவலோகஞ்சென்று தெய்வகம்மியனை யழைத்து அந்நகரை முன்போல் அமைக்கச்செய்ய அவனும் அப்படியே செய்தல்.

பின்னும் விருத்தம்.

மைவிழியா ளம்மைதெய்வ யானை யோடு
வளஞ்சிறந்த தென்பரங்குன் றத்தி லையன்
சையோக மாகெநா ளிருந்த பின்பு
சதமகன்றன் றுதிக்கிரங்கிக் கருணை கூர்ந்து
செய்யவிரை யொடுந்தெய்வ லோகஞ் சென்று
தேவதச்சன் றனையழைத்திந் நகரை முன்போற்
றுய்யவளஞ் செய்யெனவங் கவன் வணங்கித்
துதித்தெழுந்தந் நகரைமுன்போல் விதித்தா னன்றே. (௰௭)

குமரக்கடவுள் தேவேந்திரனுக்கு மகுடாபிஷேகம் செய்வித்துத் தான் தெய்வானை சமேதராய்க் கந்தவரைசேர்ந்து அங்கு உறைதல்.

நிலைமண்டில ஆசிரியப்பா

நட்புடன் குமர நாதனும் மகிழ்ந்து
மெய்ப்புரந்தரன் மேன் மிகவருள் கூர்ந்து
குலவுமுப்பத்துமுக் கோடி தேவரு
மிலகுகின் னரர்கிம் புருடர் யாவரு
மாதவர் களும்பன் மறைமுறை வழங்க
வேதமி லிசையோ டியங்களு முழங்க
பொன்னரி யணையிற் - புனிதனை யிருத்தி
பன்மணி திகழ்பொற் பணிகளுந் திருத்தி
மெய்முறை மந்தர விதிகளுஞ் சரித்து
தெய்வமந் திரியாற் றிருமுடி தரித்து
அணித்தெய்வ யானை யம்மையோ டுவந்து
மணிச்சயந் தன்மேல் மகிழ்வுட னெழுந்து
இலக்கத் தொன்மரோ டின்புடன் கூடிக்
களிப்புடன் குமரன் கைலையை நாடி
தொழுதுமை பரனைத் துதிபுரிந் துடனே
எழிற்கந்த வரைமீ தினிதமர்ந் தனனே (௰௮)

வள்ளி கல்யாணம்

தொண்டைநாட்டுவளம்.

வெண்பா.

ஆய்ந்து பலகலைகள் யாவையுங்கற் றேயறிவு
வாய்ந்தநைமி சாரண்ய வாசிகளே - யேந்துமலைக்
கோட்டுவளர் தங்கியெழில் கொண்டுபொழில் கொண்டதொண்டை
நாட்டுவளஞ் சொல்வேன் நயந்து. (க)

(௰௨) த்விபதை. இராகம் - எதுகுலகாம்போதி—அடதாளம்.

(க) அவனிமங்கைகொங்கைமுத் தாரம் போலணி யணி
யாக மலையில்வரும் அருவிகளும் நிறை
குவைமிளகுதக்கோலங் கோட்ட மிலவங்கஞ் செங்
குங்கும பூதற்பல கருவிகளும்.

(உ) ஓங்குங்கணுவின் முத்தஞ்செறிக்கத் தறித்தாலையி
லூட்டுங்கரும்புடைந்த சாறுகளும் - வள
மாங்கதலி முக்கனி தேன்களுடனே கொண்ட
லடித்துச்சுழித்து வரும் ஆறுகளும்.

(ங) பாய்ந்துபயிர்கள் தழைத் தார்ந்துநெருங்கிக்கதிர்
பரியும் அறுபருவக் காலங்களு - மொளி
வாய்ந்தவைவனம்விளைந் தோங்கி வரம்பிகந்து
மகிழ நிறைந்த ஆல வாலங்களும்.

(ச) கலைமகள் வசிக்குஞ் வெண்கமலங் கண்மிசை சங்கம்
கதிர்முத்தங் கொழிக்குந்த டாகங்களும் - சுவை
யிலகுமதுவினையுண்டருஞ் சிறைவண்டுகளின்
னிசைபயிலும்பொழில னேகங்களும்.

(ரு) ஆடவருடன்மாத ரூடல் செய்தெருவணி
ஆர்ந்தவீதிகளின்விஸ் தாரங்களும் - இசை
பாடிநுண்ணிடைமாதர் கூடிக்கொந்தளிப்புடன்
பந்துகள் பயிலுஞ்சிங் காரங்களும்.

(௬) கடவிளம்பனசம்பா டலங்கொன்றை புன்னையொடு
குளிர்ந்த சண்பகமலர்ச் சாலைகளும் - தமிழ்ப்
பாவலர் முதற்புகழ் மேவுந் துறவோர்க்கன்னம்
பரிவொடளிக்கும் தர்ம சாலைகளும்

(எ) மருவிச்சிவனொடரிமாலுக்கினிய பல
மாதலங்களுமன்னித்தனக ரீடே - இன்றி
உருகும் தொண்டர்களருள்பருகிப்பெருகிவாழ்ந்
தோங்கும் தண்புனைத் தொண்டை நன் னாடே

மஹாவிஷ்ணு மவுனமுனியென்று மப்பருடன் தொண்டை நாட்டில் தவம் செய்கையில் அவர்முன் இலக்ஷ்மி மானுருவத் தோடும் செல்லல.

விருத்தம்

மற்றுமுயர் வளங்களின்னுஞ் சிறந்த தான
வள்ளிமலை யருகினில்மேற் பாடி யென்னுஞ்
சிற்றூரில் நம்பியென்றோர் வேடராசன்
செல்வர்களைப் பெற்றொருபெண் மகவை யுன்னி
யுற்றமலைத் தெய்வமதை வேண்டும் போதங்
குழையுதவு குகனருளா லொருமான் றோன்றி
நற்றவஞ்செய் முனிவடிவ மான்முன் னிற்க
நாடினேன் முனியுமுங்கி வாடி னானே (௰அ)

(௰௩) கீர்த்தனம் இராகம் - சங்கராபரணம்—ஆதிதாளம்

பல்லவி

மானைக்கண்டு மாலாகினான் - மாலெனும் பெருமான்றிரு
மானைக்கண்டு மாலாகினான்

அனுபல்லவி.

மேனித்திலம் பொன்னரி நீலந்துவர்கலந்த
மேனியொடுஞ்சிறந்ததானவடி வுகந்த (மானை)

சரணங்கள்.

(க) தடங்கொள்கொங்கையர்கடி தடங்களனையகுளம்
படியையுமுடியின் மிசை தாக்கியே - யெதிர்
தாவிக்குதித்து முன்கால் கொடுமலர்க்கொடிகளைச்
சரங்களெனத்தொடுத்து வீக்கியெ - மேலில்
தரித்துத்தோண்மிசையலங் கரித்துக்கான மூங்குஞ்சஞ்
சரித்துப்பின்னெதிர்வந்து சிரித்தழகுடனிற்கும் (மானை)

(உ) விதிர்த்துமணி விழியால் வெருட்டிக் காமியர் போலே
வெறித்து நடித்தெழுந்தி லாவியே - உள்ளே
மெலிந்துடல முழுதும் வியர்த்துப்புவியின் மிசை
விழுந்து புரண்டெழுந்து கூவியே - யின்ன
மேற்கனதுரிதங்கொண் டேக்க மிகுநததிக
தீர்க்கமுடன்பரிந்து நோக்கிக்குலவிநிற்கு (மானை

(ங) போதத்தவநெறியும் பேதித்திட மதனன்
பொழியைங்கணையாலுடல் கருகிடவே - கையிற்
பொருந்துதண்டுடன்கமண் டலமுமவிடுத்துச்சடை
புவியிற் புரளமன முருகிடவே - வை
போகப் பேரின்பமுள்ள யோகத்தை மறந்து - சை
யோகச்சுரத வெள்ள மோகத்திலமிழ்ந்து - தன் (மானை)

அந்தமானைக்கண்டு அம்மவுனமுனி இச்சித்தமாத்திரம் அது
கருக்கொண்டு அதனிடத்தில் வள்ளிநாயகி உதித்தல.

விருத்தம்

மனக்கலவி நிசக்கலவி யாகி யந்த
மான்வயிற்றில் முனியருளாற் கருவாக தோன்றி
நினைக்கரிய கணமதனிற் பூர்ன மாக
நிறைந்துவயி றுளைவதனை நீக்கி யன்னாள்
வனக்குமரன் றனக்களித்த வரத்தி னாலம்
மான்மகளிம் மான்முகமாய் வடிவங் கொண்டு
கனத்தொடிச்சங் தரக்கொடியென் றியைந்த சரீமம்
சுதித்திட்டான் மகவெனவங் குதித்திட் டாளே. (ஙக)

(௰௪) கீர்த்தனம். இராகம் - முகாரி—ஆதிதாளம்.

பல்லவி.

அவதரித்தா ளெங்கள் - அம்மை சுந்தர வல்லிவந்
தவதரித்தாள்

அனுபல்லவி.

தவபரமானந்தத் தத்துவத்திலுலிறந்த
மவுன முனிவன் கொண்டமாமயலி
ஞல்வடி வுடன்படி மிசைவந் (தவ)

சரணங்கள்.

(௧) அந்தரங்கமொடயன் றன்ருழிற்றிறமையி ஞலே
விளங்க நன்ருய்
அன்புடனே யமைத்த செம்பொன் மணிப்பதுமை போலே
வேட யாதர்முன்
கந்தமூல ங்கள்களைர்த கிடங்கதனிற்
களிப்புடனிலங்கும்பஞ்சரத்துறைவனப் பசுங்கிளிபோல் (அவ)

(௨) தகைச்செழுங்கமல நன் முகத்தெழுவியர்வுமுத் தலங்க
வெனவேயொளி
தழைக்கக்கரும்பங்குர மெனத் தோளிணை வடிவு துலங்க
பாலை விம்ருபி
நகைக்குமுதவாய்திறந் தமுமொலி பொழிலுறை
நறை வண்டிசையையும் கோகிலத்தொனியையும்
நகைத்திடவந் (தவ)

(௩) மருச்செழு மலர்த்திரு மகளிவளாகுமெனப்பரிந்து
தேவர்களமி
வழங்கப்பலவியங்கண் முழங்கக் கற்பகமலர் சொரிந்து
துதிபுரிய
குருசந்திர யோகமுந்தெருட் சுக்கிர திசையும்
கூடப்பூதலங்கள் கொண் டாடக் கூடிய சுபதினத்தில் (அவ)

நமபிராஜன் வள்ளியம்மையைக் கண்டெடுத்துக் குலாவுதல்.

விருத்தம்

கனத்தவயி றுளைந்துபெற்ற பயக்கந் தீர்ந்து
கன்றெனமான் முகந்தெழுந்து நோக்கியே தன்
இனத்துருவ மல்லவென வெறுத்திட் டேக
யிரங்கிமத லையும்பசியால் வருந்துப் போது
இனைப்புனத்துக் காவனும்பற் படையுஞ் சூழத்
தேவியொடு மேனலைப்பார்த் திடும்போ தங்கு
வனத்திலிளங் குரல்கேட்டவ் வழிசென் றோர்தா
வையுங்கண்டான் பெட்கொடிப்பா வையுங்கண் டானே. (௨௰)

(௰௩) ... இராகம் - ... தாளம்.

(க) நம்பிராஜன் பெண்மகவினைக் கண்டான் - செழு
நகைமுகமலர்ந் தகமகிழ்ச்சியுங் கொண்டான்

(உ) கண்பிறவியந்த கனுக்குற்றது போலே - மிகக்
காதலித்திரு மாப்படைந் தொருக காலே.

(ங) அயபுவில்லையும் புவியில்விடுத்தெக களித்தான - பர
மானந்தப் பெருககான கடலில் குளித்தான்.

(ச) மலைத்தெய்வங்களைக கூவிப்பரவித் துதித்தான - கான்
மடித்துக்குரவை படித்திட்டெழுந்து குதித்தான

(ரு) வலக்கரத்தினு லெடுத்தணைத்துச்சி முகந்தான் - அண்டா
மணிவிளக்கிதென் றணிமுத்தங்களிட் டுகந்தான்

(சா) தனக்கன்புடைய மனைவி கையினிற் கொடுத்தான - முன்செய்
தவத்தினுலுற்ற தெனச சொலித்துதி தொடுத்தான்.

(எ) தாங்கியவளன் போடுதழுவிச் சேர்த்தாள - காப்பர்
தரித்துப் பெற்றிடும தகைபோலுடன் வேர்த்தாள்

(அ) கோங்குநேர் கொஙகை யிரண்டுமமுதஞ் சுரந்தாள் - செல்வி
குமுத வாய் பருகிடக் கொடுத்தின்பஞ்சிறந்தாள்

(கூ) தனித்திவவகைதன் மகட்கினியச் சீராட்டி - நற்குத்
தலைவியோடும்வெஞ் சிலையுந்தேர்ந்தா மிசைமாட்டி

(௰) இனைப்புனங்கடந் துவகையுற்றெழுந்துடனே - மன்னன்
சேனைசூழ்த்தன்னரண்மனை யடைந்தனனே

வள்ளியம்மை திருவடிக்கவகைகண்டு கிழக்குறத்தியாகள்
குறியிலக்கணங் கூறல.

விருத்தம்.

கானவன்சே யொடுமனைசாரு நுறவினரை வரவழைத்துக
கடவுட் குள்ளங்
கனிவுறப்பூ சனைநடத்தித் தகரொடுகுக் குடங்கள்பலி
களுமுன் னீந்து
சோனைமலை வேலவர்க்குஞ் சிறப்பியற்றிப் பலவியங்கள்
தொனிக்கக் கைபிற்
சடர்வடிவேல் பிடித்தெழுந்தா வேசமுற்றுக் குதித்தாடித்
தொழுது மப்பா

லாணபரி சனங்களுக்கும் விருந்தளித்திட் டாடைபணி
யளித்த பின்பங்
கறத்தலைகள் நரைத்தகிழக் குறத்தியர்கள் வணங்கிநங்கை
யருகிற் சென்று
மாநலஞ்சேர் மதலையச்செங் கரத்திலணைத் தேந்திமன
மகிழ்ச்சி யோடு
மருவுமிலக் கணங்களெலாம வகைவிவர மாய்விளங்க
விருத்திட் டாரே. (உக

(யகூ) தீபல்த இராகம் - மாஞ்சி—ரூபகதாளம்.

(க) நங்கையேயுன் றன் பெண்குணங் கேளாய் - சொல்லுங்குறியை
